www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 11 | செப்டம்பர் 2004 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்சி 72

# அமெரிக்க தலையீடு அதிகரிக்கிறது

## இராணுவத் தளத்திற்கு முயற்சி!



இலங்கை மீதான அமெரிக்காவின் ராணுவப் பிடியானது நாளுக்கு நாள் வலுவடைந்து வருவதைக் காண முடிகின்றது. யுத்தம் இடம் பெற்ற பத்தொன்பது ஆண்டுகளில் மட்டுமன்றி புரிந்துணர்வு- யுத்த நிறுத்தம் இடம் பெற்று வந்த கடந்த இரண்டரை வருடங்களிலும்



அமெரிக்க ராணுவ ஊடுருவல் அதிகரித்தே வந்துள்ளது.

அமெரிக்க மேலாதிக்கத்திற்கான இத்தகைய ராணுவ நடவடிக்கைகள் யாவும் இலங்கைக்கு உதவுவது என்ற பெயரிலேயே முன்னெடுக்கப் படுகின்றன. இவற்றுக்கு ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையிலான அரசாங்கமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சித்தலைமையிலான அரசாங்கமும் எவ்வித மறுப்பும் இன்றி வரவேற்பும் ஆதரவும் வழங்கி வந்துள்ளன. இத்தகைய அமெரிக்க ராணுவ நடவடிக்கைகளுக்கு பாராளுமன்ற தமிழ் முஸ்லீம் மலையக கட்சிகள் ஒரு வார்த்தைதானும் எதிர்ப்புத் தெரிவிக்க வில்லை என்பது தான் ஆழ்ந்து சிந்திக்க வைப்பதாகும். குறிப்பாக சிகப்பு வேடமணிந்து தம்மை இடதுசாரிகள் எனக் கூறும் ஜே.வி.பி. இன்றைய அரசாங்கத்தில் பங்காளியாகி நின்று அமெரிக்கா விற்கு சாமரை வீசுகிறது.

அண்மைய மாதங்களில் அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகளும் முஸ்தீபுகளும் முனைப்புப் பெற்றுள்ளன. இலங்கையிள் கடற்படைக்குப் பாரிய யுத்தக் கப்பலை அமெரிக்கா வழங்கி பயிற்சிக்கும் வழிவகுத்துள்ளது.

இலங்கையில் ஐ.நா.சமாதானப்படைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு தெற்கின் குக்குளே கங்கையில் அமெரிக்க உயர் ராணுவ அதிகாரிகளினால் பயிற்சி வழங்கப்படுகிறது.

கடந்த மாதம் ஆகிய பசிபிக் பிராந்தியத்திற்கான கட்டளைத் தளபதி இலங்கைக்கு வந்ததுடன் பலாலி ராணுவ முகாமில் படை உயர் அதிகாரிகளுடன் விரிவான மாநாடு நடத்தி உயர் பாதுகாப்பு வலைய முன்னரங்கப் பகுதிகளைப் பார்வையிட்டு பாதுகாப்பு ஆலோசனை வழங்கியதாகக் கூறப்படுகிறது. முன்னைய அரசாங்கம் பதவியேற்ற பின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா தனது அமெரிக்க விசுவாசச் சகாவான மிலிந்த மொர கொடவுடன் யாழ்ப் பாணம் சென்றி ருந்த வேளையிலும் அமெரிக்க

### பாராளுமன்ற அரசியல் தலைமைகள் எதிர்த்து வாய்திறக்க மறுப்பதேன்?

ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைத் தளபதி அங்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அவருடன் அமெரிக்க வெளிவிவகாரப் பிரதியமைச்சர் கிரிஸ்ரினா ரொக்காவும் சென்றிருந்தார். இப்போதும் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்தின் கீழ் இவர்கள் இருவரும் தனித்தனியாக இலங்கைக்கும் வடக்கிற்கும் சென்றிருப்பதன் பின்னணி என்ன?

ஏற்கனவே அமெரிக்க ராணுவ வைத்திய ஆலோசனைக் குழுவினர் வந்துள்ளனர். கண்ணிவெடிகள் அகற்றம் பணிக்கென ராணுவ அதிகாரிகள் நவீன ராணுவ உபகரணங்களுடன் வந்துள்ளனர். இப்போது கொழும்புத் துறைமுத்தில் அமெரிக்கா கதிரியக்க ரேடார் பரிசோதனைக் கருவிகளைப் பொருத்தி வைக்கும் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. வெடிப் பொருட்கள் ஆயுதங்கள் அணு ஆயுதப் பயன்பாட்டுப் பாகங்கள் போன்றவற்றை அவதானித்து

தொடர்ச்சி 12ம் பக்கம்..

# ஐ.தே.கட்சிக்கு வயது 58 சி.ல.சு.கட்சிக்கு வயது 53

## நாட்டிற்கும் மக்களுக்கும் கிழித்தது என்ன?

ஐக்கிய தேசியக் கட்சி தனது 58வது ஆண்டு நிறைவு விழாவை கொழும்பில் தனது தலைமையகமான சிறிகோத்தாவில் கொண்டாடியது. அதன் ஸ்தாபகத்தலைவர் டி.எஸ். சேனநாயக்காவினதும் அதன் பின்னான அக் கட்சியின் தலைவர்களினதும் படங்கள் பொறித்த போஸ்டர்களை ஒட்டி ரணிலின் தலைமையில் கட்சியை வீறுநடை போட வைக்குமாறு கேட்கப் பட்டிருக்கிறது.

அதேவேளை சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது 53வது ஆண்டு விழாவை தென் மாகாணத் தலைநகரான காலியில் பெருவிழாவாகக் கொண்டாடி நாட்டிற்கும் மக்களுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆற்றிவந்த சேவைகளை அரச சார்பு ஊடகங்கள் மூலம் பறைசாற்றிக் கொண்டது. அதன் ஸ்தாபகர் எஸ்.டபிள்யூ ஆர்-டி.பண்டாரநாயக்காவும் அவருக்குப் பின் மனைவி அதன் பின் மகள் ஆகியோரின் தலைமைத்துவங்கள் பற்றிப் போற்றிப் புகழப்பட்டன.

நாம் இங்கே எழுப்ப வேண்டியுள்ள மிக முக்கிய கேள்வி இந்த இரண்டு பச்சை நீலநிறங்களைக் கொண்ட ஆளும் வர்க்க கட்சிகளின் மாறி மாறி வந்த 57வருட பாரளுமன்ற ஆட்சி அதிகாரத்தின் கீழ் இந்த நாடும் மக்களும் பெற்றுக் கொண்ட பாலாபலன்களும் விமோசனங்களும் எவை என்பதேயாகும்.

ஆண்டபரம்பரையில் வந்த இந்தக் கட்சிகளின் தலைமைத்துவங்களால் இந்நாட்டின் தொண்ணூறு வீதமான உழைக்கும் மக்களின் தேவைகளை, அபிலாசைகளை, அனுபவித்து

தொடர்ச்சி 12ம் பக்கம்..



# ஆறுமுகன்-ஐ.ம.சு.மு. மறுமணம் பதவி-வெகுமதிகள் தாராளம்

இ.தொ.கா. பாராளுமன்றத்தினுள் ஐ.ம.சு.முன்னணிக்கு ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ளது. 'இ.தொ.கா, ஐ.ம.சு.முன்னணி அரசாங்கத்துடன் காதல் திருமணம் செய்து கொண்டதால் இ.தொ.கா விற்கு ஐ.ம.சு.மு அரசாங்கம் சீதனமெதையும் வழங்கவில்லை' என்று இ.தொ.கா தலைவர் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் கூறியுள்ளார். இது காதல் திருமணம் அல்ல மறுமணமே என்பது ஒருபுறமிருக்க இதற்கு திரைமறைவில் எவ்வளவு ரொக்கம் சீதனமாக கொடுக்கப்பட்டதோ தெரியவில்லை. எதிர்வரும் காலத்தில் டொனேசன் என்ற பெயரில் எத்தனை முழு அமைச்சர்கள், அரை அமைச்சர்கள், பகிரங்க கூட்டுத்தாபன இயக்குநர்கள் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் பல வெகுமதிகள் கொடுக்கப் படவுள்ளன என்பதை தெரிந்து கொள்ள முடியும்?

மேல்கொத்மலை திட்டத்தை எப்படியும் நடைமுறைப்படுத்த கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் அதே வேளை கூட்டு ஒப்பந்தத்திலும் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்விலும் தலையிட விரும் பாத ம.ஐ.சு.மு அரசாங்கத் துடன் எந்த அடிப்படையில் இ.தொ.கா ஆதரவு கொடுத்து நிற்க முன் வந்தது?

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்திற்கு பலம் தேவை என்பதாலேயே இ.தொ.கா அரசாங்கத்துடன் இனைந்து கொள்வதாக மிகவும் வசதியான புதிய காரணத்தை ஆறுமுகன் தெரிவித்துள்ளார். மலையகத்தின் தலைவர் என்பதால் மலையகம் பற்றியே தனக்கு அக்கறை இருப்பதாக முன்பு கூறிவந்த ஆறுமுகன் தற்போது வடக்கு கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்காகவே அரசாங்கத் துடன் இணைவதாக தெரிவித் துள்ளார்.

பட்டம், பதவிகள், வசதிகள், பவுசுகள், சொகுசுகளுக்காக அரசாங்கத் துடன் இணைந்து கொள்பவர்களுக்கு மேல்கொத்மலை திட்டத்தை நடைமுறைப் படுத்தினால் தான் என்ன? தோட்டத்தொழிலாளிகளுக்கு சம்பளஉயர்வு கொடுக்கா விட்டால்தான் என்ன? அமைச்சர் பதவிகளும் அதனுடன் கூடிய அதிகார சுகபோகங்களும் அடியாட்கள் முதலான பரிவாரங் களும் சில மாதங்கள் இல்லாதிருந்த அவஸ்தையைப் போக்க ஆறுமுகன் தலைமையிலான இ.தொ.கா பன்முக நிறுவனம் அரசாங்கத்தில் சேரும் தீர்மானத்தை எடுத்துள்ளது. இந்த தீர்மானத்தின் பின்னால் பல்லாயிரம், லட்சங்கள் மட்டும் மன்றி கோடிக்கணக்கிலும் பணப்புழக்கங்கள் இடம் பெறுவதையே காண முடியும். இதற்காக யாரோடும் எத்தனை திருமணங்களையும் மாறிமாறி இ.தொ.கா வால் செய்ய முடியும் என்பதை அண்மைய முடிவு காட்டி நிற்கிறது. இது ஐயா காலத்தின் தொடர்ச்சிதான். இவற்றை எல்லாம் புரிந்து கொள்ளாது ஆமாம் சாமி போடும் நிலையில் மலைய மக்கள் இருக்கப் போவதில்லை என்பது மட்டும் உண்மையாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா வளாகத்தில் தொடரும் முறுகல் நிலை

வவுனியா வளாக கல்விசாரா உத்தியோகத்தர்களுக்கு குறிப்பாக நிருவாகப் பிரிவிற்கென நிரந்தர கட்டிடமொன்றில்லை. வவுனியா பூங்கா வீதியில் நிருவாகப் பிரிவிற் கென கட்டப்பட்ட, கட்டிடத் தொகுதியில் ஒரேயொரு நாள் மட்டும் நிர்வாக வேலைகள் நடை பெற்றாலும் அக்கடிடம் நிர்வாகப் பிரிவிடமிருந்து மீளப்பெறப்பட்டது. அதனால் நிர்வாகப்பரிவினர் மீண்டும் வாடகை கட்டிடத்திற்கு மாற்றப்பட் டுள்ளனர். இதனால் வவுனியா வளாக ஊழியர் சங்கத்தினருக்கும் மாணவர்களுக்குமிடையே முறுகல் நிலை தொடர்கிறது.

நீண்டகாலமாக திட்டமிடப்பட்டு நிர்வாகப் பிரிவிற்கான வவுனியா பூங்காவீதியில் கட்டப்பட்டு நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்ட கட்டிடம் மாணவர்களின் போராட்டம் காரண மாக மீளப் பெறப்பட்டுள்ளது. உப வேந்தரையும், வளாக முதல்வரையும் மாணவர்கள் 14 மணிநேரம் தடுத்து வைத்து கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே அக்கட்டிடம் நிர்வாகப்பிரிவினரிடமிருந்து மீளப் பெறப்பட்டு கல்விசார் நடவடிக்கை களுக்காக கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியா வளாக ஊழியர் சங்கமும் நிர்வாக உத்தியோகத்தர்களும் வேலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அதனை எதிர்த்து மாணவர்கள் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட் டுள்ளனர். அதற்கு பதிலளித்து வளாக ஊழியர் சங்கமும் துண்டுப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

இதேவேளை வவுனியா வளாகத் தில் மாணவர்கள் கல்வி கற்பதற்கு தேவையான கட்டிட வசதிகளும் பூரணப்படுத்தப்படவில்லை. அதனால் மாணவர்களுக்கும் கட்டிடங்கள் தேவைப்படுகின்றன என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

கட்டிடங்களை பெற்றுக் கொள்வதற் கான வழிமுறைகளை தேர்ந் தெடுத்து செயற்படுவதை விடுத்து மாணவர்களும், நிர்வாகப் பிரிவினரும் சண்டையிட்டுக் கொள்வதில் எவ்வித பிரயோசனமும் இல்லை பொதுவாக பல்கலைக்கழகங்களில் மாணவர்களுக்கும் நிர்வாகப் பிரிவினருக்கும் ஒரு இடைவெளி இருப்பதை அவதானிக்க முடியும்.

அவ்விடைவெளி பகை முரண் பாடாக மாற்றப்படுவது வளாக முன்னேற்றத்திற்கு பாரிய தடையாக அமைந்து விடும்.

நிரந்தர கட்டிடங்களையும், வசதி களையும் கொண்டதாக வவுனியா வளாகம் வளர்ச்சியடைந்து தனிப்பல் கலைக்கழகமாக உயர வேண்டும். அதற்கு வளாக சபையும், யாழ்ப்பாண பல்கலைக்கழக சபையும் புரிந்துணர் வுடன் செயற்பட வேண்டும். அரசியல் தலைவர்களின் தலையீட்டி னாலும் அழுத்தங்களினாலும் வவுனியா வளாகத்தை பூரண வசதியுடையதாக மாற்ற முடியும் என்பதை மறந்து விடலாகாது.

நிர்வாகப்பிரிவு மட்டும் பூரணமாக இருப்பதாலோ கல்விப்பிரிவு மட்டும் பூரணமாக இருப்பதாலோ வளாகம் பூரணவசதி கொண்டதாக இருக் காது இரண்டு பிரிவும் பூரணப்படுத்தப் பட வேண்டும்.

மாணவர்களுக்கும் நிர்வாகப் பிரிவினருக்குமிடையேயான முரண் பாட்டினால் வளாகம் மூடப்படுவதோ, கல்வி பாதிக்கப்படுவதோ ஆரோக்கியமானதல்ல.

வவுனியா - கி.சாம்பசிவமூர்த்தி

# உன்னையல்லால் வேறே கதி!

தமிழர் மானம், மறம் என்றெல்லாம் முழங்கித் தமிழ்த்தேசியம் வளர்த்த பரம்பரையில் வந்தவர் ஈழவேந்தன் எனப்படும் கனகேந்திரன் பா.உ. சிங்களப் பேரினவாதத்துடன் சமரசம் செய்த காரணத்துக்காக முன்பு தமிழரசுக்கட்சித் தலைமையை நிராகரித்த பெருமையும் அவருடையது.

தமிழகத்தில் இந்திய மேலாதிக்க வாதிகள் வேண்டாத விருந்தாளி என்று கருதியதால் இலங்கை மீண்டவர். முன் சொன்ன தகுதிகட் காகவே அவர் விடுதலைப் புலிகளின் பரிந்துரை மூலம் பாராளுமன்றப் படியேற முடிந்தது.

கங்கை நீராடினாலும் சிறிலங்காப் பாராளுமன்றப் படியேறினாலும் 'பாரதமாத' மன்னிக்க மாட்டாத மாபாவங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று இந்திய மண்ணில் அதியாக வோ அகதியாகவோ வாழ்ந்து கொண்டு அதன் எதிரிகளுக்குப் பரிந்து பேசுவதாகும் ஈழவேந்தன் தான் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் தடையின்றி இந்தியாவுக் குப் போகலாம் என்று நினைத்தது அறியாமை. அதைவிடவும் அவரை விடக் குறையப் பாவஞ் செய்த ஆனானப்பட்ட பேராசிரியர்களை எல்லாம் திருப்பி அனுப்பிய இந்திய எசமானர்கள் அவருடைய பாராளு மன்ற உறுப்பினர் பதவிக்கு முன்பு பணிந்து போவார்கள் என்று நினைத்தது அதிலும் பெரிய அறியாமை. "போனமச்சான் திரும்பி வந்தானடி பூமணத்தோடே" என்கிற மாதிரி விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத விதமாக ஈழவேந்தன் மழுப்புவது மற்றவர்களை முட்டாள் களாக எண்ணும் அறியாமை.

அவரை இந்தியாவுக்குள் அனும திக்க மறுத்தது இந்திய ஆட்சியாளர் களல்ல சில அதிகாரிகளே என்று அவர் சமாதானம் சொல்லுவ தெல்லாம் தனது குடும்பத்தினர் தொடர்ந்தும் இந்தியாவில் வாழ்வ தால் வீணாக இந்தியாவை மேலும் பகைக்க விரும்பாததாலோ என்று தெரியாது. எனினும் அவரது நிலைமைக்கும் த.வி.கூ பிரமுகர்கள் பலரது நிலைமைக்கும் அதிக வேறுபாடில்லை. அவரது நடத்தை நமக்கு வியப்பளிக்கவில்லை.

என்றாலும் அவருடைய விளக்கத் துக்கும் மேலாக இந்தியா இலங்கைத் தமிழருக்குத் தீங்கிழைக் காது என்று அவர் நற்சான்று வழங்க வேண்டிய தேவையென்ன? அமெரிக்காவையோ இந்தியாவை யோ விமர்சிக்க விரும்பாத ஈழவேந்தன் போன்றவர்கள் தமது சுய லாபத்துக்காகத் தமிழ் மக்களை ஏமாற்றுகிறார்கள் என்பது வருந்தத் தக்க உண்மை.

ஈழவேந்தன் மறக்கக் கூடாத ஒரு உண்மை ஏதெனில் இந்தியாவில் உண்மையான ஆட்சியாளர்களின் அனுமதியில்லாமல் எந்த அதிகாரியும் அவரை நாட்டுக்குள் புகாது மறித் திருக்க இயலாது. அரசு என்றால் என்ன என்று அவர் இப்போதாவது அறிந்திருப்பார்.

அறியாமல் இந்திய ஆட்சியாளர்கள் மீது களங்கமில்லை என்கிறாரா, அறிந்து செய்கிறாரா தெரியவில்லை, எப்படிப் பார்த்தாலும் இது தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவர் செய்யத் தகாதது.

# அட்டன் நகரில் சிறப்புற நடந்த புதிய-ஜனநாயக கட்சியின் ஆண்டுவிழா!

கடந்த ஆகஸ்ட் 15ம் திகதி அட்டன் நகர சபை மண்டபமும் சுற்றுப்புறங் களும் சிவப்பு கொடிகளாலும் சிவப்பு வர்ண தோரணங்களாலும் அலங் கரிக்கப்பட்டு ஒலிபெருக்கியில் புரட்சி கரப் பாடல்கள் இசைக்கப்பட்டன. இடையிடையே யுத்த நிறுத்தம் தொடரப்படவேண்டும், சமாதானப் பேச்சுவார்த்தை தொடங்கப்பட வேண்டும், அனைத்துத் தொழில ளார்களுக்கும் விவசாயிகளுககும் அடிப்படை உரிமைகள் உத்தரவாதப் படுத்தப்பட வேண்டும், கூட்டு ஒப்பந்த முறை ரத்து செய்யப்பட்டு தோட்டத் தொழிலளார்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் என்பன ஒலி பெருக்கியில் அழுத்திக் கூறப் பட்டுக் கொண்டிருந்தது. தமிழில் மட்டுமன்றி சிங்களத்தலும் கூறப்பட்டது.

மலையகத்தில் கந்தப்பொளை வன் முறைச்சம்பவம், சிறிபாதக் கல்லூரி மாணவர்கள் பொலீஸ் காட்டு மிரண்டித்தனத்தால் தாக்கப்பட்டமை, மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான இயக்கம் , மாகாணசபைத் தேர்தல் முடிவு போன்றவற்றுக் குப்பின் புதிய- ஜனநாயக கட்சியின் 26வது ஆண்டு விழா அட்டன் நகரசபை மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

காலை 10 மணியளவில் ஆரம்பித்த இவ்விழா பி.ப.4 மணிவரை புரட்சிகர உற்சாகத்துடன் இடம் பெற்றது. கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர் கள் இளைஞர்கள் யுவதிகள் தொழிலளார்களால் மண்டபம் நிரம்பி வழிந்தது காணப்பட்டது. ஐந்நூறுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட இவ்விழாவிற்கு மலையகம் கொழும்பு யாழ்ப்பாணத்திலிருந்து கலந்து கொண்டோர்.

கட்சியின் மேற்படி ஆண்டுவிழாவின் உரையை தேசிய அமைப்பாளர் இ.தம்பையா நிகழ்த்தினார். வாகன விபத்தின் காரணமாக சமூகம் தர முடியாதிருந்த பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேலின் ஆண்டு விழா உரை எழுத்தில் வாசிக்கப்பட்டது. ஆரம்ப உரையை கட்சியின் மலை யகச் செயலளார் சி .பன்னீர்செல்வம் நிகழ்த்தினார். கருத்துரைகளை கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் சோ.தேவராஜா, எஸ்.இராஜேந்திரன் ஆகியேரும் வழங்கினர். தோழர்கள் வெ.மகேந்திரன், ச.சுகேசன், பெ.சந்திரகுமார் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர்.

மேற்படி 26வது ஆண்டு விழாவில் வெளிநாட்டு சகோதரக் கட்சிகளின் வாழ்த்துச் செய்திகள் வாசிக்கப் பட்டன. இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர். தோழர்கள் வாசுதேவ நாணயக்காரா, எம்.ஆர். சோமரட்ண, பற்றிக் பெர்ணாண்டோ, ஆர்.விமலரட்ண ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

விழா ஆரம்பமாவதற்குமுன்பு செம்மலர்கள் வீதி நாடகக் குழுவின் 'செந்தூதர்' என்னும் வீதி நாடகம் இடம் பெற்றது. விழாவில் "moutain mozarts" இசைக் குழுவினரின் இசை வழங்கலில் புரட்சிகரப் பாடல்கள் பாடப்பட்டன. விழாவின் நிகழ்ச்சிகளைத் தோழர் வரதராஜ் தொகுத்து வழங்கினார்.

# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## எய்தவன் இருக்க.......

யூலை பிற்பகுதியில் பெற்றோல் விலை கூடியவுடன், இதற்கு மேல் விலைகள் கூட்டப்படாது என்ற விதமாகப் பேசிய நிதி அமைச்சர் சரத் அமுனுகம இன்னமும் விலை ஏற்றங்கள் ஏற்படும் என்று ஓகஸ்ற் முற்பகுதியில் அறிவித்தார். அமைச்சரது பேச்சுத் தொனியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை நம்பவே கடினமாக இருந்தது.

எதிர்க்கட்சியிலிருந்த போது அவரது திமிர்த்தனமான பேச்சு ஆட்சிக்கு வந்தபிறகு படு அட்டகாசமாக இருந்தது. இப்போது திடீரென்று இந்தப் புலி பூனைபோல அடங்கி விட்டது. இது ஏன்?

அமுனுகம நிதி அமைச்சரானாலும் முடிவுகளை எடுப்பது அவரல்ல, சனாதிபதியே என்று சிலர் சொல்கிறார்கள். உண்மையில் சனாதிபதியுமல்ல. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமுமல்லவா! என்று வாக்காளர்களுக்கு மெல்ல மெல்லத்தான் விளங்கும்.

## இல்லாத தகைமைகள்

நீண்ட காலச் சேவைக்குப் பின் ஓய்வு பெறும் பேராசிரியர்களைப் பேராசிரியர் என்ற பட்டத்தைப் பாவிக்க அனுமதிப்பது பல்கலைக்கழக மரபு. அவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களை எருமரிற்றஸ் புறொபெசர் என்பார்கள். எருமரிற்றஸ் என்றால் ஓய்வு நிலை என்று தான் பொருள். அதற்கு மேலாக அதற்கு ஒரு பெரிய தகைமையுமில்லை. எனினும் நமது தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் தன்னை ஓய்வு நிலைப் பேராசிரியர் என்னாமல் "தகைமை சார் " என்று அழைத்துக் கொள்கிறார். இல்லாத தகைமைகளை தங்களுக்கே சூட்டிக் கொள்கின்ற அளவுக்குத் தரந் தாழ்ந்து போவது, தமிழ்ச் சமூகத்துக்கு உரிய ஒரு நோய் போலத் தெரிகிறது. பேராசிரியர்கள் மட்டும் விதி விலக்கா?

## சாயம் வெளுக்கும் பரிசுகேடுகள்

வெங்கட் சாமிநாதன் என்கிற வெற்று வேட்டுப் பேர்வழியை கனடா ற்றொரான்ற்றோ பல்கலைக்கழகத்தின் பேரில் இயங்குகிற ஒரு அமைப்பு விருது வழங்கிக் கவுரவித்ததைப் பற்றியும் அதன் பின்னணி பற்றியும் இரண்டு மாதங்கள் முன்பு எழுதியிருந்தோம். அதை மெச்சிக் காலச்சுவட்டில் ஒரு குறிப்பு வந்திருந்தது பற்றியும் குறிப்பிட்டிருந்தோம். காலச் சுவட்டின் ஆலோசகர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள பேராசிரியர் நுஃமான் காலச் சுவட்டில் இந்தக் கவுரவிப்பை வன்மையாகக் கண்டித்துள்ளார். இந்த விருதுக்குப் பின்னாலுள்ள அரசியலைப் பற்றிச் சாடையாக அவர் குறிப்பிட்டுள்ளார். காலம் என்ற மாக்ஸிய விரோத கனடா நாட்டுச் சஞ்சிகை ஆசிரியர் செல்வம், சேரன் போன்றவர்களுக்கு இவ்விடயத்தில் உள்ள பங்கை அவர் இன்னும் தெளிவாக்கியிருக்கலாம்.

## ஐலன்டின் பயங்கரவாதம்

யூலை நடுப்பகுதியில் ஐலன்ட் ஏடு கஜேந்திரனையும் கஜேந்திர குமாரையும் குழப்பியடித்து ஒரு நீண்ட தலையங்கம் தீட்டியிருந்தது. கஜேந்திரன் ஆற்றிய உரை ராணுவத்துக்கு மிரட்டல் என்பதே ஐலன்ட் ஏட்டின் கோபத்தின் காரணம். தலையங்கத்தின் முடிவில் ராணி வீதிப் பயங்கரவாதி என்று கஜேந்திரகுமார் வாழும் வீட்டைக் குறித்து அவர் மீது நிந்தனைச் சொற்கள் பொழியப்பட்டன.

அதன் பின்பு, உண்மை அறிந்த நிலையிற் கூட, ஐலன்ட் தனது பிழையை ஏற்றுக் கொள்ளவில்லை. கஜேந்திர குமாரை ராணி வீதிப் பயங்கரவாதி என்று மீண்டும் ஒரு முறை எழுதியது.

ஐலன்ட் இப்படி நடப்பது புதிதல்ல. ஆனால் தமிழ்க் காங்கிரஸ் தரப்பில் ஐலன்ட் ஏட்டைக் கண்டித்து ஏன் ஒரு கண்டனமும் வெளியிடப்படவில்லை.

## சீரழிந்த சி.பி. எம்

இந்திய மாக்ஸிட் கம்யூனிஸ்ற் கட்சிப் பிரமுகர் சீதாரம் யெச்சூரி இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் ஐக்கிய இலங்கைக்கு உட்பட்ட ஒரு தீர்வையே இந்திய இடதுசாரிகள் அனைவரும் ஆதரிப்பதாகக் கூறியதைப் பேரினவாத ஏடுகள் மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருந்தன. தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்க மறுப்பதில் 'மாக்ஸிட்' கட்சி (சி.பி.எம்) பழைய திரிபுவாதிக் கட்சியான இந்திய கம்யூனிஸ்ற் கட்சியை மிஞ்சி நிற்கிறது. அதன் பார்ப்பனிய 'இந்து' நிறுவன முக்கியஸ்தர் ராம் தமிழின விடுதலைக்கு எதிராகப் பேசுவோரில் முதன்மையான ஒருவர். சி.பி.எம் மிகவும் சீரழிந்ததற்கு ராம் போன்ற இந்திய மேலாதிக்க வாதிகள் முக்கிய காரணமாவார் 'அதே வேளை, மாக்ஸிய லெனினிய கம்யூனிஸ்ற் கட்சிகள் யாவும் தம்மிடையே உள்ள பல வேறுபாடுகளின் நடுவிலும் இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்கிறார்கள். அவர்கள் சார்பாகப் பேச, ஐக்கியம் என்றால் சுயநிர்ணய உரிமையின் மறுப்பு என்று கருதுகிற ஒரு கட்சியின் பிரமுகருக்கு என்ன உரிமை உண்டு?

## படம் : பாவமன்னிப்பு பாடல் : மனிதன் மாறிவிட்டான்

"அகவிழி" எனும் கல்வித்துறை சார்ந்தவர்கட்கான ஏட்டின் முதல் இதழில் பேராசிரியர் சிவத்தம்பி "1960களில் நிலவிய அறிவியல் பூர்வமற்ற சமதர்மக் கோஷங்கள் பல இன்னல்களுக்கு இந்த நாட்டை ஆட்படுத்தின. அந்த வகையில் முக்கியமானவையாக எடுத்துக் கூறத் தக்களவு பஸ்சேவை தேசியமயமாக்கப்பட்டமை, தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டமை, முக்கிய மாக பாடசாலைகள் தேசிய மயமாக்கப்பட்டவை" என்று எழுதியுள்ளார்.

பஸ்சேவை 1957ல் தேசியமயமானது. 1957க்குப் பின்பு பஸ்சேவையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. குடா நாட்டில் சிறி எதிர்ப்புக் காரணமாக நீண்ட காலமாக புதிய பஸ்கள் சேவையிற் பயன்படாமைக்கு "அறிவியல் பூர்வமற்ற" சமதர்மக் கோஷங்களைவிட சமஷ்டிக் கட்சிக் கோஷங்களே காரணம்.

தோட்டங்களின் தேசியமயம் சோஷலிசம் சார்ந்த நடவடிக்கையல்ல என்பது பற்றி அறியாமல் தான் பேராசிரியர் பேசுகிறாரா? பாடசாலைகள் தேசியமய மாகாதிருந்தால் இன்று தாழ்த்தப்பட்ட சமூகப்பிரிவினரிடையே கல்வியறி வின்மை இன்னமும் பழைய நிலையிலேயே தொடர்ந்திருக்கும் பாடசாலை களின் தேசியமயம் என்பது பாடசாலைகளைப் பறித்தெடுக்கிற ஒரு காரியமாக நடக்கவில்லை. மாறாக அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே நடந்தது.

இடதுசாரிகட்காகப் பேராசிரியர் சிவத்தம்பி மன்னிப்புக் கேட்காத விடயமே மிஞ்சாது போலத் தெரிகிறது. வெகு விரைவில் மாக்ஸ் பிறந்ததற்காகவும் மன்னிப்புக் கேட்டுத் தன்னுடைய பிற்போக்குவாத எதிரிகளாயிருந்தவர் களுடைய பூரண மன்னிப்பைப் பெற்று முத்தி எய்துவாராக!

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# பாராளுமன்ற ஜனநாயகம் மக்களுக்குரியதல்ல!

## அதிகாரப் போட்டி அமளிதுமளி பழிவாங்கல் தொடர்கிறது

பாராளுமன்ற ஜனநாயகம் என்பது மக்களுக்குரிய ஒன்றல்ல என்பதை அண்மைய பாராளுமன்ற நடவடிக்கைகள் எடுத்துக் காட்டி வருகின்றன. சில காலத்திற்கு முன்பு பாராளுமன்றத் தேர்தல் வந்தால் தெரிவு செய்யப்படும் ஆளும் வர்க்க கட்சியின் அதிகாரம் ஐந்து வருடங்கள் நடைபெறும். எதிர்க் கட்சியில் உள்ள அடுத்த ஆளும் வர்க்க கட்சி பொறுமையுடன் இருந்து அடுத்த தேர்தலில் வெற்றி பெறக் காத்து நிற்கும்.

ஆனால் இப்போது அப்படியெல்லாம் இல்லை. தேர்தல் முடிந்து ஆட்சி அமைந்த உடனேயே அதனை இழுத்து விழுத்த எதிர்க்கட்சிகள் கங்கணம் கட்டி நிற்பதைக் காணலாம். அதன் காரணமாக பாராளுமன்றம் கூடும் போதெல்லாம் அமளிதுமளி தொடங்கப்பட்டு அவலட்சண வார்த்தைகள் கக்கப்பட்டு அடிபிடியில் சென்று முடிவதைக் காணலாம். பாராளுமன்றத்தின் நடுப்பகுதிக்கு ஆவேசம் கொண்டு அரசாங்கத்தரப்பினரும் எதிர்த் தரப்பினரும் மல்யுத்த மேடைக்குச் செல்வது போல் செல்வதைக் காண முடிகிறது. இதனைப் பார்த்த பழையவர்கள் "முன்பு படித்தவர்கள் பண்பானவர்கள், பெரியகுடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பாராளுமன்றத்திற்குச் சென்றார்கள். இப்போது கண்ட நின்றவர்கள் எல்லாம் அங்கு போனால் உப்பிடித்தானே நடக்கும்" என்று கூறும் அளவுக்கு தற்போதைய பாராளுமன்ற செயற்பாடுகள் காணப்படுகின்றன.

இவ்வாறு பாராளுமன்ற நடவடிக்கைகள் போனமைக்கு மேலே கூறப்பட்டவை உண்மைக் காரணம் அல்ல. உண்மை யாதெனில் பாராளுமன்றத்தால் நாட்டின் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்பது தான். வசதிவாய்ப்புப் பெற்ற சொத்துடமை வர்க்கத்தினர் தமது நலன்கள் தேவைகளைப் பாதுகாப்பதற்காக ஆட்சி அதிகாரத்தைப் பிடிப்பதில் போட்டி போடுகிறார்களே தவிர சாதாரண மக்களின் விடிவிற்காகவல்ல. இதனாலேயே இரண்டு தரப்பு ஆளும் வர்க்க கட்சிகளும் அதிகாரத்திற்கு போட்டியிடுவதும், இழுபறிப்படுவதும், பழிவாங்கல்களில் ஈடுபடுவதுமாக உள்ளனர். அதனால் பாராளுமன்றத்திற்குள் நாறு நாறு என வாயாலும் கையாலும் நாறுகிறார்கள். வெளியே ஊழல் மோசடி என்று கூறி நீதிமன்றம் - விளக்கமறியல் என மாறிமாறிப் பழிவாங்கல்களில் ஈடுபடுகிறார்கள். இது இங்கு மட்டுமன்றி உலகத்திற்கே ஜனநாயக ஒளி காட்டுவதாகப் பம்மாத்து காட்டும் இந்தியாவிலும் இப்பாராளுமன்ற ஜனநாயகம் கேடுகெட்டுக் காணப்படுகிறது. பாராளுமன்ற ஜனநாயகம் முதலாளித்துவ சர்வாதிகாரத்தை மறைப்பதற்கு போடப்பட்ட போலி வர்ணத்திரை என்ற உண்மை இன்று அம்பலமாகி வருவதையே அண்மைய காலங்களில் காணமுடிகிறது.

# வாக்களிப்பிற்கு தேசிய அடையாள அட்டை

## மோசடியை தடுக்கும் ஒரு வழி

தேர்தல்களில் ஆள்மாறாட்டத்தையும் கள்ளவாக்களிப்பையும் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதில் ஒன்றாக வாக்காளர்கள் வாக்களிக்கும் போது தேசிய அடையாள அட்டைகளை காண்பிக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்க வேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இதற்கு பல அரசியல் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். எல்லா வாக்காளர்களிடமும் தேசிய அடையாள அட்டை இல்லை என்பதால் எதிர்ப்பதாக கூறுகின்றனர். குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களில் அனேகருக்கு தேசிய அடையாள அட்டை வழங்கப்படவில்லை என்பதால் வாக்களிப்பிற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கக் கூடாது என்கின்றனர்.

இப்படி கூறுவதால் அவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் மீது அனுதாபம் கொண்டவர்கள் என்று நம்பிவிட தேவை இல்லை. அவர்கள் இனரீதியாக தாக்கப்படும் போதும் தோட்டக்கம்பெனிகளின் அடக்கு முறைகளுக்கு உட்படுத்தப்படும் போதும் இல்லாத அக்கறை அவர்களின் வாக்குரிமையில் இருப்பதற்கு காரணம் தோட்டத் தொழிலாளர்களுக்கு அடையாள அட்டை இல்லாமல் இருப்பது பிச்சைக்காரனின் புண்போன்று இருக்க வேண்டும் என்பது தான். அடையாள அட்டை இல்லாமல் ஆள் மாறாட்டம் கள்ளவாக்கு வேட்டை என்பவற்றை தொடர்ச்சியாக செய்வோரின் விருப்பமாகும்.

இறுதியாக கொண்டுவரப்பட்ட பிரஜா உரிமை திருத்தச் சட்டத்திற்குப் பிறகு இலங்கை சட்டரீதியாக நாடற்றவர்கள் எவரும் இல்லை. இந்நிலையில் ஆள்பதிவு திணைக்களம் எவ்வித தாக்கமும் இன்றி தோட்டத் தொழிலாளர்களும் ஏனைய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கும் அடையாள அட்டைகளை வழங்க முடியும்.

விண்ணப்பங்கள் செய்யப்பட்டால் வெகுவிரைவாக தேசிய அடையாள அட்டைகளை வழங்கி முடிக்க முடியுமென்று ஆள்பதிவு திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். எனவே அனைவருக்கும் அடையாள அட்டைகளை வழங்குவதில் எவ்வித பிரச்சினைகளும் இருக்கப் போவதில்லை.

எனவே வாக்களிப்பிற்கு தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குவதில் எவருடைய உரிமையும் பாதிக்கப்படப் போவதில்லை. கள்ள வாக்கு வேட்டையிலும், ஆள் மாறாட்டத் திலும் ஈடுபடுபவர்களின் மோசடிகளுக்கு இடமில்லாது போகும்.

முதலாளித்துவ தேர்தல் என்பது ஒரு பம்மாத்துதான். அதில் இடம் பெறும் மோசடிகளுக்கு எதிராக போராடுவது என்பது அப்பம்மாத்தை நீடிக்க விடாமல் தடுப்பதாகும் என்பதால் அடையாள அட்டையை கட்டாயமாக்க வேண்டும். அதற்காக அனைவருக்கும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் அடையாள அட்டைகளை வழங்கி முடிக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குவது மட்டுமல்ல, வாக்காளர் பதிவுகளில் இடம்பெறும் மோசடிகளும் நிறுத்தப்பட வேண்டும். வாக்களிப்பு முறையிலும் கூட 'எலக்ரோனிக்' கருவிகளை பாவிக்கும் முறையும் அறிமுகப் படுத்தப்பட வேண்டும்.

எனவே தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குவதை தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களோ, மலையகத் தலைவர்களோ எதிர்க்க வேண்டிய அவசியமில்லை.

# வயிற்றைக் கழுவவும் ஓடவேண்டுமாம்

வயிற்றுப் பாட்டிற்காக ஓடுங்கள்! ஓடிக்கொண்டே இருங்கள். ஓடமுடியாத நிலையில் வாய்ப்புக்கள் இல்லையென்று குறை கூறாதீர்கள் இது தான் உலகமயமாதலின் கீழ் உச்சரிக்கப்படும் புதிய பொருளாதார வாய்ப்பாடு.

சிங்கம் காலை எழுந்தவுடன் உணவு தேடி ஓடத் தொடங்குகிறது மான் சிங்கத்திடமிருந்து தப்புவதற்காக ஓடுகிறது. அவையே அவற்றின் வாழ்விற்காக ஓடும்போது மனிதனால் மட்டும் ஏன் ஓடமுடியாது ஓடுவது தான் வாழ்க்கை. ஓட வேண்டும் அப்போது தான் முன்னேற்றத்தை காணமுடியும் இவ்வாறு தொலைக்காட்சி பேட்டியொன்றில் பொருளியல் எழுத்தாளர் ஒருவர் தெரிவித்தார்.

புதிய பொருளாதார நடைமுறைகள் என்ற நூலை எழுதியுள்ள சுங்க அதிகாரியான சித்திரஞ்சன் என்பவரே அவ்வாறு தெரிவித்தார்.

சிங்கப்பூர் முன்னேற்றமடைந்ததற்கு சிங்கப்பூர் மக்கள் 'ஓடியதே' காரணம். இலங்கை மக்கள் ஓடத் தயாரில்லாத படியால் இலங்கை முன்னேற்றமடையவில்லை என்றும் அவர் தெரிவித்தார் சிங்கப்பூரின் அபிவிருத்தி என்ன என்பதும் அது எப்படி அந்நிலையை அடைந்தது என்பது தொடர்ந்தும் மறைக்கப்பட்டே வருகிறது. சோஷலிஸ நாடுகளுக்கு எதிராக திட்டமிட்ட ரீதியில் வளர்க்கப்பட்டதே சிங்கப்பூர் ஆகும். இப்போது சிங்கப்பூர் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவருகின்ற சரிவு பற்றி எவரும் கதைப்பதில்லை.

சுரண்டுவதற்கும் ஓடவேண்டும் சுரண்டப்படுவதிலிருந்து தப்புவதற்கும் ஓடவேண்டும் என்பது தான் பொருளாதார கொள்கை என்றால் சிங்கமாகவோ மானாகவோ தான் வாழ வேண்டும். மனிதனாக வாழ்வதற்கு அந்தப் பொருளாதார கொள்கை சரிவராது.

மனிதனாக வாழ்வதற்கு திட்டமிடப்பட்ட, சமத்துவத்தையும், சமநீதியையும் நிலைநாட்டுவதற்கான அடிப்படைகளை கொண்ட பொருளாதாரமே அவசியமாகும்.

# ஒலிம்பிக் போட்டியின் போது

## நினைவிற்கு வந்த இரு நிகழ்வுகள்

கடந்த ஓகஸ்ட் 13ம் திகதி முதல் 29ம் திகதி வரை கிரேக்கத்தின் தலைநகர் ஏதென்ஸில் 28வது சர்வதேச ஒலிம்பிக் போட்டிகள் இடம் பெற்றன. இன மதமொழி நிற பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் உலக நாடுகளையும் மக்களையும் இணைக்கும் ஒரு மையமாக ஒலிம்பிக் விளையாட்டு விழா நடைபெற்றது. அமெரிக்கா தங்கம் உட்பட பல பதக்கங்களைப் பெற்று முன்னிலை வகித்தது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு கிடைத்த வெற்றியல்ல. அமெரிக்க மக்களின் வெற்றியாகும். அதிலும் குறிப்பாகக் கூறுவதானால் வென்றெடுக்கப்பட்ட பதக்கங்களில் கூடிய வற்றைப் பெற்றவர்கள் அமெரிக்க கறுப்பின வீரர்களும் வீராங்கனைகளுமாவர். இம்முறை மட்டுமன்றி ஒவ்வொரு ஒலிம்பிக்கிலும் அமெரிக்க கறுப்பின வீரர்களும் வீராங்கனைகளும் வெற்றிபெற்று பதக்கம் பெற்று வந்துள்ளனர். அதேவேளை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒலிம்பிக் போட்டியை ஒவ்வொரு தடவையும் தனது நோக்கிற்கும் போக்கிற்கும் பயன்படுத்த முற்படுவது வழக்கம்.

அதேவேளை சீன விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி தங்கப்பதக்கங்களை கூடுதலாகப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். இவ்வெற்றி சோஷலிச கட்டுமானத்தின் கூட்டு விளைவேயாகும். இதற்கு மற்றொரு உதாரணம் கியூபாவின் விளையாட்டு அணி வெளிப்படுத்திய ஆற்றல்களும் வென்றெடுத்த பதக்கங்களுமாகும். கூர்ந்து கவனித்தால் சோஷலிசப் பின்புலத்தின் ஊடாக வந்த வீரர்கள் வீராங்கனைகளின் ஆற்றல் வெளிப்படுத்தல்களைக் கண்டு கொள்ள முடிந்தது.

இவ்வேளை ஒரு வரலாற்று கறை படிந்த ஒலிம்பிக் சம்பவம் நினைவுக்கு வருகிறது. அடோல்ப் ஹிட்லர் ஜேர்மனியில் பதவிக்கு வந்திருந்த காலப் பகுதியான 1936ல் சர்வதேச ஒலிம்பிக் போட்டி அங்கு இடம் பெற்றது. அவ்விழாவிற்கு வருகை தந்த ஹிட்லர் ஒலிம்பிக்கில் நான்கு தங்கப்பதக்கங்களை வென்ற அமெரிக்க கறுப்பின வீரரான ஜெஸ் ஓவன்ஸ் என்பாருக்கு பதக்கம் அணிவிக்க மறுத்த ஹிட்லர் விளையாட்டரங்கை விட்டு வெளியேறிச் சென்று தனது இனவெறி அவலட்சண முகத்தை உலகிற்கு காட்டிக் கொண்டான். இவ்வரலாற்று நிகழ்வை அண்மைய ஒலிம்பிக் போட்டியின் போது ஊடகங்கள் நினைவு கூர்ந்து கூறிக் கொண்டன.

இவ்வேளை ஏறத்தாள மேற் கூறிய வாறான ஒரு நிகழ்வு ஐம்பதுகளின் ஆரம்பத்திலே வடபுலத்தில் நடைபெற்றிருந்தது என்ற குறிப்பைக் கூறுதல் வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி அப்பொழுது ஆட்சியில் இருந்தது. வடபுலத்தில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற ஆதிக்கம் பெற்றிருந்தது. சாவகச்சேரி தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக குமாரசுவாமி என்பவர் இருந்தார். அத்தொகுதியின் மந்துவில் பிரதேசத்தில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடைபெறுவது வழக்கம். ஒரு முறை நடைபெற்ற சிறப்பு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிக்கு பாராளுமன்ற உறுப்பினர் குமாரசுவாமி பிரதமவிருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார். சவாரிப் போட்டி முடிவுற்றதும் வெற்றிபெற்ற மாட்டுவண்டியைச் செலுத்தி வந்தவருக்கே மாலை அணிவிப்பது வழக்கம். ஆனால் அவ்வாறு செய்யப்படவில்லை. மாலை மாட்டுக்கே பிரதமவிருந்தினரால் அணிவிக்கப்பட்டது. காரணம் அம்மாட்டு வண்டியைச் செலுத்தி வந்தவர் தாழ்த்தப்பட்டவராக இருந்தமையேயாகும். அங்கு கறுப்பின மனிதனுக்கு பதக்கம் அணிவிக்க ஹிட்லர் மறுத்தது போன்று இங்கு தாழ்த்தப்பட்ட தமிழனுக்கு மாலை அணிவிக்க மறுக்கப்பட்டது. இன்றும் வெள்ளை இனவெறி அமெரிக்காவிலும் ஜேர்மனியிலும் பிரித்தானியாவிலும் உண்டு. அவ்வாறு இங்கும் சாதிய வெறி வெவ்வேறு வடிவங்களில் உண்டு.

# தமிழ் மொழி அமுலாக்கல்

கொழும்பு வலயத் தமிழ் மூலமான பாடசாலை அதிபர்களுக்கு அவ்வப்போது கல்வித் திணைக்களத்தினர் கூட்டங்களுக்கு அழைப்பதுண்டு. அக்கூட்டங்கள் முழுக்க முழுக்க சிங்களத்திலேயே நடத்தப்படுகிறது. கொழும்பு வலயத்தில் முப்பதுக்கு மேற்பட்ட தமிழ் மூலப் பாடசாலைகள் உள்ளன. அந்த அதிபர்களுள் அரைவாசிபேருக்கு சிங்களம் தெரியாது. தெரிந்த அதிபர்களுள் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் சிங்களத்தை முழுமையாக விளங்கிக் கொள்ளும் திறன் அற்றவர்கள். கூட்டங்களில் அதிபர்கள் கட்டாயமாக பிரசன்ன மாயிருத்தல் வேண்டுமென்பதால் சகலரும் கூட்டத்திற்குச் சென்று பொழுது போக்க வேண்டியுள்ளது. சில சமயங்களில் சிங்களத்தில் கூறப்பட்டதை தமிழில் சுருக்கமாகச் சொல்வதற்கு முன்வருபவர்கள் தமிழைக் கொலை செய்து விடுவதுண்டு.

தமிழ் மூலமான பாடசாலைகளிலேயே தமிழுக்கு இந்தக் கதி, தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினைகள் உண்டு எனக் கேட்கும் சிங்கள மக்களும் இன்றும் இருக்கிறார்கள். சுமார் 40 வருடங்களின் பின்பும் நியாயமான தமிழ் உபயோகம் எந்த அளவில் உண்டு என்பதற்கு இது ஒரு உதாரணம்.

# கிழக்கில் இனவெறித் தீ மூட்ட 'கிழக்கின் உதயம்' முயற்சி!

கிழக்கின் உதயம் என்ற பெயரில் கல்முனையில் இடம் பெற்ற மாநாடும் ஆர்ப்பாட்டமும் வடக்கு கிழக்கைப் பிரிப்பதையும் புலிகள் இயக்கத்தின் இடைக்கால நிர்வாக யோசனைகளை நிராகரிப்பதாகவும் கூறப்படுகின்றது. உண்மையில் கிழக்கில் மூவின மக்கள் மத்தியிலும் குரோதத்தைத் தூண்டி இனமதக் கலவரங்களுக்கும் ஆளை ஆள் குத்திக் குதறிக் கொல்லப்படுவதற்கும் வழி காட்டுவதாகவே அமைகின்றது. வடக்கில் இருந்து கிழக்கைப் பிரிப்பது மட்டுமன்றி கிழக்கிலேயே தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களைப் பிரித்துக் கூறுபோட்டு பேரினவாதத்தை கச்சிதமாக முன்னெடுப்பதுமாகும். இதன் பின்னால் ஜே.வி.பியினர், ஹெல உறுமயக்காரர் மற்றும் இனவெறியர்கள் இருப்பதை அன்றைய கல்முனை மாநாட்டிலும் ஆர்ப்பாட்டத்திலும் காண முடிந்தது. முற்றிலும் அப்பிரதேசத்திற்கு சம்மந்தமில்லாதவர்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று நடாத்தப்பட்ட மேற்படி "கிழக்கின் உதயம்" என்ற நாடக நடவடிக்கை நொந்து கெட்டு அழிந்து இன்றும் கொலைகள் நடந்து வரும் கிழக்கு மண்ணிலே மேலும் அழிவுகளுக்கு மேலும் உரமூட்டுவதாகவே அமைந்து காணப்படுகிறது. இதனை கிழக்கின் மூவின மக்களும் மிகுந்த ஆதங்கத்துடனும் அருவருப்புடனுமே பார்த்து நிற்கின்றனர். இத்தகைய அழிவு சக்திகளின் சதிவலைகளில் அகப்படாது இருப்பதே கிழக்கு மக்கள் முன்னால் உள்ள பெரும் பொறுப்பாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்திற்கு புதிய தொழிற் சங்க இயக்கம் அவசியம்

## பழைய பாணியில் அல்ல புதிய பாதையில்

- அழகேசன் -

மலையகத்தில் தொழிற் சங்கங்களுக்கு எதிரான குற்றச் சாட்டுக்கள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் மீது மிகவும் வெறுப்படைந்தவர்களாக இருக்கின்றனர். கடந்த பல வருடங்களாக வளர்ச்சியடைந்துள்ள வெறுப்பு தற்போது வெளிப்படையாக தெரிகிறது. யூலை மாதம் நடந்து முடிந்த மாகாணசபை தேர்தல்களில் தோட்டத் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு தொழிலாளர்கள் முன்னர் போன்று வாக்குகளை அள்ளிக் கொடுக்கவில்லை. இ.தொ.காவிற்கும் ம.ம.முன்னணிக்கும் கிடைத்த வாக்குகள் 50 வீதத்திற்கு மேல் சரிவு ஏற்பட்டுள்ளதை காட்டுகிறது.

தோட்டத்துறையில் இயங்கும் தொழிற் சங்கங்கள் கையாலாகாதனவாக இருப்பதாலேயே மேற்படி குற்றச் சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. தோட்டத்துறையில் இயங்கும் தொழிற் சங்கங்கள் தொழிற் பிணக்குகளை தீர்ப்பதற்காக மட்டுமன்றி தோட்டத்தொழிலாளர் களின் நாளாந்த வாழ்க்கையை நடத்துவதற்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கான போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டியிருக்கின்றன. தோட்டத் தொழிலாளர்கள் சமூகம் மிகவும் பிற்படுத்தப்பட்ட அவர்களின் இனத்துவ உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் இருக்கின்றது. அதனால் அவர்களின் பாதுகாப்பு மட்டுமன்றி சிறிய சிறிய விடயங்களுக்காகவும் (அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுக்கின்ற) குரல் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இதனால் தோட்டத்துறை தொழிற் சங்கங்கள் தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகளுக்காக மட்டுமன்றி அவர்களின் இருப்பிலும் அக்கறை செலுத்த வேண்டியனவாக இருக்கின்றன.

1930 களிலிருந்து 1980கள் வரை தொழிற் சங்கங்களின் பேரம் பேசும் சக்தி பலவீனமானதாக இருக்கவில்லை. ஆனால் 1990 களுக்குப் பிறகு பெருந்தோட்டங்கள் மீண்டும் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டபிறகு தொழிலாளர்கள் ஏற்கனவே அனுபவித்து வந்த உரிமைகளும் சலுகைகளும் கம்பெனிகளினால் மறுக்கப்பட்டு வருகின்றன. வேலை நிபந்தனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. முறையாக சம்பள உயர்வுகள் வழங்கப்படுவதில்லை.

பெருந்தோட்டக்கம்பெனிகளுக்கும் தோட்டத் தொழிற் சங்கங்களில் சிலவற்றுக்குமிடையில் (இ.தொ.கா, இ.தே.தோ, தொ.ச, தோட்டக் தொ.ச. கூட்டுக்கமிட்டி) கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தங்கள் யாவும் தொழிலாளர்களின் நலன்களை பாதிப்பனவாக அமைந்தன.

இறுதியாக கையெழுத்திட்ட கூட்டு ஒப்பந்தம் கடந்த யூன் 30ம் திகதியும் காலாவதியாகிவிட்டது. இன்னும் புதிய கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவில்லை. கூட்டு ஒப்பந்தங்களின் காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கு ஏற்பட்ட ஏனைய துறை தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வுகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமே நாளொன்றுக்கு ரூபா 121/- ஐ கூலியாக பெறுகின்றனர். தோட்டக் கம்பெனிகளுக்கு எவ்வளவு தான் இலாபம் கிடைத்தாலும் நட்டக்கணக்குகளையே காட்டி தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்க மறுத்து வருகின்றன.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கப்பட்ட நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வித சம்பள உயர்வுமின்றி அவதிப்படுகின்றனர். அதனால் தொழிற் சங்கங்கள் மீது நம்பிக்கை இழந்துள்ளனர்.

இதனால் தொழிற் சங்க வரையறைகளுக்கு அப்பால் தொழிலாளர்கள் பல வெகுஜனப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அதாவது தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதிப்பாக இருக்கின்ற கூட்டு ஒப்பந்த முறையை இரத்து செய்து, நியாயமான சம்பள உயர்வை உறுதி செய்யும் முறையை கோரி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த மாதம் கொட்டகலை நகரில் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். அதற்கு பின்னணியில் சில அரசசார்பற்ற நிறுவனங்கள் இருந்துள்ளன. அதனை தொடர்ந்து பரவலாக தோட்டத் தொழிலாளர்கள் போராட்டங்களை செய்து வருகின்றனர்.

இப்போராட்டங்களுக்கு மத்தியில் முற்றாகவே தொழிற் சங்க இயக்கத்தை நிராகரிக்கும் கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. அதாவது தோட்டத் தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கங்கள் தேவை இல்லை என்று தொழிற் சங்கங்களுக்கு சந்தாப்பணத்தை கொடுக்கக் கூடாது என்றும் பிரசாரம் செய்யப்படுகிறது.

தோட்டத் தொழிற் சங்கங்கங்கள் பேரம் பேசுவதில் எப்போதுமே பலமானதாக இருக்கவில்லை. 1990களுக்கு பிறகு அவை மேலும் மேலும் பலவீனமாக்கப்பட்டுள்ளன. அதற்கு காரணம் தற்போதைய புதிய நிலைமைகளுக்கு ஏற்ப தொழிற்சங்கங்கள் தம்மை தகவமைத்துக் கொள்ளவில்லை. அவை பிரிட்டிஷ் கொலனித்துவ காலத்து பொறிமுறை, வழிமுறை என்பவற்றுடனேயே தொடர்ந்து இயங்கிவருகின்றன. அத்துடன் தோட்டக் கம்பெனிகள் வலுவான நிலைமையில் இருந்து கொண்டு இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தினூடாக அவற்றின் சுரண்டலை நிலைநாட்டி வருகின்றன. அவை தற்போதைய உலகமயமாதல் சூழ்நிலையில் நன்கு பலமடைந்துள்ளன.

இந்நிலையில் தொழிலாளர்களின் பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்து கொள்வது? பாரம்பரிய தொழிற்சங்கங்களை நிராகரித்து அதேபாணியில் இயங்கும் இன்னொரு தொழிற் சங்கத்தில் இணைவது எவ்வகையிலும் தீர்வாகாது.

தொழிற் சங்கங்களை முற்றாக நிராகரித்து தொழிலாளர்கள் பலமாக இருக்க முடியாது. தொழிற்சங்க இயக்கத்தை செல்லுபடியற்றதாக்கி தொழிலாளர்களை பலவீனமாக்குவதினால் கம்பெனிகளுக்கே நன்மையாகும். அரச சார்பற்ற நிறுவனங்களாலும் தனிநபர்களாலும் தொழிலாளர்களின் உரிமைகளை உறுதி செய்து கொள்ள முடியாது.

இன்றைய சூழ்நிலையில் கம்பெனிகளின் சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய கொள்கை நடைமுறை என்பவற்றை கொண்ட தொழிற்சங்க இயக்கம் அவசியமாகிறது. அதாவது தொழிலாளர்களின் அக்கறைகளை பாதுகாப்பதற்கு மாறாக கம்பெனிகளிடம் சமரசம் செய்யும் தொழிற்சங்க இயக்கத்தால் எதனையும் சாதிக்க முடியாது. தொழிலாளர்களின் அக்கறைகளை உயர்த்திப் பிடிக்கும் போராட்டக் குணமுடைய தொழிலாளர் வர்க்க அடிப்படையைக் கொண்ட தொழிற் சங்க இயக்கம் அவசியமாகிறது.

இன்று தோட்டத்துறையில் இருக்கும் தொழிற்சங்கங்கள் போராட்டக் குணாம்சத்தையோ, தொழிலாளர் வர்க்க அடிப்படையையோ கொண்டதாக இல்லை. முதலாளித்துவ சமூகத்தில் தொழிற் சங்கங்களுக்கு பல வரையறைகள் இருந்த போதும், தோழர் லெனினின் முடிபுகள் போன்று தொழிற் சங்க வாதத்திற்குள் கட்டுண்டு போகாமல் தொழிலாளர்களின் நாளாந்த பிரச்சினைகளுக்காக குரல் கொடுப்பதுடன் தொழிலாளர்களை அணிதிரட்டி நீண்டகால நோக்கில் முழு தொழிலாளர் வர்க்க விடுதலைக்காகவும் போராட வேண்டிய கடப்பாட்டுடன் தொழிற் சங்கங்கள் இயங்க வேண்டும்.

1960கள் 70பதுகளில் மேற்படி அடிப்படையில் செங்கொடிச் சங்கம் புதிய செங்கொடிச் சங்கம் என்பன இயங்கின. 1971 ஜே.வி.பி கிளர்ச்சிக்கு பின்னரும் 1980களில் ஏற்பட்ட இனவாத சூழ்நிலைகளினாலும் அச்சங்கங்களினுள் ஏற்பட்ட பிளவுகளினாலும் அவை செயலிழந்தன.

வரலாற்றில் அவற்றின் சாதக பாதக விடயங்களையும் தற்போதைய எகாதிபத்திய உலகமயமாதல் தனியார் மயமாதல் சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு புதிய வார்ப்புடனான தொழிற் சங்க இயக்கம் அவசியமாகிறது. மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் அடிப்படைகளை கொண்டதாக இருக்கும் போதே அவை தொழிலாளர்களுக்குரியதாக இருக்க முடியும் என்பது கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

# ஜே.வி.பி சந்திரசேகரனின் பொய் வாக்குறுதி

வரவுசெலவுத்திட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என்று ஆளும் ஐ.ம.சு. முன்னணியின் பங்காளி கட்சியான ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் ரா.சந்திரசேகரன் தெரிவித்ததாக ஒரு பத்திரிகையில் செய்தி வெளிவந்துள்ளது.

ரா.சந்திரசேகரன் வாய்க்கு வந்தபடி கூறியதை அப்பத்திரிகை அப்படியே பிரசுரித்துவிட்டது. வரவு செலவு திட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்க வேண்டுமென தோட்டக் கம்பெனிகளை அரசாங் கம் நிர்ப்பந்திக்க முடியுமா? முடியாது என்பது சந்திரசேகரனுக்கு தெரியாதா? அவர் கூறியதை பிரசுரித்த பத்திரிகைக்கும் தெரியாதா?

தோட்டக்கம்பெனிகளை கட்டுப்படுத்தும் நிலையில் அரசாங்கம் இல்லை. ஜே.வி.பி அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதால் மட்டும் கம்பெனிகளை ஜே.வி.பி கட்டுப்படுத்த முடியுமா?

தோட்டத்தொழிற் சங்கங்கள் மௌனமாக இருக்கின்ற போதும் தோட்டத் தொழிலாளர்கள் மௌனமாக இருக்கவில்லை. அவர்கள் சம்பள உயர்வு வழங்க வேண்டுமென கோரி வெகுஜனப் போராட்டங்களை செய்து வருகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையில் ஜே.வி.பி தொழிற் சங்கத்தை தோட்டங்களில் வளர்த்துக் கொள்வதற்காக சந்திரசேகரன் பொய் வாக்குறுதிகளை கொடுத்து தொழிலாளர்களின் போராட்டங்களை மழுங்கடிக்கக்கூடாது.

பேரினவாத அடிப்படையை கொண்ட ஜே.வி.பியால் என்ன செய்ய முடியும்? இன்னொரு இ.தே.தோ.தொ.சங்கம் போன்றும் சுதந்திர ஊழியர் சங்கம் போன்றும் இருந்து விட்டுப் போகலாம். ஜே.வி.பி இப்போது மலையக மக்களுக்காக மாரடிக்க புறப்பட்டிருப்பது தான் பலருக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

# குருதியும் நெருப்பாய் மாறும்

- ஆர். ஹிர்சாந் -

கந்தப்பளையில் நிகழ்ந்த தெல்லாம்
கனவாய்ப் போகுமோ
காலம் வெல்லும் கருவாய் மாறி
கண்ணைத் திறக்குமோ
நிலத்தில் விழுந்த குருதித்துளிகள்
நெருப்பாய் மாறுமோ
நினைத்து மறைந்த சேதியாகி
நெஞ்சில் விலகுமோ (கந்தப்பளை)

நீதி கேட்டகுரல்கள் என்றும் அழிவதில்லையே
நேர் வழியின் போர்களில் என்றும் தோல்வியில்லையே
சேதியெல்லாம் துன்பங்கள் என்றால்
வாழ்வு இல்லையே - நாம்
சேர்ந்து ஒன்றாய் நடப்பதானால்
தினமும் வெற்றியே (கந்தப்பளை)

உறுதி மிக்கப் புயங்களாலே
உலகை வெல்லலாம்
ஊரை அழிக்கும் நாய்களை எல்லாம்
உதைத்து மிதிக்கலாம்
பாரிலெல்லாம் செங்கொடி பறக்கும்
நாளும் பிறந்திடும் - அந்த
நம்பிக்கையில் கைகள் இணைந்தால் - நம்
காலம் வென்றிடும் (கந்தப்பளை)

துணிவு மிக்க தோழர்களால்
துன்பம் விலகிடும்
சேர்ந்து அழுத கதைகள் எல்லாம்
தூர விலகிடும்
உயர்ந்து நிமிர்ந்த மலைகள் எல்லாம்
செங்கொடி உயரும்
உண்மை பொதுமை ஊரை வெல்லும்
நாளும் பிறந்திடும் (கந்தப்பளை)

# மலையக ஆசிரியர் சிலருக்கு புதிய ஞானம் பிறந்த கதை

ஆறுமுகத்துடன் ஒரு மலையக ஆசிரிய சமூகம், சந்திரசேகரத்துடன் இன்னொரு மலையக ஆசிரியர் சமூகம், தற்போது அமைச்சர் சி.பி.ரட்ணாயக்காவுடன் மற்றொர் மலையக ஆசிரியர் சமூகம், எல்லோரும் செய்வது ஒன்றுதான். அது "பேக்" தூக்குவது."

அண்மையில் நுவரெலியாவில் அமைச்சர் சி.பி ரட்ணநாயக்க 'மலையக ஆசிரியர் சமூகத்துடன் கலந்துரையாடியுள்ளார். அதில் மேல் கொத்மலை திட்டத்தை யாரும் எதிர்க்கக் கூடாது. அது ஒரு அபிவிருத்தித்திட்டம், அதனால் தோட்டப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், என்றெல்லாம் அவர் கூறியுள்ளார். அதற்கு சப்பை கட்டுவது போன்று சில ஆசிரியர்கள் புள்ளி விபரங்களுடன் மேல் கொத்மலைத் திட்டம் பற்றிய உண்மைக்கு புறம்பான புழுகு மூட்டைகளை அவிழ்த்து விட்டுவருகிறார்கள். நேற்றுவரை மேல்கொத்மலை திட்டத்தை எதிர்த்தவர்கள். சி.பி ரட்ணநாயக்காவிற்கு 'பேக்' தூக்குவதால் அவர்களுக்கு தற்போது மேல்கொத்மலை திட்டத்தின் நன்மைகள் பற்றிய புதிய ஞானம் பிறந்து விட்டது போல் தெரிகிறது.

எவருக்கு எப்படி ஞானம் பிறந்தாலும் அழிவு நிறைந்த அந்த திட்டத்தை எதிர்த்து மக்கள் போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று கூறுகிறது மேல் கொத்மலை திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம். மேலே கூறப்பட்ட மலையக ஆசிரியர் சமூகங்களை விட வேறொரு மலையக ஆசிரியர் சமூகம் மக்களுடன் மக்களாகி அத்திட்டத்தை எதிர்க்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 11 செப்டம்பர் 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 72

எஸ்.47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.:2435117, 2335844 பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## விலைவாசி உயர்வும் உலகமயமாதலும்

அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. வாழ்க்கைச் செலவு அதிகரித்து மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளாகியுள்ளனர். அதற்கேற்ப வருமான அதிகரிப்பிற்கு வாயப்பே இல்லை தற்போது நாட்டில் நிலவு கடும் வரட்சியினால் பெருந்தோட்டங்கள், சேனைப்பயிர்ச் செய்கை, மரக்கறிச் செய்கை, நெற்செய்கை, உள்ளக மீன்பிடி என்பன பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் கஷ்டப்படும் மக்களுக்கும் நிவாரணம் இல்லை.

ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தின் திறமையின்மையினாலேயே அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிரித்துள்ளன என்று எதிர்கட்சியான ஐ.தே.கட்சி கூறுகிறது. உலக சந்தையில் எண்ணெய்யின் விலை அதிகரித்திருப்பதால் விலைகளை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக ஐ.ம.சுதந்திர முன்னணி அரசாங்கம் கூறுகிறது.

ஐ.தே. கட்சியின் ஆட்சி காலத்தில் அத்தியாவசியப் ொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டபோது சுதந்திரக்கட்சி ஜே.வி.பி என்பன ஐ.தே கட்சியின் திறமையற்ற ஆட்சியே அவ்விலை அதிகரிப்புக்களுக்கு காரணம் என விமசர்சனம் செய்தன. அப்போது சமதானத முயற்சிகளை முன்னெடுப்பதால் விலை அதிகரிப்புக்களை பொருட்டாக கொள்ளக் கூடாது என்று ஐ.தே.கட்சி கூறியது, ஐ.தே.கட்சி கட்டி வளர்த்திருந்த பொருளாதாரத்தை சுதந்திரக் கட்சி நாசபாக்கி விட்டதாலேயே விலைகள்அதிகரிக்கப்படுவதாகவும் கூறியது.

இரண்டு கட்சிகளும் எதிர்க்கட்சியில் இருக்கும் போது ஆளும் கட்சியை திட்டி தீர்க்கும் ஆட்சிக்கு வந்த பிறகு எல்லாவற்றையும் மறந்து அரசாங்கத்தின் செலவுகளை ஈடுசெய்ய அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் ஊடகங்களின் பிழையான தகவல்களினாலும் தவறான அபிப்பிராயங்களினாலும் அரசாங்க கட்சியின் திறமையின்மையினாலேயே அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பதாக மக்கள் நம்புகின்றனர். ஆனால் அரசாங்க கட்சியை ஆட்சியிலிருந்து இறக்கிவிட்டு எதிர்க்கட்சியை ஆட்சிக்கு கொண்டு வந்தால் எல்லாம் சரியாகிவிடும். என்றால் மக்கள் நம்புகின்றனர்.

உண்மை அதுவல்ல ஆளும் கட்சிகளின் திறமையீனமல்ல மாறாக தவறான பொருளாதார கொள்கைகளும் நடைமுறைகளுமே பெரும்பாலான மக்களின் வாழ்க்கை செலவு அதிகரிப்பதற்கு காரணமாகின்றன. மக்கள் நலன் சார் அரசாங்கம் எவ்வகையான பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டபோதும் சாதாரண மக்களின் உணவு, உடை, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களினது விலைகளையும் போக்குவரத்து போன்ற சேவைத்துறையினது கட்டணங்களையும் கட்டுப்பாட்டில் வைத்திருக்க கடப்பாடுடையதாகும். இலங்கை அரசாங்கங்கள் யாவும் முதலாளித்துவ தாராளமய பொருளாதார கொள்கையை ஏற்றுக் கொண்டு ஏகாதிபத்திய உலகமயமாதலை நடைமுறைப்படுத்தும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், கட்டளைகளுக்கிணங்க செயற்படுவனவாகும் தரப்படுவதில்லை. அரசாங்க செலவீனத்தை ஈடுசெய்வதற்கு ஆகக் கூடுதலாக எண்ணிக்கையான சாதாரண மக்களிடமிருந்து மறைமுகமாக பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையாகவே அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கின்றன. அத்தியாவசிய பொருட்கள் உற்பத்தி இறக்குமதி என்பவற்றுக்கும் அத்தியாவசிய சேவைகளுக்கும் அரசாங்கம் செலுத்தி வரும் மாணியங்கள் குறைக்கப்படும் அல்லது இரத்து செய்யப்படும்.

விவசாய உற்பத்திக்காக மாணியங்கள் படிப்படியாக குறைக்கப்பட்டு தற்போது முற்றாகவே நீக்கப்பட்டுவிட்டன. அரிசி, சீனி. கிழங்கு, வெங்காயம், மிளகாய் என்பவற்றின் இறக்குமதிக்காக அரசாங்கம் அதுவரை வழங்கிவந்த மானியங்கள் முற்றாகவே நிறுத்தப்படுமென நிதியமைச்சர் சரத் அமுனுகம கூறியுள்ளனர். அதனால் அப்பொருட்களின் விலை இரண்டுமடங்குகளாக அதிகரிக்கப்படலாம். தற்போது பெற்றோல், டீசல், காஸ் போன்ற எரிபொருட்களின் விலை அதிகரிக்கபட்டுள்ளன. அவற்றின் விலை மீண்டும் அதிகரிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கேற்ப தொழிலாளர்களின் சம்பள உயர்விற்கோ, விவசாயிகளின் வருமான அதிகரிப்பிற்கோ வாய்ப்பில்லை.

இதனால் விலை அதிகரிப்புகளை கண்டித்தும் சம்பள உயர்வுகளை கோரியும் தொழிற்சங்கங்கள் போராட்டங்களை நடத்திவருகின்றன. அவற்றை தொழிற் சங்கங்களுக்கு மட்டும் வரையறுக்காமல் அனைத்து மக்களும் பங்கெடுக்கும் போராட்டங்களாக மாற்றமடையச் செய்ய வேண்டும்.

அரசாங்கங்களின் பிழையான தவறான பொருளாதார கொள்கைகளினதும் நடைமுறைகளினதும் விளைவாகவே அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படுகின்றன என்பதை மக்களுக்கு தெளிவுபடுத்தி மக்களை அணிதிரட்டி வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை அதிகரிக்காது, அவற்றின் விலைகளை கட்டுப்படுத்தி பரிபாலிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி வலியுறுத்தி அப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்யவும், அத்தியாவசிய சேவைகளை பெற்றுக் கொள்ளவும் ஏற்றவாறு சாதாரண மக்களின் வருமானம் உறுதி செய்யப்படவும் போராட்டங்கள் செய்யப்பட வேண்டும்.

அதன்மூலம் முதலாளித்துவ பொருளாதார கொள்கைகளையும் நடைமுறைகளையும் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலையும் செயலிழக்கச் செய்ய முடியும். மக்களுக்கு சமநீதியையும், சமவாய்ப்பையும், வழங்கக் கூடிய மக்கள் நலன்சார் புதிய பொருளாதார கொள்கைகளையும், நடைமுறைகளையும் முன்னெடுக்க வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த முடியும். அத்தியாவசிய பொருட்களும் சேவைகளும் மக்களுக்கு கிடைப்பதனை உறுதி செய்ய முடியும்.

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எதிர்ப்புணர்வின் அடிப்படையில் வெகுஜனப் போராட்டங்கள் சரியான திசையில் முன்னெடுக்கப்படாமல் இருப்பது என்பது மீண்டும் ஒரு முதலாளித்துவ கட்சி (எதிர்க்கட்சி) ஆட்சிக்கு வந்த இதே மாதிரியான விலை அதிகரிப்புக்களையும், கட்டண அதிகரிப்புக்களையும் செய்ய துணை போவதாகவே இருக்கும். மக்கள் மாறி மாறி முதலாளித்துவ பிடிக்குள் மாட்டப்படுபவர்களாகவே இருப்பர். அதனால் மக்களுக்கு விமோசனம் என்பது எப்போதும் எட்டாத தூரத்திலேயே இருக்கும்.

- ஆசிரியர் குழு -

# புலிகளின் இடைக்கால யோசனைகளும் பேரினவாத சக்திகளின் கூச்சல்களும்

இரண்டரை வருடங்களைத் தாண்டி நிற்கும் யுத்த நிறுத்தம் எந்த நேரத்திலும் முறிவடையலாம் என்ற அச்சம் நாளாந்தம் ஊடகங்கள் மூலம் பரப்புரை செய்யப்படுகின்றது. ஆனால் யுத்தத்தின் இரு தரப்பான அரசாங்கமும் புலிகளும் இதுவரை யுத்தம் ஒன்றுக்கு செல்லப் போவதாகத் தெரிவிக்கவில்லை. அரசாங்கத்தின் பங்காளியான ஜே.வி.பி யினரது பேச்சுவார்த்தைக்கு எதிரான கருத்துக்களையும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் அண்மைய உரைகளையும் வைத்தே யுத்தம் பற்றிய பேச்சு அடிபடுகின்றது.

மேலும் இலங்கை இனப்பிரச்சினையில் நெருக்கமாகி நிற்கும் ஐரோப்பிய யூனியன் யப்பான் ஆகியன யுத்தம் ஏற்படுவதைத் தாம் விரும்பவில்லை என்றும் இன்றைய சூழலில் யுத்தம் வரமாட்டாது என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளன. தமது விருப்பத்தைத் தம்மிடம் உள்ள நிதி உதவிப் பொட்டலத்தைக் காட்டி தாமதியாது பேச்சுவார்த்தைக்குச் சென்று காணமுடிகிறது. இனப் பிரச்சனையின் ஊடாகத் தத்தமது ஆதிக்கத்தை இலங்கையில் வலுப்படுத்த நிற்கும் அமெரிக்காவும் இந்தியாவும் கூட உடனடியான ஒரு யுத்தத்தின் மூலம் தமது இலக்குகளை அடைய முன்னிற்கவில்லை என்பதையும் புரிந்து கொள்ள முடிகின்றது. ஆனால் அந்நியத் தலையீட்டுக்கான தருணம் ஒன்றை அவை நீண்டகால நோக்கில் எதிர்பார்த்திருக்கின்றன. என்பது அவர்களது உள்ளார்ந்த நிலைப்பாடாகும். இவர்கள் உடனடியான ஒரு யுத்தத்தை விரும்பாமைக்கு காரணம் திறந்த பொருளாதாரம் தனியார் மயம் மூலமான தமது பல்தேசியக் கம்பனிகளின் முதலீடுகளுக்கும் சுரண்டல் லாபம் மீட்டலுக்கும் பங்கம் ஏற்படாதிருக்கவேயாகும்.

அதேவேளை இந்நான்கு தரப்பினரும் உள்ளார்ந்த ரீதியில் ஆளும் பேரினவாத உயர் வர்க்க சக்திகளை ராணுவ ரீதியில் பலப்படுத்துவதில் ஒரே திசையில் செயலாற்றி வருவதைக் காண முடிகின்றது. இவர்களுக்கு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான தீர்வு என்பது கசப்புக்குரிய ஒன்றாகவே காணப்படுகின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் இரண்டு உள்ளன. ஒன்று மூன்றாம் உலக நாடுகளை நவகொலனிகளாக்கி தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கு இத்தகைய இனமதமொழி பிரதேச முரண்பாடுகளும் அவை சார்ந்த ஒடுக்குமுறைகளும் தேவையானவையாகும். இரண்டாவது இலங்கையில் அதிக பட்ச சுயாட்சித் தீர்வு ஏற்பட்டால் அதுவே ஏனைய மூன்றாம் உலக நாடுகளது பிரச்சினைகளின் தீர்வுக்கு முன்னுதாரணமாகி விடவும் கூடும் என்ற அச்ச உணர்வாகும். எனவே இந் அந்நிய ஆதிக்க சக்திகளான சர்வதேச சமூகத்திற்கு தேசிய இனப்பிரச்சினை என்பது எல்லா மூன்றாம் உலக நாடுகளிலும் தேவைப்படும். ஒன்றாகும் ஆனால் அவர்களது விருப்பு வெறுப்புக்கு ஏற்றவாறு யுத்தமும் யுத்த நிறுத்தமும் நீடிப்பதைக் கவனமாகப் பேணிக் கொள்வார்கள். இதனைப் புரிந்து கொள்வது இன்றைய சூழலில் மிக முக்கியமானதாகும்.

இந்நிலையில் தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியின் கீழ் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை தீர்வு முயற்சி என்பன பற்றி நோக்குவது அவசியமாகின்றது. புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை முன்னைய அரசாங்கம் முன்வைத்த இரண்டு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்கான நகல்களைப் பரிசீலித்த பின்பு தமது சொந்த ஆலோசனைகளைத் திட்டவட்டமான வரைவாக அன்றைய அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தனர். இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான தன்னாட்சி அதிகார சபை எனவும் பெயரிட்டனர்.

அத்திட்டத்தைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி அது பற்றி இறுக்கமான மௌனம் சாதித்ததே தவிர அதுபற்றி ஆதரவாகவோ எதிராகவோ வாய் திறக்கவில்லை. இந்த மௌனம் சம்மதத்தின் வெளிப்பாடாக அன்றி தமது தேர்தல் காலத் தந்திரோபாயமாகவே கொண்டிருந்தது. ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அந்த வரைபை விமர்சனம் செய்து நிராகரித்திருந்தது. ஜே.வி.பி யோ நாட்டுப் பிரிவினைரைக்கான நகலத்திட்டம் என ஒலம் வைக்க ஆரம்பித்தது. ஹெல உறுமய அமைப்பு இதனைக் கையில் எடுத்து பாராளுமன்றத்தினுள் தீவிர பௌத்த பிக்குகளை அனுப்பி வைத்தது ஒட்டு மொத்தத்தில் புலிகளின் இடைக்கால நிர்வாகத்திற்கான ஆலோசனைகளை எதிர்த்து நின்ற கட்சிகள் அரசாங்க மனமத்துக் கொண்டன. மௌனம் காத்த ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியாகியது.

**- வெகுஜனன் -**

> **யுத்தம் இடம்பெறுவதும் யுத்தம் நடைபெறாமையும் ஏகாதிபத்தியத்தின் விருப்புவெறுப்பில் தான் தங்கியுள்ளது.**

ஆனால் அரசாங்கம் அமைத்துக் கொண்டதும் ஜனாதிபதி தனது பழைய இராகத்தை மாற்றிப் புதிய தொன்றாக சமாதானப் பேச்சுவார்த்தைக்கு தயார் என்றும் புலிகள் முன்வைத்த ஆலோசனைகளின் அடிப்படையில் பேசலாம் என்றும் கூறினார். அதற்கான அனுசரணையை வழங்கும் படியும் நோர்வையை கேட்டுக் கொண்டார். இருப்பினும் இதுவரை பேச்சுவார்த்தைக்கு உருப்படியான எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை. புலிகள் பேச்சுவார்த்தைக்கு காட்டிய பச்சைக் கொடியை இன்னும் அப்படியேதான் விட்டு வைத்திருக்கிறார்கள். ஆனால் ஜனாதிபதியும் அரசாங்கத்தின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படும் என்றே கூறி வருகின்றனர். ஆனால் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி விடமாட்டோம் என்ற மிரட்டலையும் நாடு பிரியப் போகின்றது என்ற கூச்சலையும் முன்வைத்து வருகின்றனர்.

இவ்விடத்தில் தென்னிலங்கையின் பிரதான கட்சிகளின் நிலைப்பாட்டை கண்டு கொள்வது அவசியமாகின்றது. எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வெளிப்படையான பேரினவாதக் கூச்சலைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் அதனிடம் உறுதியான பேரினவாத நிலைப்பாட்டை தமிழ் முஸ்லீம் மலையக மேட்டுக்குடி ஆதிக்க அரசியல் உயர்வர்க்க சக்திகளின் ஆதரவுடன் கொண்டிருக்கின்றது. தேவையான இடங்களில் தேவை வரும். போதெல்லாம் தமது பேரினவாதத்தை நடைமுறைப்படுத்தி நிறைவேற்றிக் கொள்வார்கள். அத்தகைய கட்சியின் இன்றைய அரசியல் தந்திரோபாயம் அடுத்து வரக்கூடிய ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறுவதாகும். எதிர்வரும் இரண்டு வருட இடைவெளியில் தற்போதைய அரசாங்கத்தைத் தோற்கடிக்காமல் ஆட்சியில் வைத்துக் கொண்டே அதனை அம்பலப்படுத்தி செல்வாக்கு இழக்கச் செய்து ரணிலின் வெற்றியை உத்தரவாதப்படுத்துவதாகும். இதற்கான தந்திரோபாயமே ஸ்ரீ கோத்தாவில் அமெரிக்க எசமான்களின் மறைமுக ஆலோசனையுடன் வகுக்கப்பட்டுள்ளது. இதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான மூளை நரம்பான மிலிந்த மொரகொட வாஷிங்கடனுக்கும் இந்தியாவிற்கும் பயணம் செய்து கொள்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி சமாதானத்தை வேண்டுவதாகவும் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு அரசாங்கத்தை வற்புறுத்துவதாகவும் புலிகளின் யோசனைகளின் அடிப்படையில் பேசவேண்டும் எனவும் வற்புறுத்துவது போலப் பிரச்சாரம் செய்கிறது. ஆனால் தனது பங்களிப்போ தனது திட்டமோ பற்றி வாய் திறப்பதாக இல்லை. இதில் அரசாங்கத்தை மாட்டி விடுவதிலும் ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக் கட்சி முரண்பாட்டைப் பயன்படுத்துவதிலுமே காய்களை யுகர்த்தி வருகிறது.

இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பியைக் கைவிட முடியாமலும் வழிக்கு கொண்டுவர இயலாமலும் திண்டாடுகிறது. அதே வேளை பேச்சுவார்த்தைக்கு எவ்வாறு செல்வது என்பதில் உறுதியான முடிவை எடுக்க முடியாது திணறியும் நிற்கிறது அதனால் காலத்தைக் கடத்திச் செல்லும் நோக்கில் இடைக்கால நிர்வாகத்திற்கான சொந்த ஆலோசனைகளைத் தயாரித்துள்ளதாகவும் கூறிக் கொள்கிறது. அதே வேளை ராணுவத்தைப் பலப்படுத்துவதிலும் ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்வதிலும் அரசாங்கம் வேகம் காட்டி வருகின்றது.

அதேவேளை ஜே.வி.பி புலிகளின் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு யோசனையை தனிநாட்டுக்கான நகல் திட்டம் எனக் கூறி சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து வருகிறது. உண்மையான எதிரி யார்? எனக் கேட்டு தனது நெஞ்சிலேயே தன்னைப் பற்றி எழுதியது போன்று நடந்து கொள்கிறது ஜே.வி.பி இது பேரினவாதக் கூச்சலே அன்றி வேறெதுவுமில்லை. இவ்வாறு நடந்து கொள்வதற்கு அரசியல் காரணம் உண்டு. அவர்களது இலக்கு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது. அதன் பாதையில் பாராளுமன்றத்தில் 39 ஆசனங்களைப் பெற்றிருப்பதைப் பெரும் நம்பிக்கையாகக் கொண்டுள்ளனர். இதே பேரினவாதப் பாதையில் தொடர்ந்து பயணித்தால் தனது தற்போதையப் பங்காளிக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஓரங்கட்டி அந்த இடத்தைப் பிடித்துக் கொள்வதிலேயே ஜே.வி.பி முனைந்து நிற்கிறது. மேலும் ஜே.வி.பி மக்களுக்கு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை தற்போதை அரசாங்கத்தில் நான்கு அமைச்சர்களைப் பெற்றிருந்த போதிலும் நிறைவேற்ற முடியவில்லை. கட்டணங்களின் உயர்வு விலைகள் அதிகரிப்பு தனியார்மய முயற்சிகளுக்கு மக்களிடம் பதில் கூற

தொடர்ச்சி 6ம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தேசியத்தை வலுப்படுத்துவது பற்றி

- இமயவரம்பன் -

ஒரு தேசமோ, தேசிய இனமோ ஏன் ஒரு சமூகப்பிரிவோ கூட இன அடிப்படையிலோ சமூக அடிப்படையிலோ ஒடுக்கப்படும் போது, தனது அடையாளத்தின் அடிப்படையிலே அது அந்த ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராட நேருகிறது. இந்தப் போராடும் வலிமையை மறுப்பது சமூக அநீதிக்கு உடந்தையாக இருப்பது அல்லாமல் வேறல்ல இந்த அடிப்படையை ஏற்கும் காரணத்தினாலேயே மாக்ஸிய லெனினியவாதிகள் கொலனி ஆட்சிக்குக் கீழுள்ள ஒரு நாட்டின் விடுதலைப் போராட்டத்தை மட்டுமன்றி ஒடுக்கப்பட்ட ஒவ்வொரு தேசிய இனத்தினதும் சமூகப்பிரிவினதும் விடுதலைப் போராட்டங்களை ஆதரித்து வந்துள்ளனர்.


அமெரிக்காவின் கறுப்பு இன மக்களது போராட்டம் 1960களில் வலுப்பெற்றது. அவ்வேளை தோழர் மாஓ சேதுங் அந்தப் போராட்டத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவு தெரிவித்து ஆற்றிய உரை, மாக்ஸிய வாதிகளையும் திரிபுவாதிகளையும் வேறுபடுத்திய ஒன்றாகும். அது போலவே சாதிக் கொடுமைக்கும், தீண்டாமைக்கும் பாகுபாட்டுக்கும் எதிரான போராட்டங்களிலெல்லாம் ஆதரவு மட்டுமன்றி வழிகாட்டவும் மாக்ஸிய லெனினியவாதிகள் தயங்கியதில்லை.

இதிலிருந்து விளங்கிக் கொள்ள வேண்டியது ஏதெனில், மாக்ஸிய லெனினிய வாதிகள் தேசியம் பற்றியோ தேசியவாதம் பற்றியோ விறைப்பான பார்வையை உடையவர்களல்ல. ஒருபுறம் ஒடுக்குகிற தேசத்துக்கும் தேசிய இனத்துக்கும் மறுபுறம் ஒடுக்கப்படுகிற தேசத்துக்கும் தேசிய இனத்துக்குமிடையிலான வேறுபாடு பற்றி அவர்கள் கவனமாக இருந்துள்ளனர் என்பதையிட்டு நாம் தெளிவாயிருக்க வேண்டும்.

தமிழ்த் தேசியம் என்பது எல்லாக் காலத்திலும் இருந்து வந்த ஒன்றல்ல. இருந்து வந்த காலத்திலும் எப்போதும் ஒரே விதமானதாக இருந்ததில்லை. தமிழர் என்ற அடையாளம் ஒரு தேசிய இன அடையாளமாக விருத்தி பெறுவதற்குப் பல சமூக, பொருளாதார, வரலாற்றுக் காரணங்கள் பங்களித்தன. இன்று கூறப்படும் தமிழ்த் தேசிய அடையாளத்துக்கும் இதற்கு முன்பு இருந்ததாகக் கூறப்படும் அடையாளம் ஒவ்வொன்றிற்கு மிடையே பாரிய வேறுபாடுகளை நாம் எளிதாகவே கண்டு கொள்ளலாம்.

இலங்கையர் என்ற அடையாளத்தின் அடிப்படையில், நாட்டின் எழுச்சிக்கான அழைப்பு வடபிரதேசத் தமிழர் நடுவிலிருந்தே எழுந்தது. இந்த நாட்டின் சுதந்திரம் பற்றிய அழைப்பு ஒரு அரசியற் கருத்தாக இடதுசாரி இயக்கத்தினிடமிருந்தே எழுந்தது. அன்று தமிழ்ச் சமூகத்தின் பேரிலும் சிங்களச் சமூகத்தின் பேரிலும் குரலெழுப்பியவர்கள் முழுத் தமிழ்ச் சமூகத்தையோ சிங்களச் சமூகத்தையோ மனதிற் கொண்டு குரலெழுப்பவில்லை. வர்க்கம், சாதி, பிரதேசம் ஆகிய வேறுபாடுகளின் அடிப்படையில் இயங்கிக் கொண்டு அனைவரதும் சார்பில் பேசுவது போல அன்று பேசிய தலைவர்கள் வசதி படைத்த சமூகப்பிரிவினரையே உண்மையில் அடையாளப் படுத்தினர்.

பலகாலமாக தமிழ் இன அடையாளமாகக் கருதப்பட்டு வலியுறுத்தப்பட்டது யாழ்ப்பாணத்தின் சைவ - கிறிஸ்துவ வேளாளஅடையாளமாகவோ இருந்தது. இந்த அடையாளத்தை முன்னிறுத்திய தலைவர்கள் நாட்டின் பிறபகுதிகளிற் செறிவாக வாழ்ந்து வந்த தமிழ்ப் பேசும் சமூகங்களைத் தம்முடன் இணைத்துச் செல்வது பற்றிச் சிந்திக்கவில்லை. அப்படிச் சிந்திக்க வேண்டிய தேவையும் அத்தலைமைகட்கு இருக்கவில்லை. அதனால் மொழி அடிப்படையிலான ஒரு அடையாளம் பொருளற்றது என்றோ அது அப்படியே செல்லுபடியாகும் என்றோ வாதிக்க இடமில்லை.



தமிழ்த் தேசியம் எல்லாக்காலமும் இருந்த ஒன்றல்ல. இருந்துவந்த காலத்திலும் ஒரே விதமாக இருந்தும் இல்லை.

**மாக்சிச லெனினிசவாதிகள் தேசியம் பற்றியோ தேசியவாதிகள் பற்றியோ விறைப்பான பார்வை கொண்டவர்கள் அல்லர். ஒடுக்குகின்ற ஒடுக்கப்படுகின்ற தேசியங்கள் பற்றிய வேறுபாட்டைத் தெளிவாகக் காண்கின்றனர்.**

இலங்கையில் தமிழரசுக் கட்சிதான் முதல் முதலாகத் தமிழ்ப் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒரு தமிழ்த் தேசிய இன அடையாளத்தை முன்வைத்து அதற்கான ஒரு அரசியல் தேவையும் நியாமுங் கூட இருந்திருக்கலாம். என்றாலும் தமிழரசுக்கட்சி முன்வைத்த தமிழ்த் தேசியம் மலையகத்தமிழரையும் முஸ்லிம்களையும் கொள்கையளவில் உள்ளடக்கியதற்கு மேலாக, அனைவரையும் ஒன்றிணைக்கக் கூடிய அடையாளத்தினுள் இருக்கக் கூடிய பண்பாடு, பிரதேசம், சாதி, மதம் போன்ற அடையாள வேறுபாடுகள் சார்ந்த வெவ்வேறு சமூகத் தேவைகளையும் அரசியற் பிரச்சனைகளையும் கணிப்பிலெடுத்ததா? நிச்சயமாக இல்லை.

தமிழரசுக் கட்சி சமஷ்டி பற்றிப் பேசியது. ஆனால் வடக்கு கிழக்கிற்கு வெளியே தான் மலையகத் தமிழரும் முஸ்லிம்களிற் பெரும்பாலானோரும் இலங்கைத் தமிழர் எனப்பட்டோரிற் கணிசமான ஒரு பகுதியினரும் பல தலைமுறைகளாக வாழ்ந்து வந்தனர் என்பது பற்றிய கவனம் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளிலும் கோரிக்கைகளிலும் உள்ளடங்கவில்லை. தமிழையும் அரசகரும மொழியாக்குவது என்ற நிலைப்பாடு மட்டுமே எல்லாருக்கும் பொதுவான ஒன்றாக இருந்தது. எனினும் இது எவ்வளவு தூரம் மிக அடிப்படையான பிரச்சனையாயிருந்தது என்பது பற்றி அவர்களுக்குச் சரிவர விளங்கியிருக்கவில்லை என்பது 1956க்கு பின்பு பத்து ஆண்டுகட்குள்ளேயே தமிழ் மக்களுக்கு விளங்கியிருக்கும்.

1976ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த போது தமிழரசுக்கட்சி 1948ம் ஆண்டு முன்வைத்த தேசிய இன அடையாளத்தின் ஒரு பகுதியினரான மலையகத்தமிழரை உள்ளடக்க இயலவில்லை. கால் நூற்றாண்டு கால விடுதலைப் போராட்டத்தின் முடிவில் முஸ்லிம்கள் இந்தத் தமிழ்த் தேசிய அடையாளத்திற்கு வெளியே நிற்பதை நாம் காண்கிறோம். இது நிரந்தரமான ஒன்றாக இருக்கத் தேவையில்லை. எனினும் இன்று பொதுப்படக் கூறுவதானால், தமிழ் மூன்று தனித்துவமான தேசிய இன அடையாளங்கள் கொண்ட மக்களால் பேசப்படுகிறது. ஒவ்வொரு தேசிய இனப்பிரிவும் பல வேறுபட்ட சமூக அரசியற் சூழ்நிலைகளை எதிர் நோக்கினாலும், அவை தனித்தனியாகவும் கூட்டாகவும் போராட வேண்டிய தேவைகள் பல உள்ளன.

இன்று தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவோம் என்ற கருத்து வலுவாக முன்வைக்கப்படுவதற்கான சூழ்நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது. 1983 யூலை இனவன்முறைக்குப் பிறகு, தமிழ்த் தேசிய இனம் தன் இருப்புக்குத்தேசிய இன அடிப்படையில் போராடியே ஆக வேண்டும் என்பது பரவலாக ஏற்கப்பட்டது. ஆனால் மீண்டும் வலுப்படுத்த வேண்டிய அளவுக்கு தமிழ்த் தேசியம் ஏன் வலுவிழந்தது என்பதற்கு எளிமையான விளக்கங்கள் இல்லை. எனினும் இன்று பேரினவாத இன ஒடுக்கு முறைக்கு எதிராகத் தமிழ்த் தேசிய அடையாளத்தின் அடிப்படையில் மக்கள் ஒன்றுபட்டு நிற்கவும் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் போராட வேண்டிய தேவை நம் முன் யதார்த்தமாகவே உள்ளது.

இன்று தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவது என்பது தேசிய இன ஒடுக்குதலுக்கு எதிராக, விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்துவது என்ற நோக்கில் கூறப்படுமளவுக்கு அது சரியானதும் வரவேற்கத்தக்கதுமாகும். அந்த இலக்குடன் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவதாயின் தமிழ்ச் சமூகத்தைப் பிளவுபடுத்தி நிற்கிற முரண்பாடுகளைச் சரிவரக் கையாள வேண்டும். முரண்பாடுகளைச் சரிவரக் கையாளுவது என்பது அவற்றை முழுமையாகத் தீர்க்க வேண்டியதும் அவசியம் என்பதல்ல.

தமிழ்த் தேசிய இனத்திற்குள் உள்ள முரண்பாடுகள் பகை முரண்பாடுகளாக வளராமல் கவனித்துக் கொள்வதையே முரண்பாடுகளைச் சரிவரக் கையாளுவது என்று இங்கு கருதுகிறோம். அதன் பொருள் முரண்பாடுகளைக் கவனியாமல் விடுவதோ அவை நம்மிடையே இல்லை என்று பாசாங்கு செய்வதோ ஆகிவிடாது.

இலங்கைத் தமிழ்ச் சமுதாயத்தினுள் உள்ள முக்கியமான முரண்பாடுகளுள் வர்க்கம், சாதி, பால் வேறுபாடு என்பன அடங்கும். இதற்கும் மேலாகப் பிரதேசம், மதம் என்பன போன்றனவும் உள்ளன. முதலிற் குறிப்பிட்ட மூன்றும் வெளிவெளியாகவே அதிகார வரன்முறை சார்ந்தும் ஒடுக்குமுறையை உள்ளடக்கியும் அமைந்தவை. பிரதேச, மத வேறுபாடுகளில் ஏற்றத் தாழ்வுகள் பற்றிய கருத்துக்கள் பொதிந்திருந்தாலும் அவை தீர்மானிக்கப்பட்ட சமூக அதிகார அடுக்குக்களாகச் செயற்படுவதிலும் அதிகமாக அல்லது அவ்வாறு செயற்படுவதற்கு மாறாக வேறுபட்ட நலன்களையும் தத்தமது நலன்கட்கான போட்டியுணர்வுகளையுமே முதன்மைப்படுத்துகின்றன. எனவே இவ்வகையான முரண்பாடுகளில் ஒடுக்குமுறை சார்ந்த முரண்பாடுகட்கும் ஒடுக்கு முறை சாராத முரண்பாடுகட்குமிடையே வேறுபாட்டைக்காண வேண்டும். ஒடுக்கு முறை சார்ந்த முரண்பாடுகளைத் தணிப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கும் ஒடுக்கு முறை சாராத முரண்பாடுகளைத் தணிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகசுட்டும் எப்போதுமே வேறுபாடு உண்டு. சரியாகக் கையாளப்படாத போது எளிமையாகத் தீர்க்க கூடியவையான ஒடுக்கு முறை சாராத முரண்பாடுகள் தேவையின்றிப் பகை முரண்பாடுகளாக மாறலாம். இது பற்றி நாம் மிகவும் எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்.

தமிழ்த்தேசியத்தை வலுப்படுத்துவது என்பது இன்னொரு தேசியத்தையோ இன்னும் பலவகைப்பட்ட தேசியங்களையோ வலுவிழக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கக் கூடாது. தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவது தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பை வலுப்படுப்படுத்துவது, அதன் நிலைப்பையும் நீடிப்பையும் பாதுகாப்பையும் வலுப்படுத்துவது, அதன் தனித்துவமான பண்புகளை ஆக்கமான திசையில் வளர்த்தெடுப்பது என்றவாறான நோக்கங்களை உள்ளடக்குவது. தமிழ்த்தேசிய இன அடையாளத்தை வலுப்படுத்தாமல் தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த இயலாது. எனவே தமிழ்ச் சமுதாயத்தின் இருப்புடன் தொடர்பான பண்பாட்டு அடையாளங்களும் ஆக்கமான முறையில் வளர்த்தெடுக்கப்படவேண்டும். இந்த அடையாளம் வலுப்பட வேண்டுமானால் அது காலத்தாற் கழித்துவிடப்பட வேண்டிய கருத்தியல் சிந்தனைகளின் மீதும் நடைமுறைகள் மீதும் தங்கியிருக்க இயலாது. மறுபுறம் வளர்ச்சி, விருத்தி முன்னேற்றம் என்கிற பேர்களில் வெளியிலிருந்து திணிக்கப்படுகின்றவற்றை எல்லாம் கண்மூடித்தனமாக ஏற்பதும் தேசிய இன அடையாளத்தை வலுப்படுத்தாது. அயற் சமூகங்களுடனான பகைமை இங்கு தேவையற்றது. தமிழ்த் தேசிய இனம் என்று சொல்லப்படும்போது, சிங்களத் தேசிய இனத்தின் பேரால் அதன் ஆளும் அதிகார வர்க்கம் நடத்துகிற ஒடுக்குமுறையையே நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

அமெரிக்காவை ஏகாதிபத்தியம் எனும் போது அமெரிக்க மக்களை தனித்தனியாகவோ ஒரு சமூகமாகவோ நாம் ஏகாதிபத்தியவாதிகள் என்று கூறமுடியுமா? ஏகாதிபத்தியம் என்ற அடையாளம், அங்கு ஆளும் அதிகார வர்க்கத்தையும் அதன் ஒடுக்கு முறை, சுரண்டல் இயந்திரங்களையுமே குறிக்கிறது. தமிழ்த் தேசிய அடையாளம் ஒரு விடுதலை சார்ந்த அடையாளம் என்பதால் அந்த விடுதலைக்குப் பங்குயாக உள்ள சக்திகளை அடையாளங் காண்பதும் அவற்றைத் தனிமைப் படுத்துவதுமே தமிழ்த் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தின் மூலோபாயமாக அமைய வேண்டும்.

எனவே தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்துவது என்பது ஒருபுறம் தமிழ்த் தேசிய அடையாளத்துக்குட்பட்ட முரண்பாடுகளைச் சரிவர அடையாளம் கண்டு அவற்றைச் சரிவரக் கையாள்வது பற்றியதும் மறுபுறம் அது தமிழ்த் தேசிய அடையாளத்துக்குப் புறம்பான அடையாளங்களுடனான முரண்பாடுகளைச் சரிவரக் கையாளுவது பற்றியதுமாகும்.

முரண்பாடுகள் பற்றிய கேள்விகள் சரியாக அடையாளங் காணப்பட்டால் மட்டுமே அவற்றை எவ்வாறு கையாளுவது என்ற கேள்விக்குச் சரியான விடைகள் கிடைக்கும். எனவே தமிழ்த் தேசிய இன அடையாளமும் சமூக அமைப்பும் சார்ந்த முரண்பாடுகளையும் அவற்றை எவ்வாறு கையாள்வதன் மூலம் தமிழ்த் தேசியம் தமிழ் மக்களின் நலன்சார்ந்து வலுப்பட முடியும் என்று இனிவருங் கட்டுரைகளிற் கவனிப்போம்.

---

**புலிகளின்** 5ம் பக்க தொடர்ச்சி

முடியாது. ஜே.வி.பி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதை எதிர்த்து அவர்களது இடைக்கால நிர்வாக ஆலோசனைகளை நாட்டைப் பிரிக்கும் திட்டம் எனப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். மேலும் ஹெல உறுமயவின் வளர்ச்சி தமது பேரினவாதப் பாதையில் பாதிப்பை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தினால் பௌத்த சிங்கள பேரினவாதப் பிக்குகளின் பேரினவாதக் கூச்சலைவிட உரத்த குரலில் ஜே.வி.பியினர் முழக்கமிட்டு வருகின்றனர்.

புலிகள் இயக்கம் 19 வருட விட்டுக் கொடுக்காத யுத்தத்திற்குப் பின் தமிழீழக் கோரிக்கை என்ற இடத்திலிருந்து இறங்கி வந்து இடைக்கால நிர்வாகத்திற்கான நகல் திட்ட யோசனைகள் முன்வைத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் பேச்சுவார்த்தையை முன்னெடுக்கவும் காத்திருக்கிறார்கள். இச்சந்தர்ப்பத்தை தென் இலங்கையின் ஆட்சி அதிகார சக்திகள் உரியவாறு கணக்கில் கொண்டு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். அரசாங்கத்தரப்பு மட்டுமன்றி எதிர்க்கட்சியும் கள்ளம் கபடமற்ற அரசியல் பங்களிப்பை வழங்க வேண்டும் என்பது சமாதானத்தை விரும்பும் அனைத்து சக்திகளின் விருப்பமாகும்.

நாடு மீண்டும் ஒரு யுத்தத்தில் மூழ்கி சின்னா பின்னமடைந்து நாசத்தை நோக்கிச் செல்வதா அல்லது தெற்கின் பேரினவாதக் கூச்சல்கள் செயற்பாடுகளைக் கைவிட்டு புலிகளின் இடைக்கால நிர்வாக ஆலோசனைகளை பேச்சுக்கு எடுத்து புரிந்துணர்வுவிட்டுக் கொடுப்புடன் தீர்வு நோக்கி ஆளும் அதிகார உயர்வர்க்க சக்திகளே தீர்மானிக்க வேண்டும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும்

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

அரச உதவி பெறும் பாடசாலைகளை 1960ம் ஆண்டு அரசாங்கம் பொறுப்பேற்ற போது அதற்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. உண்மையில் அரசாங்கம் மிக நியாயமாகவே நடந்து கொண்டது. அரசாங்கச் செலவில் பாடசாலைகளை நடத்தி வந்த மத நிறுவனங்களுக்கு அப்பாடசாலைகளைத், தாம் விரும்பினால், சொந்தச் செலவில் தனியார் பாடசாலைகளாக நடத்தும் உரிமையும் வழங்கப்பட்டது. அதை ஏற்ற சில பாடசாலைகள், மாணவர்களிடம் கட்டணம் வாங்கும் தனியார் பாடசாலைகளாகின. மற்றப் பாடசாலைகளுக்கும் அவற்றின் மத அடையாளத்தைப் பேணும் உரிமை ஏற்கப்பட்டது. எனினும் மதபீடங்களின் நிருவாகத்தினின்று அவை விலக்கப்பட்டன.

இதன் விளைவாகக் கல்வி வசதிகளைப் பயன்படுத்தி மதம் மாற்றும் முயற்சிகட்குத் தடை ஏற்படுத்தப்பட்டது. பாடசாலைகளில் சாதிப் பாகுபாட்டையும் தீண்டாமையையும் தொடர்வதற்கு இருந்து வந்த வசதிகளும் இதனால் குறைக்கப்பட்டன. இவை மட்டுமன்றிப், பாடசாலை நியமனங்களில் இருந்த மத நிறுவனக் குறுக்கீடும் நிறுத்தப்பட்டது. இவை முக்கியமான சாதகமான விடயங்கள்.

**பாடசாலைக் கல்வி சீரழிந்து ற்யூட்டறிகள் மேலோங்கின. ஆசிரிய சேவை மனப்பான்மை மங்கி பண வருவாய்க்கு கல்வி பலியாகிறது.**

மறுபுறம், பாடசாலை ஆசிரியர் பதவி இன்னொரு அரசாங்க உத்தியோகம் போலாகிவிட்டது பாடசாலைகளிலிருந்து அரசியற் காரணங்களுக்கான இடமாற்றங்கள், அரசியற் குறுக்கீடு போன்றவை படிப்படியாக இடம் பெற்றன. பாடசாலைகளின் தேசியமயமாக்கலை அடுத்த சில ஆண்டுகளில் புதிய பாடசாலைகள் பல நிறுவப்பட்டன. மத்திய மகா வித்தியாலயங்கள் நிறுவப்பட்டதன் மூலம், விஞ்ஞானக் கல்வியும் க.பொ.த உயர் நிலை வகுப்புக்களுக்கான பாடசாலைகளுக்குப் போகும் வாய்ப்பு பின் தங்கிய மாவட்டங்களுக்கும் கிட்டின. எனினும் பாடசாலை இறுதி ஆண்டுவரை கற்கும் மாணவர்களின் தொகை கூடிக் கொண்டு சென்ற வேகத்திற்கு ஈடு செய்யுமளவில் பாடசாலைகளின் தொகை வளரவில்லை.

நகர்ப்புறப் பாடசாலைகள் மீதான கவர்ச்சி, குறிப்பாகப் பேர் பெற்ற பாடசாலைகள் மீதான கவர்ச்சி ஒரு புறமாகவும் எல்லா வசதிகளும் உடைய பாடசாலைகளை நிறுவுவதில் நிதி நெருக்கடி உட்பட்ட பல்வேறு சிரமங்கள் மறுபுறமாகவும் ஏற்கெனவே உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் தொகையைக் கூட்டும்படியான கட்டாயங்களை ஏற்படுத்தின. 1960 வரை எந்தப் பாடசாலையிலும் 1000 மாணவர்கட்கும் அதிகமாக இருந்ததில்லை எனலாம். இத்தொகை படிப்படியாகக் கூடி வந்தாலும் பெரிய பாடசாலைகள் எனப்பட்ட பிரபல அரசாங்கப் பாடசாலைகளில் வகுப்புக்களின் எண்ணிக்கை 1970க்குப் பின்பு துரிதமாகக் கூட்டப்பட்டது. இப்போது 5000க்கு மேற்பட்ட மாணவர்கள் பயிலும் பாடசாலைகள் கணிசமான அளவில் உள்ளன. பத்தாயிரத்துக்கு கூடுதலான மாணவர்கள் கொண்ட பாடசாலைகளும் உள்ளதாகவும் அறிகிறேன். வகுப்புக்களின் அளவும் முன்பு முப்பதிலிருந்து இப்போது நாற்பதை எட்டிவிட்டன.



**பாடசாலைகள் சமூகத் தகுதியை இழந்துள்ளன ஆசிரியர்கள் சமூக முக்கியத்துவத்தை இழந்துள்ளனர் மாணவர்கள் பல்வேறு பயன்களை இழக்கின்றனர்**

இப்படிப்பட்ட ஒரு பாடசாலைச் சூழலில் பாடசாலைக்கும் மாணவர்கட்கும் இடையிலும் பாடசாலைக்கும் பெற்றோருக்கும் இடையிலும் ஆசிரியர்கட்கும் மாணவர்கட்குமிடையிலும் இருக்கக் கூடிய நெருக்கமும் ஆரோக்கியமான உறவும் மிகவும் பாதிக்கப்படுகின்றன. அதைவிட, பாடசாலைகளில் பாடவிதானத்திற்கமையப் பாடங்களைக் கற்பிப்பது ஆசிரியர்களது கடமையாக அமைவதால், மாணவர்களளை உயர் பரீட்சைகளில் அதிகம் புள்ளிகள் பெறுமாறு பரீட்சைக்கென்றே பயிற்றுவிப்பது சிரமாகிறது. இந்தத் தேவையை நிறைவு செய்யத் தனியார் கல்விப் போதனைக் கூடங்கள் (ற்யூட்டறிகள்) வந்து சேர்ந்தன.

ற்யூட்டறிகட்கு முன்னோடியாகப் பாடசாலை ஆசிரியர்கள் தனிப்பட்ட முறையில் மாணவர்கட்கும் போதனை வழங்கும் வழக்கம் ஏற்பட்டது. பல பாடசாலைகளில், ஒரு காலத்தில் சுயவிருப்பின் பேரில் சில ஆசிரியர்கள் இலவசமாகச் செய்து வந்த ஒரு தன்னார்வப்பணி கல்வித் தகுதிகட்கான போட்டி வலுப் பெற்ற சூழலில் பண வருவாயை மனதிற் கொண்டு செய்யும் இரண்டாவது தொழிலாக மாறியது.

ஒரு ஆசிரியர் தனது மாணவர்கட்குத் தனிப்பட்ட முறையில் பணத்துக்காகப் போதனை வகுப்புக்களை நடத்துவது ஒழுக்க நியதிகட்கு ஏற்புடையதல்ல என்பதாலும் அதன் விளைவாக வகுப்பிற் காட்டப் படக்கூடிய பாரபட்சம் பற்றிய கவலைகளாலும் ஒரு பாடசாலையிற் கற்பிக்கும் ஆசிரியர் அதே பாடசாலையின் மாணவர்கட்கு ற்யூஷன் கொடுப்பதற்குப் பாடசாலை விதிகள் தடைவிதித்தன. என்றாலும் ஓரளவு வசதியுள்ள பெற்றோரோ அவர்களது பிள்ளைகளோ ற்யூஷனை ஒழிப்பதை விரும்பவில்லை. மேலதிக வருவாய் தரும் ஒரு தொழிலைத் துறக்க ஆசிரியர்களும் விரும்பவில்லை. எனவே ற்யூஷன் முறை வேறு விதமாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. இரு வேறு பாடசாலைகளில் ஒரே பாடத்தைக் கற்பிக்கும் இரு ஆசிரியர்கள் தமது மாணவர்களை ஒருவர் இன்னொருவரிடம் அனுப்பித் தமது மேலதிக வருவாய்க்குக் கேடின்றிக் கவனித்துக் கொள்ள முடிந்தது.

அதேவேளை, க.பொ.த சாதாரண, உயர்நிலைப் பாடசாலைகட்குத் தோன்றும் மாணவர்களது எண்ணிக்கையும் வேகமாகப் பெருகியதால், பரீட்சைகளின் நிருவாகமும் சிக்கலடைந்தது. வினாத்தாள்களை அமைப்பதிலும் திருத்துவதிலும் முறை கேடுகளுக்கு வாய்ப்புக்கள் அதிகமாகின. இவற்றைத் தவிர்க்கவும் முறைப்பாடுகளிலும் குற்றச் சாட்டுகளினின்று தப்பிக் கொள்ளவுமாகவும் பெருந்தொகையான விடைத்தாள்களை வேளைக்கு திருத்தித் தரவும் ஏற்ற விதமாகப் பரீட்சை முறையில் சில மாற்றங்கள் புகுத்தப்பட்டன. எனினும், இவை காலப்போக்கில் எதிர்பார்த்தற்கு நேர்மாறான விளைவுகளையே தந்தன.

### பேராசிரியர் சி. சிவசேகரம் (12)

சரியான விடையை அடையாளங் காணும் வினாக் கொத்துக்கள் வரையறைக்குட்பட்ட வினாக்கிலிருந்தே தொகுக்கப்பட்டன. எனவே ஏராளமான வினாக்களையும் விடைகளையும் சேர்த்தே பாடமாக்கும் பழக்கம் ஊக்குவிக்கப்பட்டது. கட்டுரை அல்லது விளக்கங்களுடன் கூடிய விடைகளை தனித்தனியாகத் திருத்தும் வழமை முன்பு இருந்தது. இப்போது விடைகளைத் திருத்துவோர், ஒரு நடத்துனரின் ஆணைக்கமையத் திருத்துகின்றனர். எனவே கட்டுரைகளும் விளக்கங்களும் மட்டுமன்றிக் கணக்குகளும் கிளிப்பிள்ளைப் பாங்காகவே கற்பித்து ஒப்பிக்கப்படும் ஒரு நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இன்றைய மாணவர்கள் பெரும் தொகை யான விடயங்களை மனதில் வைத்திருக் கும் நினைவாற்றலைப் பெற்றுள்ளனர். ஆனால் அவற்றை விளங்கியும் ஒன்றோ டொன்று உறவுபடுத்தியும் வேறுபடுத்தி யும் அறியும் வழக்கம் அவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.

பரீட்சை முறையின் சீரழிவின் விளைவாகவே ற்யூட்டறிகளால் பாடசாலைகளை விடச் சிறப்பாக மாணவர்களைப் பரீட்சையில் சித்தி பெறவைக்கும் ஆற்றலைப் பெற முடிந்தது. ஒரு பாடசாலை ஆசிரியரால் பாடசாலை நேரத்தில் பாடவிதானத்திற்கமையவே கற்பிக்க இயலும். ற்யூட்டறிகளோ அறிவு பற்றிய அக்கறையின்றிப் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளைப் பெறும் உபாயங்களில் மாணவர்களைச் சிறப்பிக்க இயலும்.

அறிவை விடப் பரீட்சைப் பெறுபேறு களே முக்கியமாகிவிட்ட சூழ்நிலையில், மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெற ற்யூட்டறிகளையே நாடவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. திறமை மிக்க மாணவர்கள் பலரும் பரீட்சைப் பெறுபேறுகளுக்காக ற்யூட்டறிகளில் தனிப்பட்ட போதனாசிரியர்களிடமோ ற்யூஷன் பெறுகின்ற நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு காலத்தில் படிப்பில் மந்தமானவர்களே ஏதாவது சில பாடங்களுக்கு ற்யூஷனுக்குப் போவார்கள். அவ்வாறு போவதை முடிந்த வரை இரகசியமாகவே செய்வார்கள். ற்யூஷனுக்குப் போவது வெட்கப்பட வேண்டிய விடயமாக இருந்தது. இது 1960 வரையிலும் சிறிது அப்பாலும் இருந்து வந்த நிலைமை. ஏறத்தாழப் 15 ஆண்டுகளுள் நிலைமை தலைகீழாகி விட்டது. இன்று ற்யூஷனுக்குப் போகவில்லை என்று எவரும் சொன்னால் அதை யாருமே நம்ப முடியாதளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

ற்யூட்டறிகளது வருகையால் பாடசாலைகள் தமக்கிருந்த சமூகத் தகுதியை இழந்துள்ளன. பாடசாலை ஆசிரியர்கள் தமது சமூக முக்கியத்தைப் பெரிதும் இழந்துள்ளனர். மாணவர்கள் பாடசாலைகளின் மூலமே பெறக் கூடிய பல வேறு பயன்களை இழந்துள்ளனர். இவை பற்றி வேறொரு சமயம் கவனிப்போம்.

---

# அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும்

## வெனிசுலா மக்களும் அரசாங்கமும்

ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆதிக்க மிரட்டலை அதே கண்டத்திலிருந்து எதிர்த்து நிற்கும் தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றுதான் வெனிசுலா. இரண்டரைக் கோடி மக்கள் தொகை கொண்ட அந்நாடு உலகின் பெரும் எண்ணெய் உற்பத்தி நாடுகளில் குறிப்பிடத்தக்கதாகும். அமெரிக்காவிற்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் நாலாவது இடத்தை வகிப்பது வெனிசுலா நாடாகும். அமெரிக்க ஏகாதிபத்தியம் எப்பொழுதும் தனது கண்டத்தின் தென் பகுதி நாடுகளான வெனிசுலா போன்ற மூன்றாம் உலக நாடுகளைத் தனது கொலனிகளாக வைத்திருப்பதையே நோக்காகக் கொண்டு பொருளாதாரச் சுரண்டலையும் அரசியல் ஒடுக்கு முறை ஆதிக்கத்தையும் கொண்டிருந்தது.

ஆனால் அமெரிக்க ஆதிக்கத்தை எதிர்த்து நிற்பதில் வீரம் மிக்க இலத்தீன் அமெரிக்க நாடுகளின் மக்கள் எப்பொழுதும் முன்னணியில் இருந்து வந்துள்ளனர். அத்தகைய பாரம்பரியத்தையுடைய வெனிசுலா மக்கள் அமெரிக்க சார்பு ஆட்சி அதிகாரத்தைக் கொண்ட பிற்போக்கு வெனிசுலா ஆட்சியை தோற்கடித்து கூஹோ சாவேய்ஸ் தலைமையிலான முற்போக்கு அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்தனர். பழைய அரசியலமைப்பை மாற்றியமைத்து முற்றிலும் மக்களின் பொருளாதார சமூக மாற்றங்களுக்கும் அன்றாட வாழ்க்கைத்தர மேம்பாட்டுக்கும் ஜனாதிபதி சாவேய்ஸ் தலைமையில் அரசாங்கம் செயலாற்றி வந்துள்ளது. எண்ணெய் வளமுடைய வெனிசுலாவின் மக்கள் வறுமை, கல்வியறிவின்மை, சுகாதாரமின்மை, தாழ்ந்த வாழ்க்கைத்தரம் என்பனவற்றுடனே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். தரகு முதலாளிகளும் நிலச் சொந்தக்காரர்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்து நாட்டைச் சூறையாடி வந்த நிலை தற்போது மாற்றப்பட்டு வருகிறது.

முற்றிலும் உழைக்கும் சாதாரண மக்களது பொருளாதார கல்வி சுகாதார விடயங்களிலும் நாட்டை கட்டியெழுப்புவதிலும் கியூபா நாட்டின் முன்னுதாரணங்கள் வெனிசுலா அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்டு வருகிறது. இதனைப் பொறுக்க முடியாத அமெரிக்க ஏகாதிபத்திய ஆளுவோர் சாவேய்ஸ் தலைமையிலான அரசாங்கத்தை சதிகள் மூலமும் கொலம்பிய நாட்டுக் கூலிப்படைகள் மூலம் கவிழ்க்க முயன்று வந்துள்ளனர். அம்முயற்சி பலிக்காது போகவே அரசியல் சாசனத்தின் ஒரு விதிக்கமைய சர்வசன வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதியை பதவி விலகச் செய்யும் முயற்சியில் இறங்கினர். அதன்படி கடந்த ஆகஸ்ட் 15ந் திகதி மேற்படி சர்வசன வாக்கெடுப்பு நடைபெற்றது. முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தலைமையிலான சர்வதேச தேர்தல் கண்காணிப்பின் கீழ் நடைபெற்ற தேர்தலில் தற்போதைய ஜனாதிபதிக்கு ஆதரவாக 57 வீத வாக்குகள் அளிக்கப்பட்டு அவரது பதவி உறுதிப்படுத்தப்பட்டது. தேர்தல் நியாயமாக நடைபெற்றதை கண்காணிப்புக் குழு உறுதி செய்து கொண்டது. இது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வெனிசுலா மக்கள் வழங்கிய பலத்த அடியாக அமைந்து கொண்டது. இருப்பினும் சாவேய்ஸ் தலைமையிலான அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு பலவழிகளிலும் வெள்ளை மாளிகையின் ஆளும் வர்க்க அமெரிக்க பிசாசுகள் முயன்று கொண்டே இருக்கும். வெனிசுலாவின் தரகு முதலாளிகள், நிலவுடமையாளார்கள் என்போரிடம் இணைந்து முன்பு சிலியில் செய்ததைப் போன்று முயலுகிறார்கள். ஆனால் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு பாரம்பரியம் மிக்க வெனிசுலா மக்கள் சகல சதிகளையும் எதிர்ப்புகளையும் முறியடிப்பார்கள் என்பதை அண்மைய சர்வசன வாக்கெடுப்பில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.



கடந்த ஆகஸ்ட் 15ம் திகதி வெனிசுலாவில் இடம்பெற்ற சர்வசன வாக்கெடுப்பில் அமோக வெற்றிபெற்ற ஜனாதிபதி ஹீயூகோ சாவேஸ் அரசியலமைப்பு பிரதியுடன் காணப்படுகின்றார்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# மலையகத்திற்கான அனுதாபக் குரல்கள் தேர்தல் காலத்தில் எங்கே சென்றன?

மலையக மக்களுக்காகவும் குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களுக்காகவும். இப்போது சிலர் தமிழ் ஊடகங்களில் பெரும் குரல் வைத்து வருவதைக் காண முடிகின்றது. தொழிற்சங்கத் தலைமைகளையும் பாராளுமன்ற அரசியல் தலைவர்களையும் வாங்குவாங்கென அம்பலப் படுத்தி கட்டுரைகள் கவிதைகள் வந்த வண்ணம் உள்ளன. இவை நேர்மையாகவும் மலையக மக்கள் மீதான அக்கறையிலும் செய்யப் படுகிறதா அல்லது ஊடகப் பிரசாரங்களுக்கும் பத்திரிகை விற்பனை அதிகரிப்புக்குமாகச் செய்யப் படுகிறதா என்ற ஐயம் எழுகிறது.

ஏனெனில் மலையக தொழிற் சங்க அரசியல் தலைமைகள் பாராளுமன்ற மாகாணசபைத் தேர்தல்களில் பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து தாமே மலையகத்தின் இரட்சகர்கள் என வலம் வந்த போது இப்பொழுது கண்டனக் குரல் எழுப்பும் சிலரும் பத்திரிகைகளும் எங்கு இருந்தனர்.

இப்பொழுது வெளியிடும் கருத்துக்களை அவ்வேளை தொழிற் சங்க தலைமைகள் கொடுத்த நாளாந்த விளம்பரங்களின் பணத்திற்காக வாய் பிளந்து நின்று அவர்களது பொய் வாக்குறுதிகளையும் ஏமாற்றுக்களுடன் செய்திகளாகவும் வெளியிட்டும் வந்தன. அதேவேளை பொய் முகம் காட்டிய தலைமை களுக்கு மாற்று சக்தியாக நின்று பணபலம் இல்லாது விடினும் மலையக மக்களின் விமோசனத்திற்கான கருத்துக்களை முன்வைத்து தேர்தல் களத்தில் நின்ற சக்திகளை இதே ஊடகங்கள் பத்திரிகைகள் இருட்டடிப்புச் செய்து வந்த கைங்கரியத்தை எவரும் மறந்து விடுவதற்கில்லை.

இன்று மலையக மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பரிந்து நின்று அழுது வடிப்பவர்கள் தற்போதைய தொழிற்சங்க அரசியல் தலைமைத்துவத்தை எதிர்த்து அல்லது அம்பலப்படுத்தி வேறு எதை எதிர்பார்க்கிறார்கள். புதிய தொண்டமான்களும் சந்திரசேகரன்களும் வந்து மலையக மக்களை புதிய கோல் கொண்டு மேய்க்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள். மலையகத்தின் புத்திஜீவிகள் எனப்படுபவர்களில் பலர் நெஞ்சில் உரமும் இன்றி நேர்மைத்திறனும் இன்றி தமது பதவி பட்டத்தின் இருப்பிற்காக தலை சொறிந்து இதே தலைமைகளுக்குப் பின்னால் செல்பவர்களாகவே உள்ளனர். சிலர் வாய் சொல்லில் வீரர் எழுத்திலும் சளைக்காது நிற்பர். ஆனால் தேர்தல் வந்து தீர்மானம் எடுக்கும் நிலையில் பதுங்கி ஒதுங்கி நின்று ஏதோ வகையில் இவ் ஆதிக்கத் தலைமைகளுக்கு கிட்ட இல்லாதுவிடினும் தூர நின்று செயல்பட்டுக் கொள்வர்.

அதேவேளை மலையகத்தின் ஆதிக்க அரசியல் தொழிற் சங்க தலைமைகளின் முன்னால் துணிந்து நின்று விரல் சுட்டி மாற்றுக் கருத்துக்களை தாங்கிச் சென்ற புத்திஜீவிகளும் ஆசிரியர்கள் மாணவர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டமை குறிப்பிடத்தக்க தாகும். அவர்கள் அம்பலப்படுத்த வேண்டியவற்றை அம்பலப்படுத்தி மலையக மக்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு கூற வேண்டியவற்றைத் துணிந்து கூறிச் செயல்பட்டமை நம்பிக்கை தருவதாகவே இருந்தது. உரிய தருணத்தில் சொல்ல வேண்டிய வேளையில் நெருக்கடிகளுக்கு அஞ்சாது மக்களுக்கு உண்மைகளையும் சரியானவற்றையும் எடுத்துக் கூறி நின்ற நெஞ்சுரம் மலையகத்தில் எதிரொலித்த மக்களையும் தொழிலாளர்களையும் விழிப்படையச் செய்யும் என்ற நம்பிக்கை வலுவடைந்து வருகிறது. பொய் முகம் காட்டுவோரும் தொழில் சொத்து சுகம் தேடி நின்று தம்மை மேலோங்கச் செய்வோரும் மலையக மக்களுக்கோ தோட்டத்தொழிலாளர்களுக்கோ உதவப் போவதில்லை. உண்மையும் நேர்மையும் உறுதியான கொள்கையும் வெற்றிபெறவே செய்யும்.

# எண்ணெய் ஆயுதம் மீண்டும் இந்தியா

புதிய பூமியின் சென்ற இதழில் எழுதிய விடயத்தில் ஒரு முக்கியமான தகவலைக் குறிப்பிடத்தவறி விட்டேன். அந்தத் தகவலில் இந்தியாவின் உள்நோக்கத்தை மேலும் அம்பலப்படுத்தும். இந்தியா அதன் எரிபொருள் தேவையில் 70 வீதம் (எழுபது) வீதத்தை இறக்குமதி செய்கிறது. 30வீத எண்ணெயை மட்டுமே உள்நாட்டில் உற்பத்தி செய்கிறது. இந்தியா இலங்கையின் எண்ணெய் தேவையின் ஒரு பகுதியை வழங்க வேண்டுமாயின் அதை சுத்திகரிக்கப்பட்ட நிலையிலேயே வழங்க முடியும்.

இந்தியாவிடமிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதால் இலங்கையில் பெட்ரோலியப் பொருள்களின் விலையைச் சீராக வைத்திருக்க முடியுமென இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் சாலியா மெதகம கூறிய செய்தி பத்திரிகைகளில் வந்து கொண்டிருக்கையிலேயே பெட்ரோல், டீசல் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்ட் 15ம் திகதி இந்தியாவின் குடியரசு தினச் செய்தியில் இந்தியாவின் உயர் ஸ்தானிகர் நிருபம் சென் அவர்கள் இலங்கைக்கு இந்தியா எண்ணெய் வழங்குதவன் மூலம் இலங்கையில் பெட்ரோலியப் பொருட்களின் விலையைச் சீராக வைத்திருக்க முடியும் எனவும் கூறியிருப்பது விசித்திரமாகவுள்ளது. உலக சந்தையில் எண்ணெய்விலை அதிகரித்துள்ள நிலையில் உள்நாட்டில் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாதென அரசு கூறுகிறது.

இந்தியாவிடமிருந்து சுத்திகரிக்கப்படாத எண்ணெயை இறக்குமதி செய்தால் அதை இலங்கையில் சுத்திகரிக்கப்பட முடியாதெனவும் அது வேறு ஒரு ரகம் எனவும் கூறினார்கள். இந்தியாவே அதன் தேவையில் 70வீதத்தை இறக்குமதி செய்யும் போது அதை இலங்கைக்கு இலகு தவணையில் கொடுக்க முடியாது என்பதே உண்மை.

இது இவ்வாறிருக்க பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பகுதி விநியோகத்தை மூன்றாந்தரப்புக்கு விற்கும் முயற்சியில் கேள்வி கோரப்பட்டது. அதில் ஆகக் கூடிய தொகையை சீன நிறுவனம் தெரிவித்திருந்தது.

ஆனால் அது நிராகரிக்கப்பட்டு இந்தியாவின் மற்றொரு கம்பனியான பாரத் எண்ணெய் கம்பனிக்கு மூன்றில் ஒரு பகுதி உரிமை வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவிடம் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் இரண்டு பங்கு ஆதிக்கத்தை கொண்டு வரும் முயற்சியே இது. இச்செயல் இந்தியமிரட்டலால் நடைபெறவில்லை என்று கூற முடியுமா? இந்த மூன்றாந்தரப் பாகவரவுள்ள இந்திய எண்ணெய்க் கம்பனி குறைந்தவிலையில் எரி பொருளை விற்க முன்வர மாட்டாது மட்டுமல்ல அப்படிச் செய்வதை இந்தியாவின் கட்டுப்பாட்டில் இருக்கும் ஐ.ஓ.சி அனுமதிக்கப் போவதில்லை. அதன் பணிப்புரையை மீறி மூன்றாந்தரப்பாக வரும் இந்தியக் கம்பனி எந்த நடவடிக்கையையும் செய்யப்போவதில்லை.

இலங்கையின் எண்ணெய்த் தேவையின் முக்கால்வாசி அண்மைக்காலம் வரை ஈரானிடமிருந்தே பெறப்பட்டது.

எண்ணெயின் விலையை சீராக வைத்திருக்க வேண்டுமானால் ஒபெக் நிறுவனத்துடனே பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். ஒபெக் நாடுகளுடன் இலங்கை நல்ல உறவைக் கொண்டுள்ளதால் அவற்றுடன் பேசுவதால் மட்டுமே ஓரளவாதல் எண்ணெய் விலையைச் சீராக வைத்திருக்க உதவும் இலங்கையைச் சகல வழிகளாலும் தன் ஆதிக்கத்திற்கு உட்படுத்தி நிற்கும் அதேவேளை எண்ணெய் உற்பத்தியில் மிகக் குறைந்த இடத்தை வகிக்கும் இந்தியாவிற்கு எண்ணெயின் பிடியை இலங்கை தாரைவார்க்க முயல்வது தற்கொலை முயற்சியாகவே அமையும். இந்நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபன தொழிலாளர்கள் ஊழியர்களின் தனியார் மயப்படுத்தலுக்கு எதிரான கோரிக்கை உட்பட ஏனைய கோரிக்கைகள் நியாயமானவைகளேயாகும்.

- சீறி -

# புதிய கூட்டு ஒப்பந்தம் இன்னொரு காட்டிக் கொடுப்பு

இ.தொ.கா, இ.தே.தோ.தொ.சங்கம், தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டி என்பன இலங்கை முதலாளிமார் சம்மேளனத்துடனான புதியதொரு கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு மீண்டும் ஒருமுறை தோட்டத் தொழிலாளர்களை காட்டிக் கொடுக்கவிருக்கின்றன.

ஏற்கனவே இரண்டுமுறை தோட்டக் கம்பெனிகளை பிரதிநிதித்.துவம் செய்யும் இலங்கை முதலாளிமார் சம்மேளனப் பிரதிநிதிகளை மேற்படி தோட்டத் தொழிற்சங்க பிரதிநிதிகள் சந்தித்து பேசிவிட்டனர். மூன்றாவது பேச்சுவார்த்தை செம்டெம்பர் 6ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதன் பின்னர் பேச்சுவார்த்தை மீண்டும் ஒரு திகதிக்கு ஒத்தி வைக்கப்படும்.

அதன்பின்னர் தோட்டக் கம்பெனிகளின் சார்பில் ஏற்கனவே முன்மொழியப்பட்டுள்ள நாளொன்றுக்கு இரண்டு ரூபாய் சம்பளவுயர்வை மேற்படி தொழிற் சங்கங்கள் ஏற்றுக் கொண்டு அதனை தொழிலாளர்கள் மீது திணிக்கப் போகின்றன. தோட்டத் தொழிற் சங்கங்கள் இதற்கான இணக்கத்தை இரகசியமாகதெரிவித்துவிட்டதாக கூறப்படுகிறது. அடிப்படை சம்பள உயர்வில் இரண்டு ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், அதிகபட்ச சம்பளத்தில் (நிரந்தரமில்லாத, வேலை நாட்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் அலவன்ஸ்) பத்து ரூபாய் கூட்டப்பட்டுள்ளதாகவும் கூறி அதன் மூலம் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 12 ரூபா சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தொழிற் சங்கங்கள் கூறப்போகின்றன.

ஆனால் உண்மையில் கிடைக்கப் போவது இரண்டு ரூபாய் சம்பள உயர்வு மட்டுமே. இந்த காட்டிக் கொடுப்பைச் செய்து விட்டு அதனை நியாயப்படுத்த முடியாது என்பதற்காகவே தொழிற் சங்கங்கள் பேச்சுவார்த்தை என்ற பெயரில் கூடிக் கலைந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் இந்தக் காட்டிக் கொடுப்பை முன்னர் போல் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் மௌனமாக இருந்து கொண்டு ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அக்காட்டிக் கொடுப்பிற்கு எதிராக தொழிலாளர்கள் போராட்டங்களை செய்யத் தயாராக இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

தோட்டக் கம்பெனிகளுக்கு மட்டுமே நன்மை பயப்பதாக இருக்கும் கூட்டு ஒப்பந்த முறை இரத்து செய்யப்பட்டு தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வை உறுதி செய்யும் புதிய முறை ஏற்படுத்தப் படுவதே சிறந்த தீர்வாகும்.

# இந்தியாவை அண்ணாந்து பார்த்தல்

ஈழவேந்தனும் சரி தமிழ்க் கூட்டமைப்பினர் அனைவரும். இந்தியாவையோ அல்லது அமெரிக்காவையோ இன்றுவரை எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கண்டித்ததில்லை. அதேபோல யூஎன்.பியையும் கண்டித்ததில்லை.

வியட்நாமில் விடுதலைப் பேராட்டம் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் உலகம் பூராவும் அமெரிக்க ஆக்கிரமிப்பை கண்டித்த போது மௌனம் சாதித்த பெருமை அன்றைய தமிழரசுக்கட்சிக்குரியது. அமெரிக்கா மூக்குடைபட்டு வியட்நாமில் இருந்து வெளியேறிக் கொண்டிருந்த சமயம் வியட்நாமியத் தலைநகரில் இருந்த தமிழ் வியாபாரிகளுக்கும் தமிழ் வட்டிக் கடைக்காரருக்கும் என்ன நேர்ந்தது எனக் கேள்வி எழுப்பின பெருமையும் "சுதந்திரன்" பத்திரிகைக்குரியது.

பா.உ.என்ற அந்தஸ்துடன் இந்தியா சென்ற ஈழவேந்தன் திருப்பி அனுப்பப் பட்டார். அமெரிக்காவில் பா.உ.சம்பந்தன் ஐயா துகிலுரியப்பட்டார். ஈழவேந்தன் இந்தியாவைப் பற்றி இன்றும் அடக்கி வாசிக்கிறார். சம்பந்தன் ஐயா அமெரிக்கா பற்றி எதுவும் வாய்திறக்கவில்லை.

ஈழவேந்தன் இந்தியாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்டமைக்கு இந்திய நிர்வாகத்தைக் குறைகூறிய அதே சமயம் இந்தியத்தலைவர்கள் பற்றி ஏதும் கூறவில்லை. ஆனால் கிடைக்கும் செய்திகளின்படி "மேலிடத்து" உத்தரவின்படியே அவர் நாட்டைவிட்டு வெளியேற்றப் பட்டார். இலங்கையில் என்ன சம்பவம் நடந்தாலும் அதற்குச் சந்திரிக்கா பொறுப்பு எனக் கூறுபவர்கள் நாடுகடத்தல் விடயத்தில் இந்திய "நிர்வாகத்தினரின்" கெடுபிடியென மழுப்புகிறார்கள்.

இது போதாதென்று பிராந்திய ஆதிக்கத்தை மும்முரமாக முன் எடுத்துவரும் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து 20 வருட கோர யுத்தத்தின் பின் தமிழர்களுடைய நிலைப்பாட்டை விளக்குவதற்கு கூட்டமைப்பினர் அங்கு செல்லவுள்ளனர் என்றும் ஊடகங்களில் அறிய முடிகிறது.

நண்பன் யார்? எதிரியார்? என்பதை தெளிவாக விளங்கிக் கொள்ளாத வரை இழப்புக்களை இது போன்ற அவலநிலை தொடரும்.

தமிழ்த் தலைமை என்றுமே இந்தியாவைத் தாய்நாடு என்றே கூறிவந்துள்ளது. ஈழவேந்தன் வார்த்தைகளில் கூறுவதனால் தொப்புள் கொடி உறவு. இந்தியாவைத் தாய்நாடு எனக் கொள்பவர்களுக்கு இலங்கை வாழ் தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் தேவையற்றது எனக் ஹெல உறுமயப் பேரினவாதிகள் கூச்சலிடுவது கேட்கவில்லைப் போலும். தாய்நாடு பேத்தி நாடு எனக் கூறும் கூட்டமைப்பினர் இதை எப்போதுதான் புரிந்து கொள்வார்களோ தெரியாது.

உலகப்படத்தைப் பார்த்தால் இந்தியா மேலேயும் இலங்கை கீழேயும் இருப்பதை நாம் அவதானிக்கலாம். அதனால் போலும் இந்தியாவை அண்ணாந்து பார்க்கிறார்கள் என தோழர் கார்த்திசேன் நகைச்சுவையாகக் கூறியது இங்கு ஞாபகம் வருகிறது.

# வவுனியா பெரிய கட்டு கிராம உத்தியோகத்தர் தாக்கப்பட்டதேன்?

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெரியகட்டு கிராம உத்தியோகத்தர் அதே பகுதியில் தாக்கப்பட்ட சம்பவம் சமூக நலன் விரும்புவோர் மத்தியில் விசனத் தையும் வேதனையையும் உரு வாக்கி உள்ளது. அப்பகுதியில் மக்களின் அன்றாடவாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய சமூக விரோதச் செயல்களில் ஈடுபடும் ஒரு கோஷ்டியினரே கிராம உத்தி யோகத்தர் த.ஸ்ரீகாந்தன் மீது மோச மான தாக்குதலைத் திட்டமிட்டுச் செய்திருப்பதாகவே அப்பகுதி மக்கள் நம்புகின்றனர். மேற்படி கிராம உத்தியோகத்தர் தன் கடமையின் நிமித்தம் சமூக விரோதக் குற்றச் செயல்களில் ஈடுபடுவோரை அவ் வாறு செய்ய வேண்டாம் என்றும் அதனையும் மீறிச் செய்தவர் களை சட்டத்தின் முன் கொண்டு சென்றதாலுமே இவ்வாறான தாக்குதலுக்கு ஆளாகி உள்ளார் என்று ஸ்ரீ லங்கா ஐக்கிய கிராம உத்தியோகத்தர் சங்க வவுனியா மாவட்ட கிளை கண்டனம் தெரிவித்துள்ளது.

சில ஊடகங்களின் வவுனியாப் பிரதிநிதிகள் அப்பகுதி சமூக விரோத சக்தியினருக்கும் தாக்குதலில் ஈடுபட்டவர்களை நியாயப்படுத்தியும் செய்தி வெளியிட்டமையை மேற்படி சங்கம் வன்மையாகக் கண்டித்தும் உள்ளது. நேர்மையுடன் சமூக அக்கறையுடன் செயல்படும் கிராம உத்தியோகத்தர்கள் மீது பழி சுமத்தி சேறு பூசுவதைவிட நடந்தவைகளின் உண்மைத்தன்மை அறிந்து அநீதிக் கும் சமூக விரோத செயல்களுக்கும் துணை போகாது மக்களுக்காக குரல்கொடுப்பதே சரியானதாகும். ஆதலால் கிராம உத்தியோகத்தர் சிறிகாந்தன் தாக்கப்பட்டமை கண்டிக்கப்படல் வேண்டும். இது போன்ற சம்பவங்கள் வவுனியாப் பகுதிகளில் நடைபெறுவது தடுக்கப்பட வேண்டும்.

செட்டிகுளம் - எஸ். அன்ரனி

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# நமது மண்ணிலே கண்ணிவெடிகளைப் புதைத்தவர்களும் இப்போது அகற்றுவோரும் யார்!

இலங்கையின் இருபது வருட யுத்தத்தில் யுத்த பூமியாகிக் காணப்படுவது வடக்கு கிழக்கு மாகாணங்களாகும். இப்பரந்த நிலப்பரப்பிலே புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளின் எண்ணிக்கை பதினைந்து லட்சம் எனக் கூறப்படுகின்றது. மக்களின் வாழ்விடங்கள், பயிர்செய் தொழில்செய் இடங்களிலும் காடுகள் கரையோரங்கள் எங்கும் இக் கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டன. யுத்தத்தில் ஈடுபட்ட அரசாங்க - புலிகள் தரப்புகளால் அவை பரந்தளவில் புதைக்கப்பட்டன. ஒப்பீட்டளவில் அரசாங்கப் படைகளால் விதைத்துப் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளே வடக்கு கிழக்கில் பரந்து கிடக்கின்றன.



இவ்வாறு இருந்து வரும் பதினைந்து லட்சம் கண்ணி வெடிகளில் கடந்த இரண்டரை வருட யுத்த நிறுத்த சூழலில் சுமார் இரண்டு லட்சம் கண்ணி வெடிகள் மட்டுமே தோண்டி எடுக்கப்பட்டன. வெளி நாடுகளின் தொழில் நிபுணத்துவத்து டனும் பயிற்சி வழிகாட்டலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பண உதவியுடன் இக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இவ்வாறு கண்ணி வெடிகள் அகற்றும் பணி மேலும் சில வருடங்களுக்குத் தொடரும் எனக் கூறப்படுகின்றது.

இத்தகைய கண்ணி வெடி அகற்றும் பணிஎனக் கூறி அமெரிக்க மேற்குலக இந்திய நிபுணர்களும் பயிற்சியாளர்களும் மோப்ப நாய்களும் நவீன கருவிகளும் பலத்த பிரச்சாரங்களுடன் பணிபுரிவதாகக் கூறப்படுகின்றது. இதனை மிக உயர்ந்த மனிதாபிமான நடவடிக்கை என்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் கூறிக் கொள்கின்றன. இதில் பணிபுரியும் நம்மவர்களின் மாதச் சம்பளம் பத்தாயிரம் ரூபா என்றும் காயமடைந்தால் அல்லது இறந்தால் லட்சங்கள் கிடைக்கும் என்ற நிலையிலும் கண்ணிவெடி அகற்றலுக்கு விளம்பரங்கள் செய்யப்படுகின்றன.

ஆனால் இந்த "மனிதாபிமானப் பணி" எனக் கூறப்படும் கண்ணிவெடி அகற்றலுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் சில உண்மைகள் பலருக்குப் புரிவதில்லை. இந்த நாட்டில் யுத்தம் தேவைப்பட்ட போது தமது உலக - பிராந்திய மேலாதிக்க அரசியல் நோக்கத்திற்காக ஆயுதங்களை விற்றவர்கள் யார்? இவற்றில் புதைக்கப்பட்ட பதினைந்து லட்சம் கண்ணிவெடிகளை எத்தனை கோடி ரூபாய்களுக்கு விற்றுப் பணமாக்கினார்கள். யார் இவர்கள்? அமெரிக்க மேற்குலத்தவர்கள் அல்லவா? இதனால் இறந்தவர்களும் அங்கங்களை இழந்தவர்களும் யார்? நம் நாட்டு மக்கள் அல்லவா? இன்று மனமுருகி மனிதாபிமானம் எனக் கூறிக் கொண்டு அதே அமெரிக்க மேற்குலத்திலிருந்து தமது அரசு சார்பற்ற நிறுவன முகவர்கள் மூலம் கண்ணிவெடிகளை அகற்றிப் பணிபுரிவதாகக் காட்டிக் கொள்பவர்கள் யார் என்பதை மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். இந்த நிறுவனங்களின் ஊடாக எத்தனை உளவாளிகளும் வேவு பார்ப்போரும் சகல வளங்களுடனும் நமது பிரதேசங்களுக்குள் ஊடுருவி மக்களை அணுகி திசை திருப்பி வருகின்ற உண்மை யினை எத்தனை பேர் புரிந்து கொள் கிறார்கள்.

முன்பு தமது பொருளா தாரச் சுரண்டல் நேரடி அரசியல் அதிகாரப் பிடி என்பனவற்றை எதிர்ப் பின்றி முன்னெடுத் துச் செல்ல கொலனித்துவ வாதிகள் மதம், கல்வி இரண்டை யும் கொண்டு மக்கள் மத்தியில் செயல் புரிந்தார்கள். ஆனால் இன்று அரசசார்பற்ற நிறுவனங்கள் பணக் கட்டுக்களுடன் வந்து இறங்கி பல் வேறு முறைகளில் உலக மயமாதல் நவகொலனித்துவத்தைப் பாது காத்து நிலை நிறுத்த 'பணி' புரிகிறார்கள். அதில் ஒன்றே கண்ணி வெடிகள் அகற்றும் நடவடிக்கை யாகும். இன்று வரை கண்ணிவெடிகளை உற்பத்தி செய்வதை விற்பனையாக்குவதை கைவிட மறுத்தவரும் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் கண்ணி வெடிகள் அகற்றுவதைப் பெரும் மனிதாபிமானதாகக் காட்டுவது தான் வேடிக்கையானதாகும்.

புதைக்கப்பட்ட கண்ணி வெடிகள் அகற்றப்படல் வேண்டும். மக்கள் அவற்றின் அபாயங்களில் இருந்து பாதுகாக்கப்படல் வேண்டும். ஆனால் அவற்றை நமக்கு திணித்து விற்றுப் பிழைப்பு நடாத்தி யுத்தத்தின் மூலம் தமது நோக்கங்களை ஈடேற்ற முனைந்து நிற்கும் சக்திகளின் மறைமுகச் சதிகளையும் மக்கள் புரிந்து கொள்ளல் வேண்டும். இல்லாதுவிடில் மேலும் பல லட்சம் கண்ணி வெடிகளை நமது மண்ணிலே புதைப்பதற்கு இந்த யுத்தம் மூட்டும் பிசாசுகள் தயங்க மாட்டார்கள்.

- வடபுலத்தான் -

# குளங்கள் புனரமைப்பு வெறும் வாய்ப்பந்தல்

அரசாங்கம் ஆயிரம் குளங்களைப் புனரமைக்கப் போவதாகக் கூறுகின்றது. அதற்குப் போதிய பணம் இன்மையால் முதலில் ஐந்நூறு குளங்களைப் புனரமைக்க முடியும் எனக் கூறுகின்றது. இதில் கூட நாட்டு நலன் மக்களது சுபீட்சம் என்பதை விட அரசியல் லாபமும் அதிகாரத்திற்கு வலுச் சேர்க்கும் முயற்சியும் தான் முன்னிற்கிறது.

இலங்கை ஒரு காலத்தில் குள நீர்ப்பாசன முறைமைக்கும் அதன் மூலமான நெல் உற்பத்திக்கும் பெயர் பெற்ற நாடாக விளங்கியது. மழை மூலம் கிடைக்கும் நீரில் ஒரு சொட்டாவது அநாவசியமாகக் கடலில் சென்று கலக்கக் கூடாது என்ற திட்டத்தின் மூலமே அன்றைய குளங்கள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டன. ஆனால் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் நமது வளங்களைக் கொள்ளையிட்டு உற்பத்திகளை அழிக்கும் வகையில் விவசாயத்தை நாசமாக்கினர். பெருந் தெருக்கள், புகையிரதப் பாதைகள் போன்றவற்றை நிர்மாணிக்க பல குளங்களையே மூடினர். படிப்படியாக குளங்களின் பராமரிப்பை கைவிடச் செய்து தூர்ந்து போக வைத்தனர். திட்டமிட்ட அவர்களது செயற்பாடுகள் இன்று வரை மறுசீரமைக்கப்படவில்லை.

அந்த வெள்ளைத்துரைமார் விட்டுச் சென்று கறுத்தத்துரைமார் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த பின்பும் குளங்கள் புனரமைக்கப்பட்டு அரிசியும் ஏனைய உற்பத்திகளும் சுயதேவை நிலைக்கு மீட்கப்பட வில்லை. பதிலுக்கு அரிசி இறக்குமதி ஊக்குவிக்கப்பட்டு தரகு முதலாளி களும் வியாபாரப் பெருச்சாளிகளும் கொழுக்க வைக்கப்பட்டனர். இன்று அரிசிக்காக மட்டுமன்றி காய்கறிகளுக்காகவும் அயல் நாடுகளில் கையேந்தும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டு நிற்கிறது.

திட்டமிட்ட குடியேற்றத்திற்காக காடுகள் அழிக்கப்பட்டதுடன் அந்நியர் நமது வளங்களைக் கொள்ளையிடவும் காடுகள் அழிக்கப்பட்டதால் மழை வீழ்ச்சி சீரற்று தடைப்பட்டு வரட்சியும் வெள்ளப் பெருக்கும் இயற்கை அனர்த்தங்களாகின. இன்று மழைக்காக புத்த பிக்குகள் பிரித் ஓதி தானம் பெறுகிறார்கள். ஆனால் மழைவீழ்ச்சிக்கான உண்மைக் காரணங்கள் மறைக்கப்படுகின்றன.

இன்று வரட்சியால் வடக்கு கிழக்கு வடமத்திய, வடமேல், தென் மாகாணங்கள் சுருண்டு போய்க் கிடக்கின்றன. டிசம்பர் வரை எப்படிப் பிரித் ஓதினாலும் அல்லது யாகம் செய்து குளித்தி நடத்தினாலும் மழை வரமாட்டாது என்பதை வானிலை அவதான நிலைய நிபுணர்கள் கூறகிறார்கள்.

இன்று விவசாய அமைச்சர் ஒரு ஜே.வி.பிக்காரர். நானூறு மில்லியன் ரூபாவை குளங்கள் புனரமைக்கவென ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறுகிறார். எதிர்க்கட்சியான யூ என். பி யினர் குளப்புனரமைப்பதை நிறுத்தி வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும்படி கூறுகின்றனர். அதே வேளை அரிசித்தட்டுப்பாடு வரப்போவதாக நுகர்வுக்கான அமைச்சர் கூப்பாடு போடுகிறார். இன்னும் விவசாயிகளிட மிருந்து முறையாகவும் நியாயமான விலையிலும் நெல் கொள்வனவு நடைபெறவில்லை என ஜே.வி.பி கூக்குரலிடுகிறது.

இவை எதைக் காட்டுகின்றது. திட்டமிட்ட பொருளாதார வேலைத் திட்டம் இவர்களிடமும் இல்லை. யூ என். பியிடமும் கிடையாது. மக்களை வாட்டி வதைத்து ஆட்சி அதிகாரத்திலிருந்து மேட்டுக்குடியினருக்கும் அவர்களது அந்நியக் கூட்டாளிக்கும் வசதி வாய்ப்பளிப்பதிலேயே ஆளுவோர் கவனமாக இருந்து வருவதையே காணமுடிகின்றது. நிதி அமைச்சர் அமுனுகவும் விவசாய அமைச்சர் அனுர திசநாயக்காவும், நுகர்வோருக்கான அமைச்சர் பெர்னாண்டோ புள்ளே யும் வெறும் வாய் பந்தலும் வாய் சவடாலுமே செய்து வருகிறார்கள். எல்லாம் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் போக்கே நீடிக்கிறது என்பதற்கு அப்பால் எதுவுமே இல்லை.

திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்தியின் ஒரு பகுதியாகக் குளங்கள் புனரமைக்கப்படுவதாயின் அது நமது விவசாயிகளின் நலனுக்கு உகந்தது அல்லாது விடின் அரசியல் லாபத்திற்கும் அதிகார இருப்புக்குமாயின் அதனை அம்பலப்படுத்துவது அவசியம்.

- அப்பர் -

*"சுட்டி நீளும் ஆயிரம் விரல்களைப்*
*புருவம் நெரித்து நிதானமாய் எதிர்ப்பேன்*
*தலையை வணங்கிப் பணியுங்காளையாய்க்*
*குழந்தைகட்குப் பணிபல செய்வேன்"*

- லுஷுன் -

# மக்கள் கலை-இலக்கியத்திற்கான யெனான் கலை-இலக்கியக் கருத்தரங்கில் மாஓ சேதுங் ஆற்றிய உரைகளின் முக்கியத்துவம்

**- சி. சிவசேகரம் -**

"ஒரு எழுத்தாளரோ, கலைஞரோ அகச்சார்பான நோக்கங்களை, அதாவது அவரது நோக்கம் சரியானதும் நல்லதுமா என்று, ஆராயும்போது அவரது பிரகடனங்களை வைத்து மதிப்பிடாமல் அவரது செயல்கள் (முக்கியமாக அவரது ஆக்கங்கள்) சமூகத்தின் வெகுசனங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கங்களை வைத்தே மதிப்பிடுகிறோம். அகச்சார்பான நோக்கத்தையோ உள்ளெண்ணத்தையோ மதிப்பிடுவதற்கான தேர்வுமுறை சமூக நடைமுறையும் அதன் விளைவுமாகும். நமது இலக்கிய, கலை விமர்சனத்தில் எவ்விதமான குறுகிய குழு மனப்பான்மையும் நமக்கு வேண்டியதில்லை. அத்துடன்.... பல்வகைப்பட்ட அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்ட இலக்கிய, கலைப் படைப்புக்களைப் பொறுத்துக்கொள்ள வேண்டும். அதேவேளை, நமது விமர்சனத்தில் நாம் உறுதியாக நெறிபிறழ்வில்லாது, நாட்டுக்கும் விஞ்ஞானத்துக்கும் மக்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எதிரான கருத்துக்களைக் கூறும் சகல இலக்கிய, கலைப்படைப்புக்களையும் வன்மையாக விமர்சித்து மறுதலிக்க வேண்டும்."

திறந்த சனநாயக நடைமுறையை அவர் சார்ந்திருப்பது, மனிதச் சிந்தனையின் முன்னேற்றந் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க அவர் பரிந்துரைத்த வெகுசன மார்க்கத்துடன் உடன்பாடானதாகும். 1957ல் வெளியான "மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைச் சரியாகக் கையாள்வது பற்றி" எனும் அவரது நன்கறியப்பட்ட கட்டுரையில் மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது:

"நூறு பூக்களை மலர விடுவதும் நூறு சிந்தனைகளை மோதவிடுவதும் என்பது கலைகளதும் இலக்கியத்தினதும் முன்னேற்றத்தையும் நமது மண்ணில் செழிப்பான ஒரு சோஷலிஸப்பண்பாட்டையும் ஊக்குவிக்கும் ஒரு கொள்கையாகும். கலையில், வேறுபட்ட வடிவங்களும் பாணிகளும் சுதந்திரமாக விருத்தி பெறவேண்டும். விஞ்ஞானத்தில் வெவ்வேறு சிந்தனை முறைகள் சுதந்திரமாகப் போட்டியிட வேண்டும். ஒரு குறிப்பிட்ட கலைப்பாணியையோ சிந்தனை முறையையோ திணித்து இன்னொன்றைத் தடைசெய்ய நிருவாக நடைமுறைகள் பயன்படுமானால், அது கலையினதும் விஞ்ஞானத்தினதும் வளர்ச்சிக்குத் தீங்கானது. கலைகளிலும் விஞ்ஞானத்திலும் சரியும் பிழையும் பற்றிய பிரச்சினைகள் கலை, விஞ்ஞான வட்டங்களில் சுயாதீனமான கலந்தாலோசனைகள் மூலமும் இத்துறைகளில் நடைமுறை வேலை மூலமும் தீர்க்கப்பட வேண்டும். இவை கேள்வி விசாரணையின்றித் தீர்க்கப்படலாகாது."

விமர்சனம் பற்றிய பிரச்சினையில், மாக்ஸியவாதிகள் சுயவிமர்சனத்துக்கு அதியுயர்ந்த தானத்தை வழங்கியுள்ளனர். மாஓ அது பற்றி மேலும் அழுத்தம் செலுத்துகிறார்:

"நல்ல நோக்கமுடைய ஒருவர் தனது பணியில் உள்ள குறைப்பாடுகளையும் தவறுகளையும் மிகுதியான நேர்மையுடனும் அவற்றைத் திருத்தும் தீர்மானத்துடனும் விமர்சிக்க வேண்டும். இதன் காரணமாகவே கம்யூனிஸ்ற்றுக்கள் சுயவிமர்சன முறையைப் பாவிக்கின்றனர். அது மட்டுமே சரியான முறை."

இலக்கியமும் கலையும் பற்றி மாஓவின் நிலைப்பாட்டைச் சுருங்கக் கூறிவதாயின்:

1. வர்க்க சமுதாயத்தில் இலக்கியமும் கலையும் வர்க்க அடையாளம் உடையன; அவை சித்தாந்தத்தால் வரையறுக்கப்படுகின்றன.
2. எல்லா இலக்கியத்துக்கும் கலைக்கும் ஊற்றுக்கண் வாழ்க்கையே. எது திரட்டப்படுகிறது என்பதை எழுத்தாளரதும் கலைஞரதும் வர்க்கப்பார்வை தீர்மானிக்கிறது.
3. கேட்போர் அணுகுமுறை, மனப்பான்மை என்பனவும் எழுத்தாளரதோ, கலைஞரதோ வர்க்கப்பார்வையால் தீர்மானிக்கப்படுகின்றன.
4. எந்த ஆக்கத்துக்கும் உருவமும் உள்ளடக்கமும் முக்கியமானவை. ஆயினும் உள்ளடக்கம் அடிப்படையானது. அதற்காக உள்ளடக்கம் கலைப்பண்புக்கு மாற்றீடாகும் என்று கொள்ள இயலாது.
5. புரட்சிகர எழுத்தாளர்களும் கலைஞர்களும் வெகுசனங்கட்காகப் படைக்க வேண்டும். அதினும் முக்கியமாக வெகுசனங்களிடமிருந்து கற்க வேண்டும்.
6. புரட்சிகர எழுத்தாளரோ கலைஞரோ வெகுசனங்கட்குப் பொருளும் பெறுமதியுமுள்ள படைப்புக்களை ஆக்க வேண்டும். இவ்வாறு, வெகுசனங்களது தராதரங்களை உயர்த்துவதில் எழுத்தாளரோ கலைஞரோ தமது படைப்பு எட்டக் கூடியதாக இருக்குமாறு உறுதிப்படுத்த வேண்டும். ஏனெனில் இலக்கியத்தையும் கலையையும் வெகுசனங்களிடையே பரவலாக்காமல் அழிகியற் தராதங்களை உயர்த்த முடியாது.
7. புரட்சிகர எழுத்தாளர்களும் கலைஞர்களும் திறந்த மனமுடையோராயும் அயலிலிருந்தும் மரபிலிருந்தும் குறுட்டுத்தனமாக இல்லாது விமர்சகப்பாங்காக ஆக்கமானதற்கும் அற்றதற்கும் வேறுபாடுகண்டு விடயங்களை உள்வாங்க ஆயத்தமாக இருக்க வேண்டும்.
8. கலை, இலக்கியப் படைப்புக்களை விமர்சிப்பதில் அழகியல் தேர்வுமுறைகளும் அரசியற் தேர்வு முறைகளும் முக்கியமானவை.
9. எந்த விடயத்திலும் சரியான முடிவை வந்தடையச் சுதந்திரமான கருத்து வெளிப்பாடும் திறந்த விவாதமும் முக்கியமானவை. ஒடுக்குமுறைப்பாங்கான அணுகுமுறை ஏற்கத்தக்கதல்ல.
10. புரட்சிகர எழுத்தாளர்கட்கும் கலைஞர்கட்கும் சுயவிமர்சனம் அத்தியாவசியமானது.

வளரும்.....

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# நேபாள சர்வாதிகார முடியாட்சிக்கு முண்டு கொடுக்கிறவர்கள்

நேபாளத்தின் மன்னராட்சியைக் காப்பாற்றுவதில் தீவிரமாக உள்ளவர்கள் இந்தியப் பார்ப்பனிய வணிக ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளான பாரதிய ஜனதா கட்சியும் காங்கிரஸூசும் மட்டுமல்ல. அவர்களோடு கூட்டுச் சேர்ந்து நிற்கிற மாநில அரசியற் கட்சிகளும் சாதிய அரசியற் கட்சிகளும் இந்தியாவின் அயற்கொள்ளை பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. இந்திய மத்திய அரசிற்கும் அகில இந்தியக் கட்சிகட்கும் எதிராகப் பிரதேச அரசியலை முன்னெடுத்தும்



சாதியத்துக்கு எதிரான உணர்வைக் குறிப்பிட்ட சாதிகளுக் குரிய அரசியல் தலைமைகளைத் தமதாக்குகிற நோக்கில் தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே கூடச் சாதிப் பகையையோ போட்டியையோ ஊக்குவித்துச் சாதி அரசியல் நடத்தியும் வருகிற இவர்கள் மத்திய அரசியல் அமைச்சர் பதவிக்காகவும் மாநில அரசில் ஆட்சியைத் தமதாக்கவும் யாரோடுங் கூட்டுச் சேரக் கூசமாட்டார்கள். தேசிய இனங்களையும் சிறுபான்மையினராகவுள்ள சமூகப் பிரிவினரையும் ஒடுக்கப்பட்ட சாதியினரையும் மேலும் ஒடுக்குகிற சக்திகளுடன் இணைந்து "காட்ட வேண்டியதைக் காட்டிப் பெறவேண்டியதைப் பெற்றுள்ள" இவர்களிடம் இந்திய அயற் கொள்கைபற்றி எதையும் எதிர்பார்க்க இயலாது.

ஒரு கம்யூனிஸ்ட் கட்சி ஒரு முடியாட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுப்பதை எப்படி விளங்கிக் கொள்வது? முடியாட்சிகளைக் கம்யூனிஸ்ட்டுக்கள் ஆதரிக்கும் சூழ்நிலை எப்போது வருகிறது? வியட்னாம் விடுதலைக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்த கம்போடியா இன்று (கம்பூச்சியா) அரசர் நரதொம் சிஹனுக்கின் ஆட்சி அமெரிக்க சார்பு ராணுவத் தளபதி லொன் நொல்லால் கவிழ்க்கப்பட்ட போது சீனா அவருக்குப் புகலிடம் வழங்கியதுடன் அவரது தலைமையில் மாற்று ஆட்சி அமைக்க உதவியது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நின்ற துணிவுக்காகவும் கம்போடியக் கம்யூனிஸ்ட்டுக்களுடன் ஒத்துழைக்க முன்வந்ததற்காகவும் சிஹானுக் ஆதரிக்கப்பட்டார். அது நல்ல விடயம்.

நேபாள அரச குடும்பத்தின் படுகொலைக்குப் பின்பு முன்னைய ஆட்சியை விடவும் இந்திய அமெரிக்க ஆதரவை நாடி நிற்கிற ஒரு சர்வாதிகார மன்னராட்சி எப்படி முற்போக்கானதாகும்? நேபாள மக்கள் போராடி வென்ற பாராளுமன்ற சனநாயக ஆட்சியைக் கலைத்துத் தனது ஆட்சியை நிலை நிறுத்திய ஒரு ஆட்சி எப்படி முற்போக்கானதாகும்? எனினும் இந்தியாவின் இரண்டு பெரிய இடதுசாரி நிறுவனங்களும் (அவை கம்யூனிஸ்ட் என்ற பேரில் இயங்கும் முதலாளிய சீர்திருத்தவாதக் கட்சிகளே ஒழியக் கம்யூனிஸ்ட் கட்சிகளேயல்ல) மன்னராட்சி கலைக்கப்படுவதை விரும்பவில்லை.

திரிபுவாதப் பாதையில் போய் முதலாளியத்துடன் சமரசம் செய்துள்ள இக்கட்சிகளுக்கு நேபாள மக்களின் ஆயுதப் புரட்சி வயிற்றைக் கலக்குகிறது. அங்கு மாஓவாதிகள் நடத்தும் புரட்சி வென்றால் உள்;ரிலும் மாக்ஸிய லெனினிய வாதிகட்குச் செல்வாக்கு ஓங்கிவிடும், தங்கள் பிழைப்பில் மண்விழுந்துவிடும் என அவர்கள் அஞ்சுகிறார்கள். எனவே மாஓவாதிகள் பயங்கரவாதிகள் என்றும் பயங்கரவாதம் வெல்லக் கூடாது எனவும் அவர்கள் பிரசாரம் செய்கிறார்கள்.

நேபாளத்திலும் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களைக் கொண்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளன. அவற்றிடையிலும் பிளவுகள் உள்ளன. அவை மாஓவாதிகளின் போராட்டப் பாதையை ஏற்கத் தயங்குகின்றன. எனினும் மாஓவாதிகளின் கிளர்ச்சியைப் பயங்கரவாதம் என்று முத்திரை குத்தி ஓரங்கட்ட அவர்கள் உடன்படவில்லை. அந்தளவில் அவர்கட்கும் இந்தியாவின் திரிபுவாதிகட்கும் வேறுபாடு உண்டு. நேபாளப் பாராளுமன்ற அரசியலில் இறங்கியுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் பதவி, அதிகாரம் என்பனவற்றைக் கண்டும் அனுபவித்தும் சீரழியலாம். அவர்கள் மாஓவாதப் புரட்சிகர இயக்கத்துக்கு எதிராக எதையுமே செய்ய மறுக்கிறார்கள் என்பது ஒரு நல்ல விடயம்.

முடியாட்சி அகற்றப்பட வேண்டும் என்ற எண்ணம் நேபாள அரசியலில் வலுப்பெற்று வருகிறது. ஆயினும் இந்திய ஆட்சியாளர்களுடைய



செல்வாக்கு அதற்கு மாறான எண்ணங்களுக்கு உதவ முயலுகிறது. இன்று இந்தியாவும் அமெரிக்காவும் நேபாளத்தின் சர்வாதிகார, முடியாட்சிக்கு ஆதரவாக ராணுவ உதவி வழங்குகின்றன. முதலாளியப் பாதையில் போகிற சீன அரசும் மாஓவாதிகட்கு எதிரான நடவடிக்கைகட்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இதைக் காரணங்காட்டி இந்தியத் திரிபுவாதிகள் தமது மானக்கேடான நிலைப்பாடுகளை நியாயப்படுத்தலாம் என்றாலும் முடிவில் அவர்கள் தான் ஏமாறுவார்கள்.

நேபாள முடியாட்சி பேச்சு வார்த்தைகள் என்ற பேரில் இழுத்தடிப்பு வேலைகளை 2003ம் ஆண்டு முழுவதும் செய்தபடி மாஓவாதிகளுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளில் மும்முரமாகியதும் மாஓவாதிகளை முறியடிக்க இயலவில்லை. மாறாக அவர்களது வலிமையும் செல்வாக்கும் ஓங்கியது. நேபாள மன்னரின் அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைக்கு எதிராக மக்கள் சக்தி வலுப்பெற்றது. அதைச் சமாளிக்க ஜூலையில் ஒரு இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட்டது. அதில் பாராளு மன்ற இடதுசாரிக் கட்சிகளும் பங்கு பெற்றனர். இந்த அரசாங்கத்தின் நோக்கம் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதும் தேர்தல் மூலம் பாராளுமன்ற அரசாங்கம் ஒன்றை நிறுவுவதுமே என்று கூறப்படுகிறது. எனினும் இது நடைமுறையில் இயலுமா என்பது இன்னொரு கேள்வி.

அரச படைகளின் இராணுவ நடவடிக்கைகள் தொடர்கையில் மாஓவாதிகளின் போராட்டம் மேலும் மும்முரமாயுள்ளது. ஓகஸ்ற் நடுப்பகுதியில் தலை நகரமான காத்மண்டு முற்றுகைக் குள்ளாகியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. மாஓவாதிகள் ஆட்சியைப் பிடிப்பார்களா இல்லையா என்பதை விட முக்கியமானது ஏதெனில், நேபாளத்தில் ஒரு சர்வாதிகார முடியாட்சியை முறிடித்து எந்த வகையான ஜனநாயகம் ஏற்பட்டாலும் அதற்குக் காரணம் மாஓவாதிகளது தியாக உணர்வு மிக்க விடுதலைப் போராட்டமே.

நேபாளத்தில் நடக்கிற விடயங்கள் இந்திய அரசியலிலும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உண்மை. எது எப்படி அமைந்தாலும் இந்தியத் திரிபுவாதிகளின் வேடம் மேலுங் கலையும் என்பது உறுதி.

**- நரசிம்மா -**

# மூன்றாமுலகைக் கொள்ளையிட நிற்கும் உலக வர்த்தக அமைப்பு (WTO)

மூன்றாம் நாடுகள் இன்று பல் வேறு பொருளாதார அழுத்தங்க ளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளன. அமெரிக்கா தலைமையிலான வல்லரசுகளின் நேரடி ஆக்கிரமிப்புக்குட்படாத நாடுகள் உலக மயமாதல் ஏகாதிபத்திய பிடியிலேயே உள்ளன. இந்த நாடுகள் மீது பொருளாதாரத் திணிப்பை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு (WTO) என்பன நாசூக்காக மேற்கொண்டு வருகின்றன.

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர் மட்டத்திலான கூட்டம் 2003 செப்டம்பரில் கன்கூனில் இடம்பெற்றது. வளர்ச்சியடைந்த நாடுகளின் பொருளாதாரத் திணிப்பை மூன்றாம் உலக நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டமையால் அந்தக் கூட்டம் தோல்வியில் முடிவடைந்தது அம்மா நாட்டில் எந்தவித தீர்மானமும் எடுக்க முடியவில்லை.

கன்கூன் மகாநாட்டின் இறுதி நாட்களில் எதிர்ப்பைக் காட்டிய நாடுகள் சிலவற்றிற்கு பாரிய கடனை சம்பந்தப்பட்ட வளர்ச்சியடைந்த நாடுகள் கொடுத்து அவற்றின் வாயை மூடச் செய்தன. கன்கூன் மகாநாட்டிற்கும் ஜெனிவாவில் 2004 யூலை 31ம் திகதி முடிவடைந்த மாநாட்டிற்கு மிடையில் பல்வேறு கொடுப்பனவுகளைச் செய்து எதிர்ப்புத் தெரிவித்த நாடுகள் மடக்கப்பட்டுள்ளன. மேற்கத்தைய நாடுகளின் இந்தக் கொடுப்பனவுகள் இலஞ்சம் என்றே கூற முடியும். ஆனால் இந்தக் கொடுப்பனவுகளைப் பெற்ற இந்த பின்தங்கிய நாடுகள் முதலாளித்துவ வட்டத்துக்குள்ளேயே தீர்வுகளைத் தேடிக் கொண்டிருப்பதால் வேறுவழியின்றி மேற்கத்திய பொருளாதாரத் திணிப்பில் மூழ்க வேண்டியுள்ளது.

ஆகஸ்ட் முதலாந்திகதி உலக வர்த்தக அமைப்பின் பணிப்பாளர் நாயகம் சுபாச்சை பனிச்பக்டி ஒரு பத்திரிகையாளர் மகாநாட்டை கூட்டினார். சென்ற வருடம் செப்டம்பரில் கன்கூனில் தோல்வி கண்ட விடயங்கள் தொடர்பாக ஜெனிவாவில் தீர்வு எட்டியதாக அறிவித்தார்.

ஜெனீவாவில் யூலை 16ம் திகதி மாதிரி உடன்பாடு வெளியிடப்பட்ட போது அனேக நாடுகள் இதைக் காரசாரமாகக் கண்டித்தன. அந்த நாடுகள் ஆட்சேபம் தெரிவித்த விடயங்களில் சிலவற்றிற்கே ஓரளவு பரிகாரம் காணப்பட்ட போதும் மொத்தத்தில் இணங்கிப் போவதைத் தவிர அவற்றிற்கு மாற்று வழிதெரியவில்லை.

ஜெனிவா மகாநாட்டில் மூன்றாம் உலக நாடுகளுக்கு இரண்டு வெற்றிகள் கிடைத்தன எனக் கொள்ளலாம்.

முதலாவதாக விவசாயப் பொருள்களின் ஏற்றுமதிக்கான மானியத்தை நீக்குவதற்கு கொள்கையளவில் வளர்ச்சியடைந்த நாடுகள் ஏற்றுக் கொண்டன. ஆனால் எப்பொழுது என்ற விடயம் இன்னமும் தீர்மானிக்கப்பட வில்லை.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகள் தமது நாட்டில் விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு பெரும் எடுப்பில் மானியம் வழங்குவதோடு அப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் போது ஏற்றுமதிக் கடன் வசதிகளையும் செய்கின்றன. விவசாயப் பொருள்கள் மலிவு விலையில் வளர்ச்சியடையும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் பின்தங்கிய நாடுகளில் விவசாயிகள் தமது பொருள்களை விற்க முடியாதுள்ளனர்.

அதனாலேயே வளர்ச்சியடைந்த நாடுகள் தமது நாடுகளில் விவசாயிகளுக்கு வழங்கும் அபரிமிதமான மானியத்தை நீக்க வேண்டுமெனக் கோரி வந்துள்ளமை விளங்கிக் கொள்ளக் கூடியதே.

இரண்டாவதாக "சிங்கப்பூர் விஷயங்கள்" எனப்பட்ட முதலீடு, போட்டா போட்டி, அரசாங்க கொள்வனவில் வெளிப்படைத் தன்மை என்ற விடயங்களை உலக வர்த்தக அமைப்பின் பேரம் பேசும் நிரலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் வளர்ச்சியடையும் நாடுகளின் தேசியக் கொள்கை வகுப்பதிலும் தமது பொருளாதார வளர்ச்சிக்கு குந்தகமாய் அமையுமென அவை சரியாகக் கருதின.

மேலே குறிப்பிட்ட இரண்டு சாதகமான நிகழ்வுகளுடன் பின்னடைவுகளும் கூடவே தாராளமாகவுள்ளன.

கைத்தொழில் பொருள்கள் வர்த்தகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமிட்ட வரம்பானது உள்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தொழில் பண்டங்களிலும் பார்க்க மலிவான விலையில் வந்து குவியும் என வளர்ச்சியடையும் நாடுகள் பீதி கொண்டுள்ளன. இந்த வரம்பானது ஜெனிவா உடன்பாட்டில் (ட) பீ இணைப்பில் உள்ளது. இதன்படி தீர்வை பெருமளவில் குறைக்கப்படவுள்ளது.

உதாரணத்திற்கு 40வீதம் தீர்வையுள்ள பண்டம் 7வீதமாகக் குறைக்கப்படும். பல கைத்தொழில பொருள்களின் தீர்வைகள் விரைவாகக் குறைக்கப்படவுள்ளது.

இதன் விளைவால் உள்நாட்டு உற்பத்திக்கு மரணப் பேராபத்துள்ளது. ஆபிரிக்க, கரீபியன் நாடுகள் இந்த இணைப்பை மாதக் கணக்காக எதிர்த்தே வந்துள்ளன. ஜெனிவா மகாநாட்டில் இதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற நிலை ஏற்பட்டதும் கோபாவேசம் கொண்டன. இந்த விடயத்தில் ஜெனிவா மகாநாடும் முறிவடையமென்ற நிலையும் நிலவியது. இறுதியில் கசப்பான இந்த இணைப்பு 'ட' தொடர்பாக மேலும் பேச்சுவார்த்தை நடைபெறும் என்ற முன்வரையுடன் இணைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

வளர்ச்சியடையும் நாடுகள் போராடுவதற்கு கால அவகாசம் இருக்கின்ற போதும் இணைப்பு 'ட' தான் அடிப்படையாக அமையவுள்ளதால் அவற்றின் போராட்டம் மிகக் கடினமாய் இருக்கும்.

விவசாயம் சம்பந்தப்பட்ட விடயத்தில் வளர்ச்சிடைந்த நாடுகள் சில விடயங்கள் ஏற்கனவே விசய நிரலில் விரைவாக இடம் பிடித்துவிட்டது. வளர்ச்சியடையும் நாடுகளின் நீண்டகாலப் பிரச்சினைகள் சிறு முன்னேற்றம் மட்டுமே கண்டுள்ளது.

செல்வந்த நாடுகள் உலக வர்த்தக அமைப்பின் விதிகளில் மாற்றம் ஒன்றை மேற்கொண்டு வந்து "புளூ பொக்ஸ்" எனப்படும் (டீடரந டீழஒ) முறையொன்றின் மூலம் உள்நாட்டில் பண்ணைத்துறைக்கு புதிய பாணியில் மானியம் வழங்கும் திட்டம் ஒன்று புகுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டமானது மகாநாட்டை பிளவுபடுத்தியது. இந்த நடவடிக்கையானது தொடர்ந்தும் செல்வந்த நாடுகள் உள்நாட்டில் மானியங்களைக் குறைப்பதற்குப் பதிலாக அதிகரிப்புக்கே வழிவகுக்கும் என வளர்ச்சியடையும் நாடுகள் கருதின.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பது தொடர்பாக பின்னர் மறுபரிசீலனை செய்வதென இணக்கம் காணப்பட்டது. எனினும் "புளூ பொக்ஸ்" திட்டத்தை

தொடர்ச்சி 12ம் பக்கம்..

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தூண்டியோ தூண்டாமலோ சட்டநாதன் சொன்னவை பற்றி

க. சட்டநாதன் ஒரு நல்ல சிறுகதையாளராக மதிக்கப்படும் ஒரு எழுத்தாளர். அதைவிட அவரது எழுத்துக்களில் இடதுசாரி அனுதாபம் என்று இல்லாவிட்டாலும் சமூக நீதி சார்ந்த ஒரு பார்வை உண்டு. எனினும், இடதுசாரிகள் பற்றிய ஒர் அகச்சார்பான பகைமை உணர்வை அவர் பேணி வந்துள்ளார் என்பதை நாம் காணலாம். மு. பொன்னம்பலம், எஸ். பொன்னுத்துரை போன்றவர்களிடமிருந்து அவர் ஓரளவு வேறுபட்டவர் என்பதனால் அவர் பற்றி இடதுசாரிகள் நடுவே ஒரு மரியாதை இருந்து வந்துள்ளது.

சிலகாலம் முன்பு வெளி வந்த தூண்டி என்ற காலாண்டிதழில் அவரது நேர்காணல் வெளியாகியிருந்தது. அதில் அவர் கூறியுள்ள கருத்துக்கள் பல கவனத்துக்குரியன. ஒரு சில அவரைப் பற்றிய ஐயங்களை எழுப்புவன. கைலாசபதியும் சிவத்தம்பியும் "படைப்பிலக்கியத்தின் உள்ளடக்கத்துக்கு மட்டுமே முதன்மை கொடுத்தமையால் இலங்கை எழுத்தின் படைப்பாளுமை விருத்திக்கு ஒரு மலட்டுத்தனத்தை, வரட்சியை ஏற்படுத்தியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டு உண்டு. ஆனால் சிவத்தம்பியவர்கள் பெரிய அளவில் தன்னை மாற்றிக் கொண்டுள்ளார். தமிழிலக்கியத்தில் சமகாலத்தில், ஏற்பட்டுள்ள புதிய கருத்தியல் வரவுகளை, போக்குகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்து வரவேற்கும் போக்கை அவரிடம் காணலாம். இப் பண்பினை, சமகால கற்கைகளுடன் - இடைவெளி எதுவும் இல்லாமல்- இணைந்து போகும் வளர்ச்சியாகத் தான் நாம் பார்க்க வேண்டும். சில விமர்சகர்கள் இவரது இப்போக்கைக் கண்டிப்பதுடன், இவரது புலமையையும் தாட்சணியம் ஏதுமின்றி ஓரங்கட்ட முயற்சிப்பதும் இங்கு நடைபெறுகிறது'' என்று அவர் வலிந்து கூறியுள்ளார்.

சட்டநாதன் சொற்களைக் கவனமாகப் பாவிப்பவர் என்ற ஒரு எண்ணம் பரவலாக உள்ளது. எனவே ''உள்ளடக்கத்துக்கு மட்டுமே முதன்மை கொடுத்தமை" என்று அவர் சொல்லுமிடத்து, ஒன்றுக்கு மேற்பட்ட விடயங்களுக்கு முதன்மை கொடுக்க இயலும் என்று அவர் கருதுகிறாரா என்ற கேள்வி எழுகிறது. அவர் குறிப்பிடும் குற்றச்சாட்டு உள்ளது என்று சொன்னால் ஏன் அதைத் தன்னுடைய கருத்தாக முன்வைக்கத் தயங்குகிறார் என்ற கேள்வி எழுகிறது. இவ்வாறு தன்மீது பழி விழாத விதமாக மற்றவர்கள் சொல்கிறார்கள் என்று கடத்தி விடுவது கோழைத்தனமா அல்லது நேர்மையீனமா என்று தெரியவில்லை.

அடுத்து, சிவத்தம்பி (இப்போது சிவத்தம்பி அவர்களாகி) பெரிய அளவில் தன்னை மாற்றிக் கொண்டுள்ளதாகவும் அந்த மாற்றத்துக்காகவே அவர் நியாயமின்றி நிந்திக்கப்படுகிறதாகவும் சட்டநாதன் முறைப்படுகிறார். சிவத்தம்பி பற்றிய விமர்சனங்களாக அல்லாமல் அவரது கருத்துக்கள் பற்றிய விமர்சனங்களாகவே பெருவாரியான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சிவத்தம்பி பற்றிய தனிப்பட்ட தாக்குதல்கள் இப்போது அவரைக் கொண்டாடுகிறவர்களாலேயே நீண்டகாலமாகத் தொடுக்கப்பட்டு வந்தன என்பதை நாம் மறக்கக் கூடாது. இடதுசாரிகளல்லாத முன்னாள் அபிமானிகள் சிலர் அவர் மீது கடும் தாக்குதல்களைத் தொடுத்துள்ளனர். அவை கூட அவரது நழுவல் போக்குக் காரணமானவையே.

சிவத்தம்பியின் ஆளுமை பற்றிய கேள்வி அவர் தனது ஆளுமையை வெளிப்படுத்த முயன்ற இடங்களிலேயே எழுந்தது. அவரது கட்டுரைகள் மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு அவர் நேரடியாகப் பதில் கூறவும் துணிய வில்லை. அதற்கான வாய்ப்புக்கள் அவருக்கு இருக்கவில்லை எனவும் கூற இயலாது. மொழி பற்றிய அவருடைய சிந்தனை குழப்பமானது என்பதும் கலைச் சொல்லாக்கம் பற்றிய அவரது அணுகுமுறை வரட்டுத்தனமானது என்பதும் ஆதாரங்களுடனேயே முன்வைக்கப்பட்டுள்ளன.

அவர் தனது அரசியலை மாற்றியிருப்பது பிரச்சனைக்குரியதல்ல. ஆனால் ஒரே நேரத்தில் இரண்டு முகங்களைக் காட்ட முயல்வது பற்றியே பிரச்சனை எழுகிறது. தன்னுடைய குற்றங்களுக்காக தனது முன்னாள் கூட்டாளிகள் எல்லார் சார்பிலும் வருத்தம் தெரிவிப்பதும் வசதியான போது பாவத்தை யாராவது ஓரிருவர் மீது சுமத்தி விட்டுத் தன்னைப் புனிதராகக் காட்டுவதும் அவரது சமகால நடத்தையாகி விட்டது. இதை எவரும் விமர்சிப்பது அவருடைய அதிவேகப் பரிணாம விருத்தி பற்றிய அதிர்ச்சியாலல்ல.

சிவத்தம்பி மீதான எந்த விமர்சனமும் தவறானது என்றால், கடந்த பத்தாண்டுகட்கு மேலாக முன்வைக்கப் பட்ட எதையும் மறுத்து எழுத ஏன் அவருக்கோ அவர் சார்பாக இன்று இரங்கி அழுகிறவர்கள் எவருக்குமோ இயலவில்லை. சிவத்தம்பி மீது மு.நித்தியானந்தனின் ஊக்குவிப்புடன் கலா மோகன் எழுதியதும் எஸ்.பொன்னுத்துரை எழுதியதும் கனடாவில் ஒரு ஏட்டில் வெளியான போது அதை மறுத்து எழுதியவர் அவரை அன்றும் இன்றும் விமர்சித்து வரும் ஒரு இடதுசாரி விமர்சகரே.

உண்மையான புலமை விமர்சனத்தால் ஓரங்கட்டப்படமாட்டாது. புறக்கணிப்பால் ஒருவேளை அது ஓரங்கட்டப்படலாம். தன்னுடைய புலமை பற்றித் தானே புகழ்ந்து எழுதும் நிலை, உண்மையான புலமை உள்ள எவருக்கும் ஏற்படுமாயின் அது மிகவும் பரிதாபத்துக்குரியது.

தனக்கு உடன்பாடான நிலைப்பாட்டில் சிவத்தம்பி இருப்பதால் அவர் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டு இருக்க வேண்டும் என்பது தான் சட்டநாதனுடைய சட்டமென்றால், அதை மீறாமல் இருப்பது மிகவும் கடினம் என்று அவரிடம் தாழ்மையுடன் கூறிக் கொள்ள வேண்டியுள்ளது.

சட்டநாதனின் படைப்பாளிகள் பட்டியலிலும் விமர்சகர் பட்டியலிலும் வருகிற சில பேர்களைக் கவனிக்கும் போது தரமறிந்து அவர் அவற்றைச் சேர்த்துள்ளதாகக் கூறுவது கடினம். தன்னுடைய காய்தல் உவத்தல் போலவே பிறருடையதும் என அவர் எண்ணுவது நியாயமானது தான். ஆனால் நடுநிலை என்று பாசங்கு பண்ணுவதற்கும் தெளிவான ஒரு நிலைப்பாட்டிலிருந்து நேர்மையாக நோக்குவதற்கும் உள்ள தர வேறுபாட்டையும் நாம் காணத் தவறக்கூடாது.

முடிவாகப், படைப்பாளிகளை மெச்சுவதையும் ஊக்குவிப்பதையும் வற்புறுத்துகிற சட்டநாதன் எத்தனை படைப்பாளிகளை ஊக்குவித்திருக்கிறார் என்பதையும் மற்றவர்களது நூல்களை நண்பர்களிடம் அறிமுகப்படுத்தவோ விற்க உதவவோ என்ன செய்துள்ளார் என்பதையும் அவரிடம் கேட்டறிய விரும்புகிறேன்.

இலக்கியம் என்பது ஒரு சில 'இலக்கியப் பிரமுகர்களுக்குப் ' புகழ் சேர்க்கிற விடயமில்லை நிச்சயமாக நமது பார்வையில் இல்லவே இல்லை!

# தேசிய கலை இலக்கியப் பேரவை ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள கவிதை நூல்


## about another matter




பேராசிரியர் சி.சிவசேகரம் நாடறிந்த கவிஞர். சிறந்த மார்க்சிய விமர்சகர். 1977ல் இருந்து அவர் எழுதிய கவிதைகள் ஏற்கனவே நூல்களாக வெளிவந்துள்ளன. அத்துடன் சமூக நீதிக்காக உலகம் முழுவதும் குரல் கொடுத்துப் போராடி வரும் பன்மொழிக் கவிஞர்களின் கவிதைகள் சிலவற்றை ஆங்கில மூலத்தி லிருந்து தமிழுக்கு மொழி மாற்றம் செய்து நூல்களாகவும் தந்துள்ளார். இவற்றை எல்லாம் நூல் உருப்பெற வைத்த தேசிய கலை இலக்கியப் பேரவை இப்போது சிவசேகரத்தின் 56 தமிழ் கவிதைகளின் ஆங்கில மொழி மாற்றக் கவிதை நூலை வெளியிட்டுள்ளது. அதன் பெயர் யடிழரவ யழெவாநச அயவவநச என்பதாகும். 106 பக்கங்கள் கொண்ட இவ் ஆங்கில கவிதை நூல் அழகிய அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது.

ஒடுக்கு முறைகளுக்கு எதிராக விரல் சுட்டி நிற்கும் இக்கவிதைகள் சமூக நீதிக்கான போர்க் குரலாகவும் எழுந்து நிற்கின்றன. தமிழில் காணப்பட்ட கருத்துச் செறிவும் கவித்துவ வீச்சும் இவ் ஆங்கில மொழி மாற்றத்தில் காணப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதனை இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள ஆங்கிலப் புலமையாளரும். சமூக அக்கறை மிக்க கல்வியாளருமான ஏ.ஜே. கனகரட்ணா மிகுந்த அவதானிப்புடன் சுட்டிக் காட்டியுள்ளார். இந்நூல் தமிழ்ப் பரப்புக்கும் அப்பால் சென்று குறிப்பாக சிங்கள மக்களுக்கு ஒடுக்கு முறைக்கு உள்ளாகி நிற்கும் தமிழ் மக்களின் நிலையைச் சுட்டிக்காட்டவும் பரந்த மனித நேயத்தை எடுத்தியம்பவும் பணியாற்றும் என்று துணிந்து கூறலாம்.

# தாயகம் வெளிவந்து விட்டது




தேசியகலை இலக்கியப் பேரவையின் கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழான தாயகம் சஞ்சிகையின்யூன் மாத (காலாண்டிதழ்) ஏற்கனவே வெளிவந்துள்ளது. மிக எளிமையான ஆனால் நமது சமூக சூழலுக்கு வெவ்வேறு அர்த்தங்களை வழங்கக் கூடிய அழகான அட்டைப் படத்துடன் இச் சஞ்சிகை வெளிவந்துள்ளது. இவ் இதழ் ஐம்பதாவது இதழ் என்பதால் முந்திய இதழ்கள் சிலவற்றை பின் அட்டையில் காண முடிகின்றது. தொடர்ந்தும் யாழ்ப்பாண மண்ணில் இருந்து வெளிவரும் இச்சஞ்சிகை வழமை போன்று சமூகப் பிரதிபலிப்பான கவிதை சிறுகதை கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்துள்ளது. ''ஏற்றத் தாழ்வுகளும், ஒடுக்குமுறைகளும் நிறைந்த ஒரு சமூகத்தில் சார்பற்ற நடுநிலையான பொதுமைப்படுத்தப்பட்ட நிறுவனங்களோ கருத்தியல்களோ இருக்க முடியாது. அரசியல் அதிகாரம் அறிவியல் கலை பண்பாடு யாவற்றுக்கும் இது பொருந்தும். தாயகம் ஒடுக்கப்படும் மக்களுக்கு சார்பானது. புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாட்டை நோக்கி மக்கள் கலை இலக்கியத்தை முன்னெடுப்பதே அதன் இலக்கு" எனத் தனது ஆசிரியத் தலையங்கத்தில் தாயகம் தெரிவித்திருக்கிறது. அதன் விலை ரூபா நாற்பது தாயகம் பெற்றுக் கொள்ள வேண்டியதும், ஆக்கங்கள் அனுப்ப வேண்டியதுமான முகவரி தாயகம், 405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

# கே. டானியல் கடிதங்கள்

டானியலின் கடிதங்கள் டானியலின் அரசியல் சமூகச் சிந்தனைகளை நன்கு அடையாளப்படுத்தும் என்று எதிர்பார்த்த எவரும், அவர் ஒரு மாக்ஸியவாதி என்ற கண்ணோட்டத்தில் அவரது கடிதங்கள் அடங்கிய நூலை வாசித்திருந்தால் ஏமாந்திருக்கலாம்.

டானியலின் மாக்சிய அக்கறையும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டமும் அவரது கடிதங்களில் மிகவும் பலவீனமாகவே காணப்படுகின்றன. பாட்டாளி வர்க்கம் பற்றி அவர் சிறிது சொல்வனவும் ஒரு சம்பிரதாயத்துக்காகவே சொல்லப்படுகின்றது போலவே தெரியக் காரணம், அவரது அணுகுமுறையில் அந்த வர்க்கப் பார்வை இருப்பதற்கான அடையாளமே இல்லாதது தான்.

டானியல் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டு மீண்டும் சேர்ந்ததைப் பற்றி எழுதும் போது தன் மீது தவறு இல்லை என்கிற தோரணையிலேயே எழுதுகிறார். பலவேறு சிக்கலான பிரச்சனைகளுக்கு மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட முறையில் தனக்குச் சாதகமான வியாக்கியானங்களையே அவர் புகுத்துவது ஏன்? ஒரு வர்க்கத்தினரோ ஒடுக்கப்பட்ட சமூகமொன்றின் பிரதிநிதியாகத் தன்னைக் கருதுவதற்கும் மேலாகத் தன்னை உயர்த்திக் கொள்ளும் ஒரு நோக்கிலே ஒரு கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எழுதுவராயின் அவர் எந்த ஒரு பொது அமைப்பிலும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளத் தகுதியற்றவர் என்றே கருதப்படுவார்.

டானியல் மீது மாக்ஸிய லெனினியவாதிகள் முன்வைத்த விமர்சனங்களை டானியலின் கடிதங்கள் நியாயப்படுத்துகின்றன. குறிப்பாகத் தேசிய இனப்பிரச்சனையில், அது ஒரு இன ஒழிப்புப் போராக மூண்டெழுந்த காலத்திலும், அதன் முக்கியத்துவத்தைத் தட்டிக்கழிக்கும் முறையிலேயே அவர் மீண்டும் மீண்டும் எழுதி வந்தது ஏன்? அவர் தமிழகத்தின் தலித்தியவாதிகளைப் போல சாதி முரண்பாட்டுக்கு அப்பால் வேறெந்த முரண்பாட்டையுமே அடையாளங்காண மறுத்ததைக் குறிக்கிறதா?

பல்வேறு முரண்பாடுகள் உள்ள சூழ்நிலையில் அடிப்படை முரண்பாட்டை இன்னொரு முரண்பாடு மேவ முடியும் என்பது போக, ஒரு முரண்பாடு முதன்மையானதாக இருப்பதால் மற்றவை புறக்கணிக்கப்பட வேண்டிய தேவை இல்லை என்பதையே ஒரு மாக்ஸிய வாதியால் விளங்கிக் கொள்ள இயலும். டானியலுக்கு இயலாமற் போனது ஏன்?

நிச்சயமாக அவரது ஒற்றைப்பரிமாண அணுகுமுறையின் அகச்சார்பான தன்மையே அதன் காரணம்.

இந்த நூலின் மூலம் தெளிவாவது ஒரு விடயம். கடிதங்களிற் பெரும் பகுதியைப் பெற்றவரும் நூலின் தொகுப்பாளருமான அ. மார்க்ஸால் கூட தேசிய இனப் பிரச்சனையில் டானியலின் தவறான நிலைப்பாட்டைத் திருத்த இயலவில்லை. அது போக, சி.பி.எம் . திரிபுவாதிகளுடன் சேர்ந்து நின்ற மார்க்ஸ் அவர்களது திரிபுவாதப் போக்கை நிராகரிப்பதற்கு மாறாக மாக்ஸியத்தையே நிராகரிக்கிற திசையில் போகும் அடையாளங்களும் புலனாகத் தொடங்குகின்றன.

மார்க்ஸ் - டானியல் உறவின் மூலம் மார்க்ஸ் ஈழத்துச் சாதிய எதிர்ப்புப் போராட்டத்தில் நேர்மையான மாக்ஸியவாதிகளது பங்கைப் பற்றி எதையுமே கற்கவில்லை என்பதும் கவனிக்கத் தக்கது.

இந்த நூல் டானியலைப் பற்றிய அதிக முக்கியத்துவமற்ற ஒரு ஆவணம் என்று கூறலாம்.

- திருமுகன் -

# குருவுக்கு ஏற்ற சீடன்

கம்பன் கழகம் மரபு பற்றிய பம்மாத்துப் பண்ணுகிற ஒரு கம்பனி என்பது மீண்டும் மீண்டும் நிறுவப்படும் ஒரு உண்மை. கம்பனி வாரிசு ஒருவர் மரபுக் கவிதையின் மேம்பாட்டை எல்லாம் எடுத்தோதினாலும் அவருக்கு மரபுக்கமையக் கவிதை எழுதவராது என்று பலரும் சுட்டிக் காட்டியதாலோ என்னவோ வெண்பா என்று நினைத்து எதையோ எழுதிக் கம்பன் விழாவில் வாசித்ததும் போதாமல் தினக்குரலின் இலக்கியப் பகுதியில் அதை அச்சேற்றியும் வைத்தார்.

மரபுக் கவிதையைப் பற்றி எதையோ தப்பும் தவறுமாக மு.பொன்னம்பலம் எழுதப்போக கம்பனி வாரிசு நன்றாக வாங்கு வாங்கென்று வாங்கி விட்டதால் வெகுண்டிருந்த பொன்னம்பலம் கம்பனி வாரிசுக்கு வெண்பா பற்றி ஒன்றுமே தெரியாது என்று சுருக்கமாக ஒரு வெண்பா மூலம் சூடாக ஒரு குட்டுப் போட்டுள்ளார்.

கம்பவாரிதியாரும் முன்பு சைவம் பற்றி எதையெதையோ வாய்க்கு வந்தபடி பேசி ஒரு தமிழகத்துப் பேச்சாளரிடம் குட்டுப்பட்டவர் தானே. எனவே குருவுக்கு ஏற்ற சீடர் தான் என்று மெச்ச வேண்டியது தானே.

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA


வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை


# புதிய பூமி


පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 11 செப்டம்பர் 2004 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 72







# தொடரும் ஊடகவியலாளர் கொலைகள்

## எக்காரணத்தாலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை!

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரட்டத்தில் காட்டிக் கொடுப்புகள் இடம் பெறாமல் இல்லை. பேரின வாத அரசாங்கங்களுடனும் பேரின வாத இராணுவத்துடனும் இணைந்து கொண்டு இனஒடுக்கலும் துணை போய்க்கொண்டு, தேசிய நீரோட்டத்துடன் இணைந்து விட்ட தாக கூறுபவர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும், போராட்டத்திற்கும் எதிரானவர்களே ஆனாலும் இத்தகையவர்களுக்கு ஏதிரான போராட்டம் என்றபேரில் செய்யப்படுகின்ற தனிநபர் கொலைகள் முடியாது. அதேவேளை போராட்டத்தின் ஆதரவானவர்களை படுகொலை செய்வதும் நியாயமாகாது. அதேபோன்று போராட்டத்தை முன்னெடுக்கும் அமைப்பின் ஜனநாயகவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக போராடுவதாக கூறிக்கொண்டு போராட்டத்தை பலவீனப் படுத்துவதையும், தனிநபர் கொலைகளை நியாயப்படுத்த முடியாது.

இலங்கையின் தமிழ் அமைப்புகளின் ஆயுதப்போராட்ட வரலாற்றில் இயக்கமோதல்கள் இயக்கத்தினுள் மோதல் துரோகிகளுக்கு தண்டனை, சமூகவிரோதிகளுக்கு தண்டனை என்ற பேரில் செய்யப் பட்ட கொலைகள் ஏராளம். கருத்து ரீதியாக மோதவேண்டிய விடயங்களெல்லாம் ஆயுதம் கொண்டு போதப்பட்டுள்ளன விளைவு பாரிய கொலைகளாகியுள்ளன. எதிரிக்கும் மக்களுக்கும் எதிரான முரண்பாடுகளும் மக்களுக்கிடையேயான சிநேக முரண்பாடுகளும் ஒரே மாதிரியாக கையாளப்பட்டுள்ளன.

ஆயுதப் போராட்டமோ, யுத்தமோ நடைபெறுகின்றபோது ஏற்படுகின்ற உயிரிழப்புகளுக்கு நிறையவே நியாயம் கற்பிக்கப்படும் ஆனால் யுத்தமற்ற சூழ்நிலையில் ஒருவர் கொண்டிருக்கும் கருத்தை முறியடிப்பதற்காக செய்யப்படும் தனிநபர் கொலைகளை எவ்வகையிலும்

**கருத்தும் எழுத்தும் ஜனநாயகம் சார்ந்தவையாகும்**
**தியாகமும் துரோகமும் மக்களால் தீர்மானிக்கப்படல் வேண்டும்!**

நியாயப்படுத்த முடியாது.

ஒரு மாதத்திற்கு முன்பு ஈ.பி.டி.பி யின் பிரசாரச் செயலாளரான சின்ன பாலா என்றழைக்கப்படும் பாலநடராஜ ஐயர் கொழும்பில் சுட்டுக் கொல்லப்பட்டார் ஊடகவியலாளரும் எழுத்தாளருமான அவரின் கொலையை புலிகள் இயக்கமே செய்ததாக குற்றஞ்சாட்டப்படுகிறது. இதுவரை எவரும் உரிமை கோரவுமில்லை. கொலையாளிகள் கைது செய்யப்படவுமில்லை.

மூன்று மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பில் ஊடகவியலாளர் நடேசன் சுட்டுக் கொல்லப்பட்டார் அவரை இலங்கையின் பாதுகாப்பு படையினரே கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது இது தொடர்பாகவும் எவரும் கைதுசெய்யப் படவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பு ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார் அவரை ஈ.பி.டி.பி யினரேகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது. சில ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர் அவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணை நீதிமன்றில் நடக்கிறது.

இந்த மூன்று கொலைகளும் எவ்வித நிபந்தனையுமின்றி கண்டிக்கப்பட வேண்டியதாகும். அவை சமாதான சூழ்நிலையில் செய்யப் பட்டன என்பதற்காக மட்டுமன்றி மாற்றுக் கருத்தைக் கொண்டிருந்தமைக்காக அல்லவெளியிட்டு வந்ததற்காகச் செய்யப்பட்ட தனிநபர் கொலைகள் என்ற அடிப்படையிலேயே அவை நோக்கப்பட்டு கண்டிக்கப்பட வேண்டியனவாகும்.

பொதுவாக சின்னபாலாவின் கொலை கண்டிப்பவர்கள் நிமலராஜனின் கொலையையும் நடேசினின் கொலையையும் கண்டிக்க மறுக்கிறார்கள். அதன் மனித உரிமைமீறல் தன்மைக்காண மறுக்கிறார்கள். அதேபோன்று நிமலராஜனின் கொலையையும், நடேசனின் கொலையையும் கண்டிப்பவர்கள் சின்னபாலாவின் கொலையை நியாயப்படுத்த முன்நிற்கின்றார்கள். அல்லது மெளன அங்கீகாசம் வழங்குகிறார்கள். சின்னபாலாவின் கொலை துரோகத்திற்கு கிடைத்த தண்டனை என்று சொல்லுவதற்கு தயங்கவில்லை. அதேவேளை அவரின் இழப்பை ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தின் தியாகம் என்று சிலர் கூறுகின்றனர். மயில் வாகனம் நிமலராஜன் நடேசன் ஆகியோரின் உயிரிழப்புகளை தமிழ்தேசியத்திற்கான தியாகம் என்று சிலர் கூறுகின்றனர். சிலர் அவற்றை புலிகள் ஆதரவு நிலைப் பாட்டால் விளைந்த வினை என்கின்றனர்.

தமிழ்மக்களுக்காக ஆயுதம் ஏந்தியவர்களில் சிலருக்கு தியாகமாக தெரியும் கொலைகள் இன்னும் சிலருக்கு துரோகமாக் தெரிகிறது அதேபோன்று சிலருக்கு துரோகமாக தெரிவது. இன்னும் சிலருக்கு தியாகமாகத் தெரிகிறது. யார் எவ்வாறு கூறினாலும் இவ்வாறான தனிநபர் படுகொலைகள் நியாயமான எத்தவொரு போராட்டத்திற்கும் உதவக் கூடிய ஆரோக்கியமான நிகழ்வுகள் அல்ல. ஆயுதம் ஏந்தியிராத மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருந்த தமது பேனாக்கள் மூலம் அவற்றை வெளியிட்டு வந்த மூன்று ஊடகவியலாளர்கள் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நான்கு வருட இடைவெளியில் கொல்லப்பட்டு குருதியில் மிதக்கவைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் எவர் காலாயிருந்தாலும் அடிப்படையில் மக்கள் விரோதிகலோ யாவர். இவர்கள் தயவு தாட்சண்யமின்றி கண்டிக்கப்பட வேண்டியவர்களே யாவர்.

---

## ஐ.தே.க...

1ம் பக்க தொடர்ச்சி

வந்த துன்ப துயரங்களை மாற்றியமைக்க முடிந்ததா? நாட்டின் பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டுத் துறை களில் அடிப்படை மாற்றங்களைக் கொண்டு வந்து நாட்டிற்கும் மக்களுக்கும் சுபீட்சத்தை ஏற்படுத்த முடிந்ததா? இல்லை எனில் ஏன் முடியாமல் போனது என்பதே ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதாகும்.

இவ்விரு கட்சிகளும் சுதந்திரம் ஜனநாயகம் பாராளுமன்றம் என்ற பெயர்களில் ஆட்சி அதிகாரம் செலுத்தி வந்தன் மூலம் சொத்து சுகம் சுரண்டல் சொகுசு ஆடம்பர வாழ்க்கை நாடாத்தி வந்த ஒரு ஐந்து அல்லது பத்து வீதமான உயர்வர்க்க மேட்டுக் குடியினருக்காகவே செயல்பட்டு வந்திருக்கிறார்கள். அத்தகையவர்களின் விருப்பு, வெறுப்பு, தேவை.நலன்கள் என்பனவற்றையே பேணிப் பாதுகாத்து வந்துள்ளார்கள்.

அவ்வாறே அந்நிய முதலாளிகளுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் சேவகம் செய்து வந்திருக்கிறார்கள். இதனை ஒரு முறை மறைந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பராளுமன்றத்தில் திருமதி பண்டாராநாயக்காவைப் பார்த்து மிகத் தெளிவான வார்த்தைகளில் கூறியிருந்தார். ஒரு காலததில் உங்களுடைய மூதாதையரும்

எங்களுடைய மூதாதையரும் சேர்ந்து தான் இந் நாட்டை அந்நியருக்கு காட்டிக் கொடுத்து அவர்களின் கீழ் வசதி வாய்ப்புகளை அனுபவித்து வாழ்ந்து வந்தார்கள் என்றார். அன்று மட்டுமல்ல கடந்த அரை நூற்றாண்டிற்கு மேலான காலத்தின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து வந்துள்ள இரண்டு கட்சிகளின் தலைமைத்துவத்தைச் சேர்ந்தவர்களும் அந்தப் பரம்பரையில் வந்தவர்களேயாவர். அவர்களது ஆட்சி அதிகாரத் தொழிலும் இன்று வரை சொத்து சுகபோகம் அனுபவிக்கும் வர்க்கத்தினருக்காக அந்நிய ஏகாதிபத்தியத்துடன் இணைந்து நாட்டையும் மக்களையும் காட்டிக் கொடுத்து ஆட்சி நடத்துவதாகவே உள்ளது. இதற்கு மேலாக இவ்விரண்டு கட்சிகளும் நாட்டுக்காக மக்களுக்காக எதையும் கிழித்தது கிடையாது.

---

## அமெரிக்க..

1ம் பக்க தொடர்ச்சி

கண்டு பிடிக்கவே இக்கதிரியக்க ரேடார் என்று கூறியே அமெரிக்க ராணுவத்தினர் இதனைப் பொருத்தி வருகின்றனர். ஆனால் கொழும்புத் துறைமுகம் அமெரிக்க ராணுவப் பாதுகாப்பிற்குள் வந்துள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மேலும் அமெரிக்காவில் சி.ஐ.ஏ. உளவு நிறுவனம் மறுசீரமைப்பு பெற்றுள்ள நிலையில் இலங்கையில் அதன் நடவடிக்கை விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. அண்மையில் அமெரிக்கத் தூதரகம் சில நாட்கள் மூடப்பட்டு 'அந்திரஸ்' பீதி பரப்பப்பட்டது. ஆனால் அவ்வாறு எதுவும் இல்லை என்றும் புதிய பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப் பட்டதாகவே அறிய முடிந்தது.

வடக்கில் அமெரிக்க உதவிகள் வழங்கப்படுவதும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைக்கு உயர்தர மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படுவதும் தமது ராணுவ நோக்கங்களையும் செயற்பாடுகளையும் மக்களிடமிருந்து மறைக்கவே யாகும்.

ஒரு புறம் இலங்கையில் இடம் பெறும் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்தை நிராகரித்து பயங்கரவாதப் போராட்டமாகச் சித்தரித்து புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாதப்பட்டியலில் தொடர்ந்தும் வைத்திருந்து வருவது அமெரிக்கா. மறுபுறம் பேரினவாத ஆளும் முதலாளித்துவ ஆட்சிகளை ஆதரித்து ராணுவ ஆலோசனை கள் பயிற்சிகள் மட்டுமன்றி நேரடி ராணுவப் பிடிகளையும் நகர்த்தி வருவதும் அமெரிக்காவேயாகும்.

பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தால் வடக்கு கிழக்கு ஒரு புறமாகவும் தெற்கு மறுபுறமாகவும் பிளவடைந்து காணப்படும் சூழலை அமெரிக்கா தனது ஆதிக்க நிலை கொள்ளலுக்கு தூரநோக்குடன் பயன்படுத்தி வருகின்றது. இதனை நோக்கும் போது அமெரிக்கா சைப்பிரஸ் தீவில் ராணுவத் தளம் அமைக்க எடுத்துவரும் வேகமான நடவடிக்கை யூடாகவே நோக்க வேண்டியுள்ளது. சைப்பிரஸ் தீவு உள்நாட்டு யுத்தத்தின் மூலம் துருக்கி சைப்பிரஸ் எனவும் கிரேக்க சைப்பிரஸ் எனவும் இருந்து வருகிறது. அமெரிக்கா தற்போது துருக்கியின் ஆதிக்கத்தில் உள்ள சைப்பிரஸ் பகுதியில் ராணுவத் தளத்திற்கான சாதக சூழலை ஏற்படுத்தவும் அமெரிக்கா முயன்று வருவதைக் காணலாம். அல்லது முழுச் சைப்பிரஸ் தீவையும் தமதாக்கி ராணுவத் தளம் அமைத்து மத்தியதரக் கடற் பிராந்தியத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயவுகிறது.

சமாதானத்தைக் குழப்பாது அதற்கு உதவுவதாகக் கூறிக் கொண்டு இந்தியா பொருளாதா முதலீட்டில் ஆதிக்கம் பெற்று வருகிறது. உணவுப் பொருட்கள், துணிவகைகள் எண்ணெய் போன்ற வற்றில் இடம் பிடித்து வரும் இந்திய ா மேலும் தனியார் மயத்தின் ஊடாக இங்கு பொருளாதார ஆதிக்க வலிமை பெற நிற்கிறது.

அதுபோன்று யப்பானும் மேற்குலக நாடுகளும் சமாதனத் ஊடாக அபிவிருத்திக்கு உதவுவது என்ற பெயரில் தமது பாரிய கம்பெனிகள் மூலம் பொருளாதாரச் சுரண்டலை நடாத்தி வருகின்றன.

இவற்றை உள்வாங்கிய நிலையில் அமெரிக்கா தனது ராணுவ மேலாதிக்க மூலோபாயத்திற்கு அமைய செயல்படுகின்றது. தாங்களும் சமாதானததிற்கு உதவுவதாகக் கூறிக்கொண்டே இவ் ராணுவப் பிடிகளை வலுப்படுத்தி வருகின்றது.

இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையாலும் புலிகள் இயக்கத்தின் விட்டுக்கொடுக்காத போரட்டத்தாலும் அபாயத்திற்கு உள்ளாகி வருவதாக ஓலமிடும் ஜே.வி.பி. ஹெல உறுமய, பிக்கு முன்னணியினர் போன்ற பேரினவாதிகளுக்கு அமெரிக்காவின் காலடிகளுக்கு தாரைவார்க்கப்படும் இலங்கையின் சுதந்திரம் சுயாதிபத்தியம் பற்றி கவலையோ அக்கறையோ கிடையாது.

எனவே இலங்கையில் அதிகரித்து வரும் அமெரிக்க ஆதிக்கத் தலையீட்டை அனைத்து மக்களும் எதிர்த்து ராணுவத் தள ஆபாயத் திலிருந்து நாட்டைப் பாதுகாக்க முன்வருவது நாட்டையும் மக்களையும் பற்றிய அக்கறை உள்ள ஒவ்வொருவரின் கடமையாகும்.

---

## மூன்றாமுலகை

10ம் பக்க தொடர்ச்சி

முன்வைத்தவர்களுக்கு மறு பரிசீலனை கூட சாதகமானதாய் அமையவுள்ளது.

செல்வந்த நாடுகள் மிகவும் தீவிரமாக பாதுகாக்கப்பட்ட பண்ணைப் பண்டங்களை "உணர்ச்சிமிக்க பண்டங்கள்" என்று வகைப்படுத்துவதில் வெற்றி கண்டன. அதன் பொருள் தீர்வை குறைக்கும் திட்டத்தில் அவை உட்படுத்தப்படமாட்டாது. இந்த ''உணர்ச்சிமிக்க பண்டங்கள்'' சடுதியாகப் புகுத்தப்பட்டது. இது தொடர்பாக விரிவான கலந்துரையாடல் இடம்பெறவில்லை.

இதற்குமாறாக வளர்ச்சியடையும் நாடுகள் பல வருடங்களாக "விசேட பொருள்கள்" எனப்பட்டவை மேலும் தீர்வை குறைக்கப்படக் கூடாதெனக் கோரி வந்தன. ஜெனிவா மகாநாட்டில் இந்தவிடயம் சிறிது கவனத்திற் கொள்ளப்பட்ட போதும் இந்தப் பொருள்களுக்கு எவ்வாறு வரைவிலக்கணம் கூறுவதென்ற விடயம் பின்போடப்பட்டது.

மேற்காபிரிக்க நாடுகள் தமது பிரச்சினையை எடுத்துக் கூறின. குறிப்பாக அமெரிக்காவில் பருத்திச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பல நூறு கோடி டொலர்கள் மானியம் வழங்குவதால் தமது பருத்தி ஏற்றுமதிக்கு பாதகமாய் அமைவதாகத் இந்த நாடுகள் தெரிவித்தன.

விரைவாக இந்த விடயம் தீர்வு காணப்படும் என்று பெரும் பிரச்சாரம் செய்யப்பட்ட போதும் இறுதியில் இந்தவிடயம் எதிர்காலத்தில் தீர்வு காணப்படும் என்று மட்டுமே கூறப்பட்டது.

அபிவிருத்தி விடயத்தில் வளர்ச்சியடையும் நாடுகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் விசேட சலுகைகள் வழங்குவது தொடர்பாக எதுவித முடிவும் எடுக்கப்பட வில்லை.

வளர்ச்சியடையும் மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திக்கு உதவுவது என்பது பேச்சளவிலே உள்ளது. ஆனால் கைத்தொழில் உற்பத்திப் பொருள்களுக்கு தீர்வை குறைப்பு என்பது அபிவிருத்திக்கு பெருந்தடையாக இருக்கப் போகிறது. எனவே உலக வர்த்தக அமைப்பு (WTO) யாருடைய தேவைக்கானது என்பதை மூன்றாம் உலக மக்களும் நாடுகளும் நடைமுறையில் கண்டு வருகின்றன. ஏகாதிபத்திய உலகமயமாதலை முன்னெடுப்பதில் இந்த அமைப்பு பிரதான பங்கு வகிக்கிறதைக் காண முடியும்.

வெளியிடுபவர் : இ. தம்பையா, இல. 47, 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A, K. சிறில் சி. பெரேரா மாவத்தை, கொழும்பு 13.